ஜெர்மனியிலும் வன்னியன்
தொலைபேசி அட்டைகள்




'சொல்லும் மிநிடங்களை
சொன்னபடியே தருவது'
தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067 Pub.

1.50 Euro ஜேர்மனி

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 07 - 13 Juillet 2004 21

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M° La Chapelle/Gare du Nord)

# போரை போரால் எதிர்கொள்ளத் தயார் விடுதலைப்புலிகள் அறிவிப்பு

▶3

விடுதலைப் புலிகள் சமாதானத்தின் மீதான உண்மையான பற்றுதியுடன் நேர்மையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் சிறீலங்கா அரசாங்கம் கபடத்தனமான முறையில் போர் ஒன்றை திணிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் அதை எதிர் கொள்வதற்கு தாங்கள் தயாராக இருப்பதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.


## ஹிங்கிராங்கொட விகாரையில் மறைந்திருந்திருந்த கருணா குழுவினர் ஆயுதங்களுடன் கைது

(05.07.04)

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள ஹிங்கிராங்கொட காவற்துறைப் பிரிவில் இருக்கும் புகுல கிராமத்தில் உள்ள பௌத்த விகாரை ஒன்றுக்குள் மறைந்திருந்த கருணா குழுவைச் சேர்ந்த 15 பேரை சிறீலங்காக் காவற்துறையினர் இன்றுமாலை கைது செய்துள்ளனர். அவர்கள் வசமிருந்து ரி–56 ரக துப்பாக்கிகளும் கைக்குண்டுகள் உட்பட்ட பல்வேறு சாதனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறீலங்கா காவற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

▶3

தாயகத் தாகங்கள் தாங்கியே நெஞ்சினில்
சாவைச் சுமந்தவரே – உங்கள்
தேகங்கள் தீயினில் வேகின்ற நேரத்தில்
ஆரை நினைத்தீரோ ?
நாளும் விடுதலைத் தீயில் குளித்திடும்
நாயகனை நினைத்தீரோ – உங்கள்
தோளைத்தடவியே சென்றிடு என்றவன்
சோகம் தனை நினைத்தீரோ?....



Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K
உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்




உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்



**V.T.Cash & Carry**

900g யாழ்ப்பாணம் மிளகாய்தூள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord


# கருணாவுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக அரசாங்கம் இதுவரை தீர்மானம் எடுக்கவில்லை?

கருணாவுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கி வருவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து சிறீலங்காவின் அரசுத்தலைவரோ அரசோ இதுவரை முடிவெதனையும் எடுக்கவில்லையென அரசுத் தலைவரின் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கருணாவுக்கு இராணுவ புலனாய்வுப் பிரிவு பாதுகாப்பு வழங்கி வருவதுடன் அவரைப் பயன்படுத்தி கிழக்கில் குழப்பங்களை ஏற்படுத்தி அப்பிரதேசத்தில் ஸ்திரமற்றதொரு நிலையை உருவாக்க முயற்சிப்பதாக விடுதலைப் புலிகள் கடுமையாகக் குற்றம் சாட்டியுமுள்ளனர்.

இது பற்றி விசாரணை நடத்தப்படுமென அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை அவ்வாறான விசாரணைகள் எதுவும் ஆரம்பமாகவில்லை. ஆனாலும், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காவார் எனக் கருதப்படும் ஒருவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவை படையினருக்கு இருப்பதாகவும் அரசுத் தலைவரின் செயலக வட்டாரங்கள் கருதுவதாக தெரியவருகிறது.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் கருணா விவகாரத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் வற்புறுத்தி வரும் அதேநேரம், இரு தரப்புக்குமிடையே மோதல்கள் ஆரம்பித்தது முதல் அரசு தரப்பு இந்த விவகாரத்தில் தலையிடுவதில்லையென்ற கொள்கையிலேயே இருந்து வருவதாகவும் சிறீலங்கா அரசுத்தலைவரின் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது முற்று முழுதாக புலிகளின் உள்விவகாரமென அரசு கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கருணாவுக்கு அல்லது புலிகளால் உயிராபத்துள்ள ஒருவருக்கு இராணுவம் பாதுகாப்பு வழங்குகின்றதென்றால் அதில் ஒருவரது உயிரைப் பாதுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயே இராணுவம் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறின. இதேநேரம், கிழக்கின் பாதுகாப்பு நிலைமை குறித்தும் அரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கா தீவிர அக்கறை கொண்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## இரண்டு சரக்குக் கப்பல்களுக்கு சிறீங்கா கடற்படையினர் அனுமதி மறுப்பு

சிறீலங்கா கொடியுடன் சென்ற இரு சரக்குக் கப்பல்களை கொழும்புத் துறைமுகத்தினுள் நுழையவிடாது சிறீலங்கா கடற்படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர். கடந்த வியாழக்கிழமை இந்தியாவிலிருந்து சென்ற `மோர்க்ஸ் கிரிந்த' மற்றும் `சிற்றி லிவப்பூல்' கப்பல்களையே கொழும்புத் துறைமுகத்தினுள் நுழைய விடாது கடற்படையினர் தடுத்து நிறுத்தினர்.

`சர்வதேச கப்பல் மற்றும் துறைமுகப் பாதுகாப்பு' நடைமுறையை இந்தச் சரக்குக் கப்பல்கள் கைக்கொள்ளாததாலேயே இவ்விரு கப்பல்களையும் துறைமுகத்தினுள் நுழைய, அனுமதிக்கவில்லை எனக் கடற்படையினர் தெரிவிக்கின்றனர். சர்வதேசத் துறைமுகங்கள் மீது பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெறுவதைத் தடுக்கும் நோக்கில், சர்வதேச கடற்போக்குவரத்து அமைப்பை அமெரிக்கா ஆரம்பித்தது. இந்த அமைப்பே சர்வதேச கப்பல் மற்றும் துறைமுகப் பாதுகாப்பு தொடர்பான நடைமுறைக் கோவையையும் வகுத்தது. இந்த நடைமுறையைப் பின்பற்றியே சர்வதேச துறைமுகங்களுக்கு கப்பல்கள் செல்ல வேண்டுமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்தத் தவறும் துறைமுகங்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப் பட்டுவிடும்.

இந்நிலையிலேயே இந்த இரு சரக்குக் கப்பல்களும் சிறீலங்கா கொடியுடன் வந்த போதும் இவற்றைத் துறைமுகத்தினுள் அனுமதிக்கவில்லையெனக் கடற்படையினர் தெரிவித்தனர். இவ்விவகாரம் சிறீலங்காவின் துறைமுக மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளபோதிலும், இவ்விடயத்தில் முடிவெடுக்க முடியாத நிலையில் அமைச்சு அதிகாரிகளிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


**LA CHAPELLE**

**இறைச்சிக் கடை**

சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்

34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

**அதிசயம் ஆனால் உண்மை**

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

விமல் விநியோக நிலையம்
**VIMAL DISTRIBUTION**
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

**பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி!**
**உங்கள் பற்களில் பிரச்சினையா?**



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52
என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.



உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995

**EUROCONSULT SARL**
**TRADUCTIONS**

**மொழி பெயர்ப்பு நிலையம்**

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

**போட்டோ பாலா**

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

**Errances Travels**



55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# மட்டக்களப்பில் இருவேறு சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழப்பு, மூவர் காயம்

(05.07.2004)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று காலையில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது மறைந்திருந்து மேற்கொள்ளப்பட்ட இரு வேறு சூட்டுச் சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்தும், மற்றும் மூவர் காயங்களுக்குள்ளாகியும் உள்ளனர்.

விடுதலைப் புலிகளுடைய மட்டக்களப்பு மாவட்ட நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் மற்றும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் மீது இன்று காலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று காலை 9.20 மணியளவில் மட்டக்களப்பு அரசடிச் சந்திப் பகுதியூடாக அரசடி அலுவலகத்தை நோக்கி வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதி மற்றும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் நிலான் ஆகியோர் மீதே மறைந்திருந்து இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயங்களுக்குள்ளான இருவரும் உடனடியாகவே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதி ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவருடைய நுரையீரல் பகுதியில் கடுமையான காயம் ஏற்பட்டிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில், மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியிலும் இன்று காலையில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் மீது மறைந்திருந்து துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வந்தாறுமூலை தேவாலயம் சந்திப்பகுதியில் இடம்பெற்ற இந்த சூட்டுச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முறிஞ்சன் என்கின்ற போராளி வீரச்சாவடைந்திருப்பதாகவும், ஈஸ்வர் என்பவர் காயங்களுக்குள்ளாகியிருப்பதாகவும் மட்டக்களப்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குள்ளாகி வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுடைய மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதியே, மட்டக்களப்பில் பதற்ற நிலையைத் தடுப்பது தொடர்பாக, மட்டக்களப்பு நகரில் இறுதியாக இடம்பெற்ற படையினருடனான சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் சார்பாக கலந்து கொண்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## போரை போரால்......

(01ம் பக்க தொடர்ச்சி)

இன்று மட்டக்களப்பில் நடைபெற்ற இரு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறையினர் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில், இன்று யூலை 5ம் திகதி காலை 9.15 மணியளவில் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியாகிய அரசடிச் சந்தியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.சேனாதிராஜாவும், திரு.நிலானும் இனந்தெரியாத நபர்களால் கைத் துப்பாக்கியால் சுடப்பட்டனர். இவர்கள் இருவரும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் இன்று காலை 10.00 மணிக்கு வந்தாறுமூலை கத்தோலிக்க தேவாலயத்திற்கு முன் இன்னுமொரு சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் போராளி முறிஞ்சன் வீரச்சாவடைந்துள்ளார். போராளி ரொசான் காயப்பட்டுள்ளார் இவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் சித்தாண்டியிலிருந்து செங்கலடி நோக்கி வந்து கொண்டிருக்கிருக்கும் பொழுது பின்பக்கமாக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்கள் மேல் கைத்துப்பாக்கியால் சுட்டனர். தற்பொழுது போராளி ரொசான் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இன்று இடம்பெற்ற இவ்விரு சம்பவங்களும் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் நடைபெற்றுள்ளது. ஏற்கனவே இவ்விதமான படுகொலைகள் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் இடம்பெற்றுள்ளன.

நாங்கள் பல சந்தர்ப்பங்களில் சிறிலங்கா பாதுகாப்புப் படையினருடன் தொலைபேசி மூலமும் பேச்சு வார்த்தைகளின் போதும் படுகொலைகள் மிரட்டல்கள் நடைபெறாமல் தடுப்பது சிறிலங்கா பாதுகாப்பு படைகளின் கைகளிலேயே தங்கியுள்ளது ஏன வலியுறுத்திள்ளோம் ஆனால் இவ்வறிவித்தலை சிறிலங்கா பாதுகாப்பு படையினர் கரிசனையில் எடுத்துக் கொள்ளவில்லையெனத் தெரிகிறது.

சிறிலங்கா பாதுகாப்பு படையினர் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கையாக இவற்றை மேற்கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்தை முன்னெடுக்க வழிவகை செய்த வண்ணம் இருக்கின்றனர் என்பது இச்சம்பவங்களில் இருந்து புலனாகின்றது. இச்சம்பவங்களை பாரிய யுத்த நிறுத்த மீறல்களென விடுதலைப் புலிகள் கருதுவதோடு இதை வன்மையாக கண்டிக்கின்றனர்.

நாங்கள் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு சமாதான ஒப்பந்தத்தை மதித்து பேணிக் காப்போம் என்று மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகின்றோம். அதேவேளை, எம்மீது ஒரு யுத்தம் திணிக்கப்பட்டால் அதை நாம் எதிர்கொள்ளத் தயார் என்பதையும் ஆணித்தரமாகக் கூறுகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈ.பி.டி.பி.யின் குற்றச்சாட்டுக்கு புலிகள் மறுப்பு

யாழ்ப்பாணத்தில் தமது உறுப்பினர்கள் இருவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் வாள்வெட்டுக்கு இலக்கானதாக ஈ.பி.டி.பி முன்வைத்த குற்றச்சாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

ஈ.பி.டி.பி.யின் உறுப்பினர்களான றீகன் எனப்படும் துரைராசா இளங்கோ, அப்பாஸ் எனப்படும் ஆறுமுகன் வரதராஜா ஆகியோர் யாழப்பாணம் திருநகரிலுள்ள சொலமன் வீதியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஈஸ்வரன் எனப்படும் உறுப்பினரின் தலைமையிலான குழுவினரால் வாள்வெட்டுக்கு இலக்கானதாக ஈ.பி.டி.பி.யின் ஊடகம் ஒன்றில் அண்மையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

ஈ.பி.டி.பி.யின் இவ்விரண்டு உறுப்பினரகளும் பிரதேச வாசிகள் மீது மோட்டார் உந்துருளியால் மோதியதாகவும், இதற்கு நியாயம் கேட்கச் சென்ற பொதுமக்களை துப்பாக்கி மற்றும் கத்தி முதலான ஆயுதங்களால் அவர்கள் மிரட்டியதாகவும் தெரிவித்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவு, இதன்காரணமாக ஆத்திரமுற்ற பொதுமக்களே அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் இடம்பெற்ற வேளை தமது உறுப்பினரான ஈஸ்வரன் விளையாட்டுப் போட்டி ஒன்றில் கலந்து கொண்டிருந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை மேலும் தெரிவித்துளளது.

## சச்சி மாஸ்டரே மாறன் ஆக நடிப்பு சிறையிலிருக்கும் கருணாவின் ஆளை பயன்படுத்தி எதிர்ப்புப் பிரசாரம்

### இராணுவப் புலனாய்வுப் பிரிவு மீது விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் பிடிபட்டு தற்போது மட்டக்களப்புச் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் கருணாவின் ஆள் ஒருவரை எதிர்ப்புப் பிரசாரத்துக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவு பயன்படுத்தி வருகின்றது என்று விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர் ஒருவர் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

சிறையில் இருக்கும் கருணாவின் ஆளுக்குக் கைத்தொலைபேசி ஒன்றை வழங்கி அதன்மூலம் தாம் ஆதரவு அளிக்கும் தமிழ் வார இதழ் ஒன்றுக்கும், வானொலி நிலையம் ஒன்றுக்கும் விடுதலைப் புலி எதிர்ப்புப் பிரசாரப் பேட்டிகளை வழங்க இராணுவப் புலனாய்வுத் துறை ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ளது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாறன் என்ற பெயரில் கருணா அணிப் பேச்சாளராக வேடமிட்டு வானொலிப் பேட்டிகள், செய்திகளைக் கொடுப்பவர் உண்மையில் தற் போது மட்டக்களப்புச் சிறையில் விளக்கமறி யலில் இருக்கும் சச்சி மாஸ்டர் (கணபதிப் பிள்ளை மகேந்திரன்)தான் என்று கூறும் அவர், அதை உறுதிப்படுத்தும் தெளிவான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

`கருணாவின் சகாக்கள் அனைவருமே அவரை விட்டு ஓடிவிட்டனர். இந்நிலையில் சிறைக்கைதி ஒருவரை போலி வேடத்தில் கருணாவின் பேச்சாளராக நடிக்க வைப்பதைத் தவிர இராணுவப் புலனாய்வுப்பிரிவினருக்கு வேறு வழியே இருக்கவில்லை - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

`சிறீலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளரினதும், உளவியல் நட வடிக்கைப் பிரிவு பணிப்பாளரினதும் முழு ஆதரவோடு நடத்தப்படும் வானொலி நிலையம் ஒன்றுக்குச் சச்சிமாஸ்ரர் நேரடிப் பேட்டிகளை வழங்கிவருகின்றார். இதற்காக விளக்கமறியலில் இருக்கும் சச்சிமாஸ்ரருக்கு தொலைபேசி வசதியை வழங்குவதற்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் மட்டக்களப்புச் சிறை அதிகாரிகள் பலவந்தப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்தத் தகவல்கள் குறித்துக் கருத்து வெளியிட்ட புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட விசேட தளபதி கேணல் ரமேக்ஷ், இந்த நிலைமையை நாம் மிக உன்னிப்பாகவும் கவ னமாகவும் பாசீலித்து வருகின்றோம். பதில் நடவடிக்கை எடுக்காமல் நாம் பொறுமைகாத்து, பொறுப்புணர்வுடன் நடந்து வருவதை இராணுவம் தவறாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் புத்திசாலித்தனமானது என்றார்.

மேற்படி சச்சி மாஸ்ரர் விடுதலைப் புலிகள் அமைப்பில் முன்னர் இருந்தவர். கஞ்சிக் குடிச்சாறு காட்டுப்பகுதியிலிருந்து புலிகளின் முகாம்களுக்கு விநியோகம் வழங்கவென அவரிடம் பொறுப்புக்கொடுக்கப்பட்ட நிதியை சூறை யாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 2002 ஆம் ஆண்டு புலிகளின் அம்பாறை

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

## ஹிங்கிராங்கொட....

(01ம் பக்க தொடர்ச்சி)

இந்த விகாரையின் தலைமைப் பிக்கு இந்த நபர்களை ஜாதிக ஹெல உறுமயவின் தலைமைப் பீடமே தன்னிடம் அனுப்பி வைத்ததாகவும் அவர்களிடம் ஆயுதங்கள் இருப்பது தனக்கு தெரியாதென்றும் காவற்துறையினருக்கு தெரிவித்துள்ளார். இந்த நபர்கள் அம்பாறை மாவட்டத்தில் குழப்பங்களையும் இனமோதல்களையும் தூண்டிவிடுவதற்குரிய திட்டங்களை வைத்திருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த நபர்கள் மறைந்திருந்த விகாரையில் பீடாதிபதியும் ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# விளங்காத பெயரை குழந்தைக்கு சூட்டுவது இனத்தின் அடையாளத்தை துடைத்தெறியும் நடவடிக்கை

**- புதுவை இரத்தினதுரை -**

தமிழுக்காகப் போராடுகின்றோம். 17000க்கும் அதிகமான மாவீரர்களைக் கொடுத்துள்ளோம். அம்மாவீரர்கள் வெறும் மண்மேட்டுக்காகத் தங்களைத் தியாகம் செய்யவில்லை. ஆனால், நாம் தமிழுக்காக வாழ்கின்றோமா? இவ்வாறு விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, குழந்தைகளுக்கு தூய தமிழ்ப் பெயரைச் சூட்டிய நிகழ்விற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்.

கனடாவில் இயங்கும் `சிலம்பம்' அமைப்பின் தாயகக் கிளை இந்நிகழ்வை திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிறு மாலை நடத்தியது. திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட சுமார் 65 பெற்றோர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபா பணம் நிகழ்வின் போது வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் `சிலம்பம்' அமைப்பின் திருமலை இணைப்பாளர் வி. குணபாலன் வரவேற்புரை நிகழ்த்தினார்.


தமிழின் வாழ்வு தமிழர் தமிழராக வாழ்வதில் தான் தங்கியுள்ளது. இன்று தமிழனின் கனவு ஹவாய், நயகரா என்று நோக்கி நீள்கிறது. திருமலையைத் தலைநகரம் என்று வரித்துள்ளோம். தலைநகருக்குச் சோதனைகள் வந்துள்ளன. திருமலையை சமாதான நகராக்கி சிங்கள மேலாதிக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது. திருமலை மக்களின் வாழ்வு மட்டிக்களிப் பகுதிக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எமது முதுகுக்குப் பின்னாலே திருமலைக்குக் குழி பறிக்கும் வேலை நடக்கின்றது. தமிழீழம் எப்படி அமைய வேண்டும்? சிலம்பம் அமைப்பு அதன் தாயகம் நோக்கிய பயணத்திட்டத்தில் கனவு கண்டுள்ளது. நாம் எவருமே அத்திசையில் பயணிக்கவில்லை என்று கூறினார் புதுவை இரத்தினதுரை.


நாகரிகத்தின் உச்சிக்குச் சென்று விளங்காத பெயர்களை எமது குழந்தைகளுக்குச் சூட்ட ஆரம்பித்துள்ளோம். இனத்தின் அடையாளத்தைத் துடைத்தெறியும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். அடையாளமில்லாத இனமாக, முகவரி இல்லாத இனமாக, முகமே அழிந்து போன இனமாக மாறிக் கொண்டிருக்கின்றோம். அடையாளத்தை இழந்து போன அலிகளாகி விட்டோம். இதன் பக்க விளைவுகளை விரைவில் நாம் சந்திப்போம் என்றும் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.


போராட்டம் வெற்றி பெறும், நாடு கிடைக்கும், தலைநகரில் தலைவர் கொடியேற்றுவார் என்றெல்லாம் நினைத்துக் கொண்டு இருக்க, ஒரு புறத்தில் தமிழினம் தனது அடையாளத்தை இழந்து வருகிறது. நாங்கள் எங்களை நாங்களாக நிறுவிக் கொண்டு முன்னேற வேண்டும். மாற்றங்களை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால், இன அடையாளத்தை முழுவதுமாக அழித்து அப்புறப்படுத்துவதை அனுமதிக்க முடியாது என்றும் கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார். நாம் பொய்யாக வாழ்வதையே வாழ்வாகக் கருதுகின்றோம். நாம் வெறும் வெளியில் கைவீசிக் கொண்டிருக்கின்றோம். மாற்றத்தை விரும்பாதவர்களல்லர் நாம். மாற்றம் சரியானதாக அமைய வேண்டும். அவை பெருமைக்குரியதாகக் கருதப்பட வேண்டும். இன்று தமிழனை அவனுக்கு இடப்பட்ட பெயர் மூலம் தமிழன் என்று அடையாளங் காண முடியாத நிலை. தந்தை, தாய்க்கே அர்த்தம் தெரியாத பெயர்கள் குழந்தைகளுக்குச் சூட்டப்படுகின்றன. தூய தமிழ்ப்பெயரை குழந்தைகளுக்குச் சூட்ட முடியாவிட்டால் தமிழராகிய பெயர்களை யாவது சூட்டுங்கள் என்றும் கவிஞர் புதுவை இரத்தினதுரை வேண்டுகோள் விடுத்தார்.

# கருணா குழுவைச் சேர்ந்த ஏழு பேர் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளால் கைது

இராணுவத்தினருடனும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடனும் சேர்ந்து இயங்கி வந்த, கருணா தொலைபேசிகள் விடுதலைப் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடனும், படைத்தரப்பினருடனும் இணைந்து கருணாவின் தேசவிரோத நடவடிக்கைகளுடன் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. விசேட அதிரடிப்படையினருக்கும், பொலிஸ் பிரிவினருக்கும் தெரியாத வண்ணம் இவர்கள் செயற்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.







குழுவைச் சேர்ந்த ஏழு பேரைத் விடுதலைப் புலிகள் கைது செய்துள்ளனர். இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறைப் பிரிவினர் கடந்த செவ்வாய்க்கிழமை விடுத்த அறிக்கையில், சிறீலங்காப் படையினருடனும், சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடனும் இயங்கி வந்த கருணா குழுவினர் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான திக்கோடை, தும்பங்கேணிப் பகுதியில் ஒரு குழுவாகவும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான களுவாஞ்சிக்குடி, களுதாவளை, கல்லாறு ஆகிய பகுதிகளில் மற்றொரு குழுவாகவும் இவர்கள் இயங்கி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்களிடமிருந்த கைத்துப்பாக்கிகள், எறிகுண்டுகள், தொலைத் தொடர்புக் கருவிகள், கையடக்கத்

# கனேடிய தேர்தலில் லிபரல் கட்சி மீண்டும் வெற்றி

கனடாவில் கடந்த 28ம் திகதி நடைபெற்ற 34வது நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் லிபரல் கட்சி 135 ஆசனங்களையும், பழைமைவாத கட்சி 93 ஆசனங்களையும், கியூபெக்குவா கட்சி 55 ஆசனங்களையும், புதிய மக்களாட்சி கட்சி 24 ஆசனங்களையும், சுயேச்சைக் கட்சி 1 ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன. இத் தேர்தலில், தமிழ் மக்கள் செறிந்து .வாழும் ஒன்ராரியோ மாநிலத்தின் மேன்டோன்வலி தொகுதியில் புதிய மக்களாட்சிக் கட்சியின் சார்பில் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து சென்று அங்கு வாழும் டேவிட் தோமஸ் போட்டியிட்டார். எனினும் அவரால் இம்முறை வெற்றி பெற முடியவில்லை.

பல்லினச் சமூகங்கள் மிக அதிகமாக வாழும் கனடிய மண்ணில், திங்கட்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தல் மிகவும் அதிகமாக புலம் பெயர் வாழ் மக்களின் கவனத்தை ஈர்த்திருந்தது. இதற்கான காரணம் குடிவரவாளர்கள் பெருமளவில் வருடாவருடம் வந்தடையும் கனடாவில் குடிவரவாளர்களின் வருகையையும் வசதிகளையும் கட்டுப்படுத்தக் கங்கணம் கட்டி நின்ற பழைமைவாதக் கட்சி (கொன்சவ்வேர்ட்டிவ் கட்சி) வெற்றிபெறக் கூடிய வாய்ப்பொன்றை உருவாக்கியிருந்ததேயாகும். மிகவும் பலமான அணியாக, அமோக வெற்றிவாய்ப்பை எதிர்பார்த்து தேர்தல் அறிவிப்பை விடுத்த ஆளும் கட்சியின் தலைவரும் கனடியப் பிரதம மந்திரியுமான போல் மார்ட்டீன், தேர்தல் அறிவித்தலை விடுத்த சில நாட்களிலேயே பலத்த குற்றச்சாட்டுகளில் சிக்கிக் கொண்டு, லிபரல் கட்சியின் செல்வாக்கு சரிவதைக் கண்டு எதுவும் செய்யமுடியாது திண்டாடினார்.

வரவு, செலவுத் திட்டம் சரியாக அமைக்கப்படவில்லை, தனக்குச் சொந்தமான பல கப்பல்களை கனடாவுக்கு வெளியே வேற்று நாட்டுக் கொடியின் கீழ் செயற்பட அனுமதித்ததன் மூலம் கனடிய நாட்டுக்கு வரி கட்டாமல் தவிர்த்தமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் அடுத்தடுத்து போல் மார்ட்டீன் மீது சுமத்தப்பட்டதால், லிபரல் கட்சியின் செல்வாக்கு சடுதியாகச் சரிந்து, கொன்சவ்வேர்ட்டிவ் கட்சியின் செல்வாக்கு உயர ஆரம்பித்தது. கொன்சவ்வேர்ட்டிவ் கட்சி ஆட்சியமைக்க வாய்ப்பாகி விடலாம் என்பதால், பல நாடுகளிலும் இருந்து வந்து குடியேறிய புலம்பெயர் மக்கள் தங்களது ஆதரவை முழுமையாக வழங்கியதன் மூலம் லிபரல் கட்சியின் தோல்வியை இறுதி நேரத்தில் தவிர்க்க உதவியுள்ளார்கள்.

இப்போது பெற்றுள்ள வெற்றி மூலம் லிபரல் கட்சி தொடர்ந்து நான்கு தடவைகள் கனடாவை ஆட்சி செய்வதற்கான ஆணையை மக்களிடமிருந்து பெற்றுள்ளது. கடந்த மூன்று தேர்தல்களிலும் லிபரல் கட்சியே பெரும்பான்மை வெற்றி பெற்று முன்னாள் பிரதமர் ஜீன் கிரைச்சியன் தலைமையில் ஆட்சி செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் **ஆசிரியர் லிங்கம்** அவர்களின் நெறியாள்கையில் பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
**இடம்: Breitenreinplatz -27, Bern**

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
**இடம்: Eigerplatz, Bern**

**தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33**

ஈழமுரசு
ஐரோப்பா
POORALAM WEEKLY

# உன்னதமானவர்களின் உயிர்ப்புநாள்

இன்று கரும்புலிகள் நாள். தமிழீழ மண்ணினதும் மக்களினதும் விடுதலைக்காக தங்கள் உயிரையே தற்கொடையாக வழங்கிய உன்னதமானவர்களின் உயிர்ப்பு நாள். உலக வல்லரசுகளின் ஆதரவுடன், ஆயுத - படைபல பலத்துடனும் தொழில்நுட்ப வசதிகளுடனும் மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள பேரினவாதத்துக்கு சவாலாக எழுந்தவர்கள் இந்தக் கரும்புலிகள். தமிழீழ தேசத்தின் மீட்புக்காக தம்மை அழித்து மண்ணையும் மக்களையும் வாழவைத்த, உயர்ந்தவர்கள். இவர்களின் தியாகம் வரையறுக்க முடியாதது.

பெரும் பலத்துடன் தமிழர் மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள இராணுவத்தினருக்கு குறைந்த இழப்புக்களுடன் பேரழிவை ஏற்படுத்தி, போராட்டத்தை வெற்றிகரமாக முன்நகர்த்துவதற்காக தமிழீழ தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட கரும்புலிகள், உலகே வியக்கின்ற, எதிரிகளால் இன்றுவரை வெற்றிகொள்ள முடியாத உயிர் ஆயுதங்களாக இருக்கின்றார்கள். 1987ம் ஆண்டு யூலை 5ம் திகதி கப்டன் மில்லர் தொடங்கி வைத்த இந்த வரலாற்று பதிவில் இதுவரை 261 கரும்புலிகள் தங்கள் உயிர்களை ஈகம் செய்து இன்றைய சமாதானத்தின் அத்திரவாரங்களாகி இருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் படைபலத்துடன் மோதி வெற்றிகொள்ள முடியாத சிங்களப் படையும், சிங்கள இனவாதமும் இப்போது விடுதலைப் புலிகளை கூறுபோட்டு வெற்றிகொள்ள முனைகின்றன. விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட கருணாவை முன்னிறுத்தி மட்டக்களப்பு பகுதிகளில் குழப்பங்களை ஏற்படுத்தி சமாதான உடன்படிக்கையில் பாரிய விரிசலை அவை ஏற்படுத்திவருகின்றது. சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் அக்கறையின்றி, சமாதான உடன்படிக்கைக்கு எதிரான செயற்பாடுகளில் இறங்கியுள்ளன. முரண்பாடுகளை தோற்றுவிக்கக்கூடிய நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு எதிர்காலத்தில் மீண்டும் ஒரு போர் ஏற்படக்கூடிய அபாயத்தை அவை உருவாக்கி வருகின்றன.

இந்நிலையில், கரும்புலிகளின் தியாகம் மேலும் தொடராமல் தடுக்கக்கூடிய வல்லமையும் பொறுப்பும் புலம்பெயர் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. நவீன தொழில்நுட்ப பலத்துடன் நிற்கின்ற சிங்கள படைபலத்தின் வளர்ச்சியை, விடுதலைப் புலிகள் வெற்றிகொள்ளும்போதே, இந்தக் கரும்புலிகளின் தேவை தவிர்க்கப்படும். அதற்காக புலம்பெயர் மக்கள் கடுமையாக உழைக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் பலத்தை மேலும் அதிகரிக்க வேண்டும். இதுவே மிகவும் உயர்ந்த நோக்கத்தோடு தங்கள் உயிர்களை அர்ப்பணித்த அந்த தற்கொடையாளர்களின் தினத்தில் நாம் எடுக்கின்ற உறுதியாக இருக்கவேண்டும்.




# போர் நிறுத்த ஒப்பந்தம் கருணா விவகாரத்தால் சீர்குலைந்துள்ளது

கடந்த 30ம் திகதி நோர்வேயின் விசேட தூதுவர் திரு. எரிக்சொல்ஹெய்ம் கிளிநொச்சிக்கு சென்று விடுதலைப் புலிகளை சந்தித்தார். ஜனாதிபதி சந்திரிக்காவை சந்தித்து அவரது விசேட தகவல் ஒன்றைப் பெற்றுக் கொண்டு அதனை விடுதலைப் புலிகளிடம் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு எதுவும் நிகழவில்லை, வெறுங்கையுடனேயே அவர் புலிகளைச் சந்தித்தார்.

ஜனாதிபதி விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக முதலில் பேச சம்மதம் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் அவரின் அரசுக்கு பலம் போதாமல் இருந்தாலும் இனப்பிரச்சனை தொடர்பாக சில முடிவுகளை தனக்கிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் போகிறார் என்றெல்லாம் கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் எதிர்வு கூறி எழுதியிருந்தன. எனவே ஏதோ ஒரு முக்கியமான செய்தி ஜனாதிபதியால் நோர்வே விசேட தூதுவர் மூலமாக புலிகளுக்கு அனுப்பப்படவுள்ளது என பலர் எதிர்பார்த்திருக்க ஜனாதிபதியை சந்திக்காமலேயே அல்லது சந்திக்க வாய்ப்பு கிடைக்காமலேயே, நோர்வே தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் கிளிநொச்சிக்குச் சென்று புலிகளைச் சந்தித்தார்.

சந்திப்பு நிறைவில் ஊடகவியலாளரைச் சந்தித்த சூல்கெஹய்ம் உதட்டைப் பிதுக்கியவாறு 'சமாதானம் செய்வது ஒரு கடினமான பணி' என்றார். சமாதான அனுசரணையாளர் என்ற வகையில் இந்தக் கடினமானப் பணியினைத் தொடர முயன்றுகொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உண்மையில் சந்திரிக்கா அரசு ஆட்சிக்கு வந்தவுடன் சமாதானத்தின் நிலை எதை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது என்பது நோர்வே அனுசரணையாளர்களுக்கும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும் இன்னும் வன்னிக்கு வந்து போகும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் நன்றாகத் தெரியும். சமாதானம் தொய்வடைந்தாலும் யுத்த நிறுத்தம் பாதிப்படையக் கூடாது என்பதில் இவர்களுக்கு அதிக அக்கறையுள்ளது. சமாதான முன்னெடுப்பு தேய்ந்து போகிற நிலையில் விடுதலைப் புலிகள் எவ்வளவு காலம் அல்லது, எவ்வளவு தூரம் பொறுமை காப்பார்கள் என்பதை அறிந்து கொள்ளும் வகையிலேயே சமாதான அனுசரணையாளர்களது வன்னி வருகை அமைந்து வருகிறது. அதாவது விடுதலைப் புலிகளை நாடிபிடித்துப் பார்க்கும் வகையிலான விஜயங்கள்.

விடுதலைப் புலிகளும் நோர்வே சமாதான தூதுக்குழுவாக இருந்தாலும் சரி, போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவாக இருந்தாலும் சரி, வேறு எந்த சமாதானத்தின் மேல் நாட்டம் கொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளானாலும் சரி தெளிவாகவும் உறுதியாகவும் தங்களது நிலைப்பாட்டை தொடர்ந்து வலியுறுத்திய வண்ணமாகவே உள்ளனர். சமீப காலமாக சற்று இறுக்கமாகவும் அழுத்தமாகவும் விடுதலைப் புலிகள் தங்களது நிலைப்பாட்டை வலியுறுத்தி வருகின்றனர். கடந்த 28ம் திகதி போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் திரு.டொன்புறா ஹொவ்டே விடுதலை புலிகளைச் சந்தித்த போது கிழக்கின் நிலைமைகள் குறித்தே அதிகம் பேசப்பட்டது. விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட கருணாவை பாதுகாத்து வைத்துக்கொண்டு சிறீலங்காப் படைத்துறையால் கிழக்கில் மேற்கொள்ளப்படுகின்ற குற்றச் செயல்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதில் புலிகளின் தலைமை உறுதியாக இருக்கின்றது. கருணாவிடமிருந்து தப்பி வந்த நான்கு பெண் போராளிகளின் வாக்குமூலங்கள் ஆதாரபூர்வமாக பல விடயங்களை உறுதிப்படுத்தியுள்ளன. இதனை அன்றைய தினம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு புலிகள் விபரமாக எடுத்துரைத்துள்ளனர். 30ம் திகதி புலிகளை சந்தித்த எரிக் சூல்ஹெய்மிடமும் இதே விடயங்கள் தான் பேசப்பட்டன.

சமாதானத்தின் அடுத்த கட்டம் எமது கைகளில் இல்லை. இது அரச படைகளினது கைகளிலும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினது கைகளிலும், சமாதான அனுசரணையாளர்களது கைகளிலேயுமே உள்ளது என விடுதலைப் புலிகள் அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்செல்வன் அழுத்தம் திருத்தமாக கூறியுள்ளார். இப்போது சமாதான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாகவிருப்பது, கருணா விவகாரமே என்பதை நோர்வே குழுவினர் அரசாங்கத்திற்கு விளக்கியும் அரசாங்கம் தமது தவறினை முற்றாகவே மூடிமறைக்க முயல்கிறது. கருணாவை சிறீலங்காப் படைத்துறையினரே பாதுகாத்து வருகின்றனர் என்கிற புலிகளின் குற்றச்சாட்டை முற்றாகவே அரசு தலைவர் சந்திரிகா மறுத்திருக்கின்றார். புதிதாக பதவியேற்றுள்ள இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொடவும் இதனை மறுத்துள்ளதோடு கருணா எங்கிருக்கிறார் என்றே தனக்குத் தெரியாதென்பது கூறுகிறார். முன்னதாக ஓய்வு பெறும் தறுவாயில் கேணல் பலகல்லவும் பாதுகாப்புதுறைச் செயலர் சிறில்கேரத்தும் கூட இவ்வாறே கூறியிருந்தனர்.

ஆனால், இந்த அரசாங்கத்தின் அங்கம் வகிக்கும் ஒரு அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா தான் கருணாவுடன் தொடர்பு கொண்டதை ஒப்புக்கொண்டுள்ளார். அமைச்சர் மங்கள சமரவீர படையினர் சிலரின் உதவியோடு கருணா இருப்பதாக கூறியுள்ளார். இவர்கள் உண்மைகளை ஒரு நழுவல் போக்கில் சில மறைப்புக்களோடு கூறியுள்ள போதிலும் அரசுத் தலைவரும், இராணுவத் தளபதியும் பச்சையாகவே உண்மைகளை மறைத்துரைக்கின்றனர். இவர்களின் இந்தப் பொய்கள் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வினதும் அதற்கான சமாதானம் முன்னெடுப்பினதும் விடயங்களில் எவ்வளவு தூரம் உண்மையாகவே இயங்குகின்றார்கள் என்பதை தோலுரித்துக்காட்டுகின்றது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இராணுவத்தோடு இணைந்து இயங்கும் தமிழ் குழுக்கள் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்து முப்பது நாட்களுக்குள் ஆயுதமற்றவர்களாக்கப்பட வேண்டும் எனவும் இந்த அணிகளில் ஏற்கனவே உள்ளவர்கள் அரசின் ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டுக்குள்ளும் ஒழுங்கமைப்பிற்குள்ளும் இணையும் வாய்ப்பை அளித்து வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் பணிபுரிய வகை செய்ய வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் கருணாவைக் கையாண்ட விவகாரத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் முற்றாகவே மீறப்பட்டுள்ளது.

கருணாவை இராணுவம் பாதுகாக்கவில்லை என அரசாங்கம் மறுத்துரைக்கின்ற போதிலும், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காவார் எனக்கருதப்படும் ஒருவருக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டிய தேவை படையினருக்கு இருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் கருதுவதாகவும் சில செய்திகள் கூறுகின்றன. ஒரு வகையில் அது சரியென எடுத்துக் கொண்டாலும் கருணாவைப் பயன்படுத்தி கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகளையும், குழப்பங்களையும் எவ்வாறு நியாயப்படுத்துவது?

கருணாவிடமிருந்து தப்பி வந்த நான்கு பெண் போராளிகளும் புலிகளிடம் பிடிபட்ட கருணாவின் ஆட்களும் பல உண்மைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், புலிகள், அரசாங்கத்தை வெளிப்படையாக குற்றஞ்சாட்ட ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சந்திரிகா அரசு உண்மைகளை மறைத்துக் கொண்டிருக்க முடியாது. சமாதானத்தின் அடுத்த கட்டநகர்வு எவ்வாறிருக்கப்போகின்றது என்கிற எதிர்பார்ப்பைவிட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் நிலைமை அடுத்து வரும் நாட்களில் எவ்வாறிருக்கப் போகின்றது என்பதுதான் முக்கியமான கேள்வியாக அமைந்துள்ளது. கருணா விவகாரம் ஒரு முடிவுக்கு வரும் வரை சமாதானப் பேச்சுக்களுக்கு இடமே இல்லை. விடுதலைப்புலிகள் இதில் உறுதியாகவே உள்ளனர்.

- விவேக்



## புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சியில்

# அரசும் எதிர்க்கட்சியும் ஒரே அணியில்!

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற விடயத்தில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும் சந்திரிக்கா தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் வெவ்வேறான அணுகுமுறைகளைக் கையாண்டு வருகின்ற போதிலும், விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும் என்கிற கொள்கையில் இரு கட்சிகளும் ஒரே அணுகுமுறையினைத் தான் கடைப்பிடிக்கின்றன. சமீப கால நிகழ்வுகள் இதனை நிரூபிக்கின்றன.

கடந்த வாரத்தில் இலங்கை அரசியலில் சில பரபரப்பான சம்பவங்கள் நடந்துள்ளன. மேலும் அவை தொடரவும் வாய்ப்புக்கள் உள்ளன. மட்டக்களப்பிலிருந்து கருணாவுடன் தப்பியோடிய குழுவினரில் நான்கு பெண் போராளிகள் கடந்த 18ம் திகதி மீண்டும் மட்டக்களப்பிற்கு வந்து புலிகளுடன் இணைந்து கொண்டதும் கருணா குறித்த பல விடயங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

கருணாவை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான அலிசாகிர் மௌலானா பாதுகாப்பளித்து கொழும்பிற்கு அழைத்துச் சென்றமை, ஈ.பி.டி.பி கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா கருணாவுடன் கொண்டிருந்த தொடர்புகள், சிறீலங்கா புலனாய்வுப் படைத்துறையினர் கருணாவை பாதுகாத்து வருவது மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட கருணாவிற்கும் அவரது குடும்பத்திற்கும் இலண்டன் செல்ல உதவியதாக ஆளும் கட்சியின் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருப்பது போன்ற விடயங்கள் வெளியாகியுள்ளன.

இதில் அலிசாகிர் மௌலானா, தான் கருணாவை கொழும்பிற்கு அழைத்துச் சென்றதை வேறு வழியின்றி ஒப்புக்கொண்டுள்ளார். கருணாவை வெளியேற்ற உதவுமாறு விடுதலைப் புலிகளே தம்மைக் கேட்டுக் கொண்டதாகவும் கூறியுள்ள அவர், தனது கட்சியின் நிர்ப்பந்தம் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார். டக்ளஸ் தேவானந்தாவும் கருணாவுடன் தான் தொடர்பு கொண்டதை ஒப்புக்கொண்டுள்ளதோடு கருணா சனநாயக நீரோட்டத்துடன் கலந்து கொள்ள உதவும் நோக்கத்துடனேயே இந்தத் தொடர்புகளை கொண்டிருந்ததாகவும் தெரிவித்திருக்கிறார்.


ஆனால் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தன்மீதான அமைச்சர் மங்கள சமரவீரவின் குற்றச்சாட்டை முற்றாக மறுதலித்துள்ளார். கருணாவிற்கு எந்த வகையிலேயும் தாம் உதவ முயற்சிக்கவில்லை என அவர் கூறியுள்ளார். ஆனால் சிறீலங்கா படைத்துறை, கருணாவை பாதுகாத்து வருகின்றதான உண்மையை மறுத்திருப்பது தான் முழுப்பூசனிக்காயை சோற்றுக்குள் மறைத்த கதையாகவுள்ளது. சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்கேரத், தமக்கு இது குறித்த எதுவுமே தெரியாது எனக் கூறியுள்ளார். ஆனால், அமைச்சர் மங்கள சமரவீர, கருணாவிற்கு படைத்துறையினர் உதவி வழங்குவதை ஒப்புக்கொண்டுள்ளார். அதுவும் தாம் சார்ந்த அரசாங்கத்திற்கு நோகாத வகையில், அதாவது படைத்துறையில் இருக்கும் சில பிரிவினர் அல்லது, ஐ.தே.கவுக்கு ஆதரவான சில அதிகாரிகள் இவ்வாறு செயற்படலாம் என கூறி எதிர்க்கட்சி மீது பழிசுமத்தி உள்ளார்.

கருணா மட்டக்களப்பில், விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து தனித்து இயங்கப்போவதாக அறிவித்து ஓரிரு தினங்களிலேயே அவரை இயக்கத்திலிருந்து நீக்கி விட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். இந்த அறிவிப்பை கிளிநொச்சியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை கூட்டியே விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தினர். அதேவேளை கருணாவிற்கு பொது மன்னிப்பு வழங்குவதாகவும் அவர் கிழக்கிலிருந்து வெளியேற வேண்டுமெனவும் விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

வெளிநாடொன்றிற்கு செல்ல விரும்பினால் கருணாவின் உயிருக்கு உத்தரவாதமளித்து அதற்கு வழிவிடுவதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். இந்த சமயத்திலேயே அமைச்சர் அலிசாகிர் மௌலானாவிடம் கருணா வெளியேற முடியுமானால் உதவுமாறு விடுதலைப் புலிகள் கேட்டிருக்கலாம். ஆனால், கடந்த ஏப்ரல் மாத நடுப்பகுதியில் மட்டு - அம்பாறையை கருணாவிடமிருந்து மீட்கும் நடவடிக்கையை ஆரம்பித்த போது விடுதலைப் புலிகள், கருணா தப்பிச் செல்வதை விரும்பவில்லை. இதனை விடுதலைப் புலிகளே தற்போது தெரிவித்திருக்கின்றனர்.

அரசாங்கத்திற்கும், அரச படைத்துறைக்கும் விடுதலைப் புலிகளை பிளவுபடுத்த கருணா மேற்கொண்ட முயற்சி மிகவும் விரும்பத்தக்க விடயமாகவே அமைந்தது. கிழக்கை விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிளவுபடுத்த கருணா தலைமையில் இயங்கச் செய்வதில் அரசிற்கு நிறைய இலாபங்கள் இருந்தன. விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் பெரும் மோதல் ஒன்று வெடிப்பதை அரசும் அரச படைத்துறையும் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்தன. கிழக்கை கருணாவின் பிடியிலிருந்து விடுவிக்கச் சென்ற தாக்குதற் பிரிவுத் தளபதியொருவர் கூறினார். தமது அணிகள் கடலில் சென்று கொண்டிருப்பதை சிறீலங்கா கடற்படையினர் தங்கள் கடற்படைக் கப்பலிகளிலிருந்து பார்த்துக் கொண்டிருந்ததாகவும் ஆனால், எவ்வித தடைகளையும் அவர்கள் போடவில்லை எனவும், வெளியில் இருந்து இந்தக் காட்சியை எவரும் பார்த்திருந்தால், சிறீலங்கா கடற்படைக் கப்பல்களே விடுதலைப் புலிகளின் கிழக்குப் பயணத்திற்கு பாதுகாப்பு அளித்ததாக எண்ணியிருப்பர் என்றும் அவர் சொன்னார்.

**எதிர்பாராத பக்கங்களின் ஊடாக புலிகள் மட்டு - அம்பாறையை ஊடறுத்ததும் கருணா குழம்பிப்போனார். தம்மை பாதுகாத்து அழைத்துச் செல்லுமாறு படையினருக்கு தகவல் அனுப்பினார். அப்போது படையினரிடமிருந்து வந்த பதில் 'போரிடு' என்பதாகவே இருந்தது. எனினும், கருணா விடுதலைப் புலிகளிடம் அம்பிடுவதால் தமக்கு நட்டம் என்பதையும் படைத்துறை எண்ணிப் பார்த்திருக்கக்கூடும். இதனையடுத்தே கருணாவை தப்பவைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே அலிசாகிர் மௌலானா கருணாவை பாதுகாத்து அழைத்துச் சென்றுள்ளார்.**



இது உண்மை ஏனெனில், கருணா பலமாக இருப்பதாக சிறீலங்காப் படைத்துறையினர் நம்பினர். பெரும் சண்டை நடக்கும், அதில் இருதரப்பிலும் பெருமளவான போராளிகள் இறப்பர் எனவும் அவர்கள் எதிர்பார்த்தனர். விடுதலைப் புலிகளின் மீட்பு அணியினரைத் தடுப்பதால் சண்டை நடப்பது தடைப்பட்டுப் போய் விடும் என்பதால் அவர்கள் புலிகள் அணியினருக்கு எவ்விதப் பிரச்சனைகளையும் ஏற்படுத்தவில்லை. எதிர்பாராத பக்கங்களின் ஊடாக புலிகள் மட்டு - அம்பாறையை ஊடறுத்ததும் கருணா குழம்பிப்போனார். தம்மை பாதுகாத்து அழைத்துச் செல்லுமாறு படையினருக்கு தகவல் அனுப்பினார். அப்போது படையினரிடமிருந்து வந்த பதில் 'போரிடு' என்பதாகவே இருந்தது. எனினும், கருணா விடுதலைப் புலிகளிடம் அம்பிடுவதால் தமக்கு நட்டம் என்பதையும் படைத்துறை எண்ணிப் பார்த்திருக்கக்கூடும். இதனையடுத்தே கருணாவை தப்பவைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே அலிசாகிர் மௌலானா கருணாவை பாதுகாத்து அழைத்துச் சென்றுள்ளார். தனியே படைத்துறையினரின் ஏற்பாடுகளின்றி அலிசாகிர் மௌலானாவினால் கருணாவை அழைத்து சென்றிருக்க முடியாதென்பது சிறுபிள்ளைக்கும் தெரியும். அவ்வாறெனில், கருணாவைக் கையாளும் திட்டங்களில் அலிசாகிர் மௌலானாவிற்கும், படைத்துறையினருக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்திருக்கலாம் என சந்தேகிப்பதில் என்ன தவறிருக்க முடியும்? கருணா தப்பிச் சென்ற வழியில் பலரை சுட்டுக் கொன்றுவிட்டுச்சென்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்படியானால் இதற்கெல்லாம் இந்த அலிசாகிர் மௌலானா உடந்தையாக இருந்தாரா? என எவரும் கேள்வியெழுப்ப நிறைய வாய்ப்புக்கள் உள்ளன.

இப்போது ஆளும் அரசாங்கத்திற்கு தெரியாமல் அரசின் படைத்துறையினர் கொழும்பில் கருணாவை வைத்து பாதுகாப்பதென்பது சாத்தியமற்றதும் அவ்வாறு கூறி அரசு தப்பிக்க நினைப்பதும் சிறுபிள்ளைத் தனமானதாகும்.

ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் கருணா விவகாரத்தை பொறுப்பேற்பதில், ஒன்றையொன்று சுட்டிக்காட்டி பழிசுமத்திவருகின்றன. எது எவ்வாறெனினும், இப்போது முடிச்சுக்கள் ஒவ்வொன்றாக அவிழத் தொடங்கிவிட்டன.

- வேனிலன் -

# விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒன்றிணைய

நாட்டின் பொதுநலன்கருதி குறித்த சில விடயங்களில் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கு முயற்சிகள் இடம்பெறுகின்றன. பிரதான அரசியல் கட்சிகளை இணைத்து செயற்படுவது குறித்து தீவிரமாக பரிசீலிக்கப்படுகின்றது. அதாவது நாட்டின் பொதுநலன் என்பது விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்தல் தமிழ் மக்களுக்குள் இருக்கக்கூடிய அகமுரண் பாடுகளை இனம்கண்டு அதனை பெரிதுபடுத்தல் போன் றவற்றைக் குறிப்பிடலாம். இந்த அடிப்படையில் பிரதான அரசியல் கட்சிகள் தமது அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய அவசியம் குறித்து பரிசீலனைகள் தென்பகுதியில் இடம்பெறுகின் றன. இந்த ஒழுங்குகளை செய்து வருவது ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பிதான். இந்த ஏற்பாடு கருணா விவகாரத்திற்குப் பின்னரே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கருணாவைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை பிளவுபடுத்தியிருக் கலாம். அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைத் திருக்கலாம் என்று பிரதான அரசியற்கட்சிகள் தமக்கி வல்கள் தெரிவித்திருக்கின்றன.

அரசியல் முரண்பாடுகள் மற்றும் நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி தேரர்களுடன் நடந்துகொண்ட முறை என்பவற் றுக்கு அப்பால் விடுதலைப் புலிகள் விவகாரத்தில் ஹெல உறுமய ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படவேண்டிய தேவையை விமல் ரத்நாயக்கா எடுத்துக்கூறியிருப்பதாக அறிய முடிகின்றது. அதேவேளை விடுதலைப் புலிகள் விவகாரத்தில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை பற்றி பரிசீலிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழுக்கூட்டம் இந்த வாரம் கூடவுள்ளது. ஜே.வி.பியுடன் இடம்பெற்ற சந்திப்பையடுத்தே இந்தக் கூட்டம் கூடவுள்ள தாக எல்லானந்த மேதானந்த தேரர் ஊடகவியலாளரிடம் கூறியிருக்கின்றார். இது இவ்வாறிருக்க ஜே.வி.பியின் இந்த ஏற்பாட்டிற்கு ஐக்கிய தேசியக்கட்சியும் பச்சைக்கொடி காட்டியிருக்கின்றது. ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது குறித்த அரசியல் போட்டிகளை ஒருபுறம் ஒதுக்கி வைத் துக்கொண்டு சிறீலங்காவின் இறைமைக்கு அச்சுறுத்த லாக இருக்கின்ற விடுதலைப் புலிகளை ஒருகை பார்க் கவேண்டும் என்பது போன்ற பாணியில் ஐக்கிய தேசி எதிரான செயற்பாடுகளிற்கு மாத்திரம் ஒன்றுபட்டு நிற் கின்றார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான பேரினவாதிகளின் நிழல்கூட்டு அரசாங்கம் என்ற பெயரில் அதனை அழைக்க முடியும். அவ்வாறான நிழல்கூட்டு அரசாங்கம் ஒன்று அமைவதற்கு சிறீலங்காவின் இராணுவ தளபதிகளும் புலனாய்வுத்துறையினரும் பக்கபலமாகவே நிற்கின்றது. புதிய தளபதி சாந்த கொட்டகொட மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் சிலர் சிரேஷ்ட அரசியல்வாதிகளை கருணா விவகாரம் தொடர்பாக சந்தித்து பேசியிருக்கின்றனர். ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினரும் அமைச்சருமான விமல் ரத்நாயக்கா இராணுவத் தளபதி சாந்த கொட்டகொடவை கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவத் தலைமையகத்தில் சந்தித்து கருணா விவகாரம் குறித்து பேசியிருக்கின்றார். கருணாவிற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று இராணு வமும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் ஏன் ஜனாதிபதி கூட எரிக் சொல்ஹெய்மிடம் நேரடியாக மறுப்புத் தெரி வித்துள்ள நிலையில், விமல் ரத்நாயக்காவை சந்தித்து இராணுவத்தளபதி கருணாவைப் பற்றி பேசியிருப்பதன்

# கண்டியிலும், கொழும்பிலும் நடைபெறும் இரகசிய ஆலோசனைகள்!

டையே ஆதங்கப்பட்டனர். ஏன்? சிங்கள புத்திஜீவிகள் மற்றும் சிங்கள பொது நிலையினர் உட்பட பௌத்த மகா சங்கத்தினர் ஆகியோர் கூட அவ்வாறு ஆதங்கப்பட் டனர்.

ஆகவேதான் இவற்றைக் கருத்திற்கொண்டு எதிர் காலத்தில் இணைந்து செயற்படுவது பற்றி [விடுதலைப்

> விடுதலைப் புலிகளுக்கு எதிரான பேரினவாதிகளின் நிழல்கூட்டு அரசாங்கம் என்ற பெயரில் அதனை அழைக்க முடியும். அவ்வாறான நிழல்கூட்டு அரசாங்கம் ஒன்று அமைவதற்கு சிறீலங்காவின் இராணுவ தளபதிகளும் புலனாய்வுத்துறையினரும் பக்கபலமாகவே நிற்கின்றது. புதிய தளபதி சாந்த கொட்டகொட மற்றும் புலனாய்வுத் துறை அதிகாரிகள் சிலர் சிரேஷ்ட அரசியல்வாதிகளை கருணா விவகாரம் தொடர்பாக சந்தித்து பேசியிருக்கின்றனர்.

புலிகள் விவகாரத்தில் மட்டும்] மந்திராலோசனைகள் கண்டியிலும், கொழும்பிலும் நடைபெறுகின்றன. இவை மிகவும் இரகசியமான முறையிலேயே இடம்பெற்று வரு கின்றன. ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீர வன்ச பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் அமைச்சர்களுமான மைத்திரிபால சிறிசேன, அநுர பண்டா ரநாயக்கா ஆகியோரை சந்தித்திருக்கின்றனர். அத்துடன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத ஏனைய சிறிய அரசியல் கட்சிகளுடனும் ஜே.வி.பி. இந்த விடயம் தொடர்பாக பேசியிருக்கின்றது. இன்று [நேற்று] திங் கட்கிழமை ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் சோமானந்த எல்லாவல தேரரை ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான விமல் ரத்நாயக்கா சந்தித்திருக்கின்றார். பல்வேறுபட்?ட விடயங்கள் ஆராயப்பட்ட போதும் கருணா விவகாரம் குறித்து இருவரும் நீண்டநேரம் பேசியதாக ஜே.வி.பி தக யக்கட்சி ஜே.வி.பியோடு பேச்சுக்களை நடத்தியிருக் கின்றது. கட்சியின் தீவிர இனவாத போக்குடைய கரு ஜெயசூரியா, ரவி கருணாநாயக்கா ஆகியோர் கொழும் பில் நடைபெறுகின்ற பொது அரசியல் வைபவங்களில் சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றனர். உத்தியோகபூர்வ மான முறையில் ஐக்கிய தேசியக்கட்சி ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர்களை விரைவில் சந்திக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

எனவே இவற்றை நோக்குமிடத்து கருணாவைப் பயன் படுத்தி முடியுமானவரை விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரங்களை தீவிரப்படுத்த பேரினவாதங்கள் முனைப் புக்கொள்ளுகின்றன என்பதையே காண முடிகின்றது. மேகங்கள் கருக்கட்டுவது போன்று பேரினவாதிகளின் கருக்கட்டல் எங்கு போய் முடியும் என்ற கேள்விகளுக்கு அப்பால் சமாதான பேச்சுவார்த்தை என்பது கானல் நீர் தானோ என்ற மக்களின் ஏக்கம் நியாயப்பட்டு நிற்பதை காணமுடிகின்றது.

நோர்வேத் தூதுவர்கள் வருகின்றார்கள், ஜனாதிப தியை சந்திக்கின்றார்கள். பிரதமருடன் பேசுகின்றார்கள். வன்னி சென்று தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடுகின் றார்கள். ஆனால் பேச்சுவார்த்தை குறித்த நம்பிக்கையான வெளிப்பாடுகள் எதனையும் மக்கள் கண்டதில்லை. நம்பிக்கையீனங்களும் பலவீனங்களும் அதிகரித்துச் செல்லும் நிலையில் பேரினவாதிகளின் இத்தகைய கருக் கட்டல் நோர்வேயின் சமாதானப் பணியை மேலும் கொச் சைப்படுத்துவதாகவே அர்த்தப்பட்டு நிற்கின்றது. சமா தானம் என்ற வழிமுறைகளை பின்பற்றி அதற்கு நோர் வேயைப் பயன்படுத்தி அதன் மூலம் வெளிநாட்டு உத விகளை பெற்றுக்கொள்வதுதான் சிறீலங்கா அரசின் நோக் கம் என்பது பொதுவான உண்மை. ஆனால் அவ்வாறான பேரினவாத நோக்கங்களுக்கு நோர்வே இடம்கொடுக்க வில்லை. இதன் தாக்கம் அல்லது ஆத்திரம் சிறீலங்காவின் அரசியல் தலைமைகளுக்கு இல்லாமல் இல்லை. அத னாலேயே நோர்வேயை அவ்வப் போது அவமதிக்கின்ற கைங்கரியங்களில் அவர்கள் ஈடுபட்டு வந்தார்கள். அதற் காகவே ஜே.வி.பியையும் ஹெல உறுமயவையும் பயன் படுத்தி வந்த பேரினவாதிகள் தற்போது ஜே.வி.பியின் தலைமையில் [மறைமுகமாக] விடுதலைப் புலிகளுக்கு மூலம் அவர்களின் பக்கபலம் பலப்பட்டு நிற்கின்றது. ஆகவே அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் தென்ப குதியில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்று பட்டு நிற்கவேண்டும் என்பதை இராணுவமும் விரும்பு கின்றது.


அரசாங்கம் ஜனாதிபதி என்ற நாட்டின் அரசியல் கட் டமைப்பிற்கு ஏற்ப இராணுவம் அவர்களின் ஆலோச னைகளை பெறவேண்டியது அவர்களின் உத்தரவை நடைமுறைப்படுத்துவது தவிர்க்கமுடியாதது. ஆனாலும் உயர் இராணுவ அதிகாரிகள் சிலர் பிரதான கட்சிகளாக ஐக்கிய தேசியக்கட்சியுடனும் சிறிலங்கா சுதந்திரக்கட்

**– கொழும்பிலிருந்து ஊரோடி**

சியுடனும் மாத்திரமே முன்னர் தொடர்புகளை வைத்திருந் தனர். தற்போது ஜே.வி.பியுடனும் தொடர்புகொள்ள ஆரம் பித்திருக்கின்றனர். அதற்கு கருணா விவகாரமே காரணம் என்பது கண்கூடு. ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர்க ளையும் இராணுவ உயர்மட்டம் சந்திப்பதற்கான ஏற் பாடுகளை செய்து கொடுத்தவர் ஐக்கிய தேசியக்கட் சியின் சிரேஷ்ட உறுப்பினரான ஜயலத் ஜயவர்த்தனா தான். தற்போது அந்த தகவலும் கசிய ஆரம்பித்திருக்கின் றது. ஆகவே நாட்டின் பொதுநலன் என்ற அடிப்படையில் தமிழர்களின் தமிழ்த்தேசிய கட்டமைப்பிற்கு எதிரான அல்லது அதனை வலுவிழக்கச் செய்கின்ற ஆலோசனைகள் கலந்துரையாடல்கள் எல்லாமே மீண்டும் ஒரு போருக் கான ஏற்பாடு என்றும் கூறினால் தவறில்லை. இனப் பிரச்சினை தீர்வில் கடந்த காலங்களில் தவறுவிட்ட இரு பிரதான கட்சிகளும் அந்த தவறுகளை உணர்ந்து குறைந்த பட்சமேனும் சமாதானப் பேச்சுக்களில் ஆர்வம் காட்டு வார்கள் என்ற எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் பேரினவா திகளின் அவ்வாறான கருக்கட்டல் கடந்த கால தவறு என்பதை தாங்கள் ஒன்று சேர்ந்து யுத்தத்தை நடந்தவில் லையோ என்று எண்ணுவது போன்று தெரிகின்றது. எனவே அந்த கடந்தகால தவறை நிவர்த்திக்கும் வகை யில்தான் நிழல் கூட்டு அரசாங்கத்தை பேரினவாதிகள் அமைக்க முற்படுகின்றார்களோ என்று நாம் கருத வேண்டியுள்ளது.



பேர்ண் மாநகரில்
பாசல் ரவி கடை
2004 ற்கான அனைத்து விதமான புதிய ஆடைகளை உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு மிக மிக மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.
பஞ்சாபி, டெனிம், சேட், சாறி, T.Shirt, Audio CD வகைகள், மணிக்கூடு அனைத்தும் ஒரே இடத்தில்
தொடர்புகளுக்கு: 076, 272 90 30, 061 272 09 90, 079 356 22 78

# 'இனி எந்த தேர்தலிலும் தி.மு.க.வை எதிர்த்து ம.தி.மு.க. போட்டியிடும் நிலை வராது'

இனி எந்த தேர்தலிலும் தி.மு.க.வை எதிர்த்து ம.தி.மு.க. போட்டியிடும் நிலை வராது என நம்புகிறேன் என்று கடலூரில் நடந்த திருமண விழாவில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறினார். கடலூர் திருமண மண்டபத்தில் நடந்த திருமண விழா ஒன்றில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் கலந்து கொண்டு பேசும்போது கூறியதாவது... ``தி.மு.க., பா.ம.க., இ.கம்யூனிஸ்டு, தமிழ் உணர்வு கொண்டவர்கள் எல்லாம் அமைந்து இருக்கக்கூடிய இந்த மேடை எதிர் காலத்தை பற்றிய நம்பிக்கை தருகிறது.

இங்கு பேசிய எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் என்னை எதிர்த்து (தி.மு.க.) என்.ராமலிங்கம் (ம.தி.மு.க.) தேர்தலில் போட்டியிட்டதால் ஏகப்பட்ட செலவு. கொஞ்சம் பயமாக கூட போய்விட்டது. அவருக்கும் செலவு என்றார். இனி அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாது என்று உறுதியாக நம்புகிறேன். நிச்சயமாக நான் அப்படி கூறுவதற்கு காரணம் நாம் ஒரு தொலை நோக்குடன் போகிறோம். ஆருயிர் அண்ணன் கலைஞர் தலைமையில் ஒரு கூட்டணி அமைத்து புதுவை உள்பட 40 இடங்களிலும் அந்த அணி மகத்தான வெற்றி பெற்றுள்ளது. அதோடு கடமை முடிந்து விட்டது என்று கருதாமல், தலையாய கடமை காத்து இருக்கிறது, தமிழகத்துக்கு தமிழ் இனத்துக்கு, திராவிட இயக்கத்துக்கு கேடு செய்து வருகிற ஒரு விருட்சத்தை வேரோடு இல்லாமல் ஆக்க வேண்டும்.

கடமை உணர்வு காத்து இருப்பதால் இன்னும் வலிமையுடன், நெருக்கத்துடன், உறுதியுடன் எதிர் காலத்தில் பணியாற்றுவோம் என்ற நம்பிக்கையோடு நான் இருக்கிறேன். அந்த கருத்தைதான் கலைஞரின் 81வது பிறந்த நாள் விழா நடந்த தீவு திடலில் திட்டவட்டமாக பேசினேன். அண்மையில் கலைஞர் எழுதிய கட்டுரையில் திராவிடர் கழகத்தில் இருந்து திராவிட முன்னேற்ற கழகம் என்ற நதி எழுந்தது. அது போல திராவிட முன்னேற்ற கழகத்தில் இருந்து இன்னொரு கிளை நதி ம.தி.மு.க. தோன்றியது. இவைகள் எல்லாம் தனித் தனி நதிகளாக இருந்தாலும் அதில் ஓடுகிற நீர் திராவிட இயக்க லட்சிய நீர் என்ற உணர்வோடு ஓடிக் கொண்டு இருக்கின்றன என்று குறிப்பிட்டு உள்ளார்.

தமிழ் மொழிபோல் எந்த மொழியும் சிறப்பு பெறவில்லை. தமிழ் மொழி பேசும்போது இசையாக இருக்கும். சில மலையாள பாடல் செவிக்கு இன்பமாக இருக்கிறது. அதற்கு காரணம் நல்ல தமிழ் சொல் மலையாள பாடலில் வருகிறது. அப்படிப்பட்ட பாடல் காதில் விழும்போது இனிப்பாக இருக்கிறது.

தமிழை இப்போது அதிகாரிகளாலும் சரி, பேசுபவர்களாலும் சரி, சரியாக உச்சரிப்பதில்லை. ஒரு வார்த்தையில் பாதி சொற்கள் ஆங்கில சொற்களாகத்தான் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் தமிழை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு வைகோ பேசும் போது கூறினார்.

## இயக்குநர் பாரதிராஜா, பாடகர் ஹரிகரன், கிரிக்கெட் வீரர்கள் கங்குலி, டிராவிட் உள்ளிட்டோருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது


(04.06.04)

இயக்குநர் பாரதிராஜா, பின்னணி பாடகர் ஹரிகரன், கிரிக்கெட் வீரர்கள் கங்குலி, டிராவிட் உள்ளிட்டோருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு ஆண்டு தோறும் பத்மவிபூஷன், பத்மபூஷன், பத்மஸ்ரீ விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா கடந்த 30ம் திகதி புதன்கிழமை டெல்லியில் ஜனாதிபதி மாளிகையில் உள்ள தர்பார் மண்டபத்தில் நடந்தது. ஜனாதிபதி அப்துல்கலாம், விருதுகளை வழங்கினார். மொத்தம் 86 பேருக்கு விருதுவழங்கப்பட்டது.

திரைப்பட இயக்குநர் பாரதிராஜா, பின்னணி பாடகர் ஹரிகரன், கிரிக்கெட் வீரர்கள் கங்குலி, டிராவிட், இந்தி நடிகர் அனுபம்கெர் உள்ளிட்ட 67 பேர் பத்மஸ்ரீ விருது பெற்றனர்.

ஏ.கே.பழனிவேல் (தவில் வித்வான்), என்.லீலா (புல்லாங்குழல்), வி.குஞ்சுமணி (புல்லாங்குழல்) உள்ளிட்டோரும், பத்மஸ்ரீ விருது பெற்றனர். உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி எம்.என்.வெங்கடாச்சலையா, எழுத்தாளர் அம்ரிதா பிரீதம், வானியல் அறிஞர் பேராசிரியர் வின்சு நர்லிகார் ஆகியோருக்கு பத்மவிபூஷன் விருது வழங்கப்பட்டது. பரதநாட்டிய கலைஞர் அலர்மேல்வள்ளி, கல்வியாளர் கிருஷ்ண ஸ்ரீனிவாஸ், சங்கீத வித்வான் மதுரை டி.என்.சேஷகோபாலன், முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி டி.வி.அந்தோணி உள்ளிட்ட 17 பேர் பத்மபூஷன் விருது பெற்றனர்.

விருது வழங்கும் விழாவில் துணை ஜனாதிபதி பைரோன்சிங் செகாவத், பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் ஜனாதிபதி கே.ஆர். நாராயணன், நாடாளுமன்ற சபா நாயகர் சோம்நாத் சட்டர்ஜி, எதிர்க் கட்சி தலைவர் எல்.கே.அத்வானி, முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## முஷாரப்புடன் தயாநிதி மாறன் சந்திப்பு

`சார்க்' நாடுகளின் தொலை தொடர்பு அமைச்சர்களின் மாநாடு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடந்தது. இந்த மாநாட்டில் மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் தயாநிதி மாறன் கலந்து கொண்டு பேசினார். மத்திய மந்திரி தயாநிதி மாறன் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பை கடந்த 30ம் திகதி புதனன்று சந்தித்துப் பேசினார்.

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கு இடையே தொலை தொடர்பு வசதியை மேம்படுத்துவது பற்றி இருவரும் விவாதித்தனர்.



மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணி அரசு பதவி ஏற்ற பிறகு பாகிஸ்தான் ஜனாதிபதியை சந்தித்துப் பேசும் முதல் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் என்பது குறிப்பிடத்தக்கது.

## போலி முத்திரைத்தாள் மோசடி வழக்கு
### தமிழக காவல்துறை அதிகாரிகளை விசாரிக்க அனுமதி

(02.07.2004)

போலி முத்திரைத் தாள் மோசடி வழக்குத் தொடர்பாக நேற்றுக் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டின் இரண்டு காவல்துறை அதிகாரிகளையும் நான்கு நாட்கள் மத்திய புலனாய்வுத்துறையின் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. தமிழக காவல்துறையின் துணைத் தலைமை ஆய்வாளர் முஹமது அலி, துணை கண்காணிப்பாளர் சங்கர் மற்றும் ஆயுள் காப்புறுதி நிர்வாக அலுவலர் சாது ராமசாமி ஆகியோரையே காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இன்று நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட இவர்கள் மூவரையும் ஐந்து நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள அனுமதிக்கும்படி மத்திய புலனாய்வுத்துறை கேட்டுக் கொண்டதிற்கு இணங்கவே, நீதிமன்றம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

அதேவேளை, இவர்களை விசாரணைகளுக்காக மாநிலத்தை விட்டு வெளியே கொண்டு செல்வதானால், நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் நீதிபதி மத்திய புலனாய்வுத்துறைக்கு உத்தரவிட்டுள்ளார். 2001ம் ஆண்டு அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வந்த போது முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியைக் கைது செய்த நடவடிக்கையில் முஹமது அலி முக்கிய பங்கு வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நேபாளத்தில் நகரமுதல்வர் சுட்டுக்கொலை

நேபாளத்தின் பொக்ஹரா (Pokhara) நகரத்தின் முதல்வரான ஹர்க்கா பகதூர் குருங் (Harka Bahadur Gurung) என்பவர் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக நேபாள காவல்துறையினர் அறிவித்துள்ளனர். இவர் தனது அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த போதே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும், உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர் அங்கு உயிரிழந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நேபாளத்தில் எட்டு வருடங்களாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 8,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்

தரமான, கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச் சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91
எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE


ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.

Pub-Fr

# அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் வடகொரிய வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பு

(04.07.04)

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் வடகொரிய வெளிவிவகார அமைச்சர் பயீக் நம்-சன்னைச் (Paek Nam-sun) சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இந்தோனேசியத் தலைநகரில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தை இருபது நிமிடங்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பில் வடகொரியாவின் அணுவாயுத விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆராய்ந்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலின் குரல்தரவல்ல அதிகாரி தெரிவித்துள்ளார்.



வடகொரியாவின் அணுவாயுத விவகாரங்கள் குறித்து அமெரிக்கா முன்வைத்த வரைபினை அமுல் படுத்துமாறு அந்நாட்டை கொலின் பவல் வலியுறுத்தியதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

வடகொரியாவின் அணுவாயுத விவகாரங்கள் குறித்து பீக்கிங்கில் அண்மையில் நடைபெற்ற ஆறுமுனைப் பேச்சுவார்த்தைகள் இணக்கப்பாடு எதுவும் காணப்படாது முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## துருக்கியில் மாநில ஆளுநரின் வாகனத் தொடரணி மீது குண்டுத் தாக்குதல்
## ஐவர் பலி, இருபதுக்கும் மேற்பட்டோர் காயம்

துருக்கியின் கிழக்குப் பகுதியில் அந்த மாநில ஆளுநரின் வாகனத் தொடரணி மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஐவர் உயிரிழந்துள்ளதோடு, இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதலில் ஆளுநர் கிக்மெட் தான் (Hikmet Tan) நூலிழையில் உயிர் தப்பியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.



அத்துடன், ஆளுநரின் வாகனத்தில் சென்ற சாரதி மற்றும் மெய்ப்பாதுகாவலர்களும் காயமெதுவுமின்றி உயிர்தப்பியுள்ள போதும், இவ்வாகனத்திற்கு பின்னால் சென்ற வாகனங்களில் இருந்தவர்களும், பொது மக்களுமே உயிரிழந்திருப்பதாகவும், காயமடைந்திருப்பதாகம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் கிக்மெட் தான் (Hikmet Tan) தனது காரியாலயத்திற்கு சென்று கொண்டிருந்த வேளையில், வீதியில் தரித்து நின்ற வாகனமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாக அச்செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இத்தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமை கோராத போதும், குர்திஸ்தான் மக்கள் அமைப்பே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து கடந்த மாதம் விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கிற்கு படை அனுப்ப - ஜோர்டான் முடிவு

(04.06.04)

ஈராக்கின் புதிய இடைக்கால அரசு கோரிக்கை விடுத்தால், அந்நாட்டுக்கு படையினரை அனுப்புவது குறித்து கரிசனை கொள்ளுவோம் என ஜோர்டான் அறிவித்திருந்தது. ஜோர்டான் மன்னர் அப்துல்லா பி.பி.சி. சர்வதேச செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியின் போதே இதனைக் கூறியிருந்தார். ஈராக்கிற்கு படையினரை அனுப்புமாறு அந்நாட்டின் புதிய இடைக்கால அரசு வேண்டுகோள் விடுத்தால், அதனை மறுப்பது கடினமென ஜோர்டான் மன்னர் அப்துல்லா இச்செவ்வியில் தெரிவித்திருந்தார்.

ஜோர்டான் மன்னர் அப்துல்லாவே ஈராக்கிற்கு படையினரை அனுப்புவது குறித்து சாதகமான பதிலைத் தெரிவித்த முதல் அரேபியத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், ஜோர்டான் மன்னரின் இக்கருத்துக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்த ஈராக்கின் உள்துறை அமைச்சின் குரல் தரவல்ல அதிகாரி ஈராக்கில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு அனைத்து அரேபிய நாடுகளும் முன்வர வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஈராக்கில் இருந்து தாய்லாந்து இராணுவம் வெளியேறுகிறது

ஈராக் நாட்டுக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 450 இராணுவத்தை தாய்லாந்து நாடு அனுப்பியது. இந்த இராணுவத்தினர் போர்க் களத்தில் சண்டையில் ஈடுபடவில்லை. புனரமைப்பு பணிகளில் மட்டும் ஈடுபட்டனர். கடந்த டிசம்பர் மாதம் குண்டு வெடித்ததில் இரு தாய்லாந்து படையினர் பலியானார்கள். இதனையடுத்து ஈராக்குக்கு இராணுவத்தை அனுப்பியதற்கு பொதுமக்களிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பியது. இந்த நிலையில் இராணுவத்தை தாய்லாந்து திரும்பப் பெறத் தொடங்கியது. தாய்லாந்து கனரக சாதனப்படை முதலில் வெளியேறத் தொடங்கியது. மொத்த இராணுவமும் செப்டம்பர் 20ம் திகதிக்குள் வெளியேறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## ஐ.நா.சபை உலங்குவானூர்தி விபத்தில் சிக்கி 24 பேர் பலி

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான சீயரா லியோன். இங்கு 1991ம் ஆண்டு முதல் 2002 வரை உள்நாட்டுப்போர் நடந்தது. 2002ம் ஆண்டு போர் நிறுத்தம் ஏற்பட்டதை தொடர்ந்து ஐ.நா.சபை அமைதிப் படை அங்கு பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த 29ம் திகதி சீயரா லியோன் தலைநகரான பிரிடவுனில் இருந்து கைலா குன் என்ற இடத்துக்கு ஐ.நா. சபைக்கு சொந்தமான உலங்குவானூர்தி புறப்பட்டு சென்றது. இதில் 21 அமைதிப்படையினரும், 3 விமானச்சிப்பந்திகளும் இருந்தனர். இந்த உலங்குவானூர்தி திடீரென்று நொறுங்கி விழுந்ததில் 24 பேர்களும் பலியானார்கள். இந்த விபத்திற்கான காரணங்கள் தெரியவரவில்லை. விபத்து பற்றிய விசாரணை நடந்து வருகிறது.

## சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் புதிதாக 12 இலட்சம் உறுப்பினர்கள்

சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியில் கடந்த ஆண்டு புதிதாக 12 இலட்சம் பேர் சேர்க்கப்பட்டதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. இதனையடுத்து கட்சி உறுப்பினர்களின்எண்ணிக்கை 6 கோடி 80 இலட்சமாக உயர்ந்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. கட்சியின் மொத்த உறுப்பினர்களில் 1 கோடி 20 இலட்சம் பேர் பெண்கள் என்றும் 40 இலட்சம் பேர் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் 25.7 வீதமானவர்கள் பட்டதாரிகள் என்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது கடந்த ஆண்டு மட்டும் கட்சியில் சேருவதற்காக 1 கோடி 60 இலட்சம் பேர் விண்ணப்பம் செய்ததாகவும் அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டது

உலகப் புகழ்பெற்ற ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி கடந்த 2ம் திகதி இரண்டாக பிளவுபட்டுள்ளது. கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி தோல்வியடைந்ததையடுத்து கட்சியை மறுசீரமைக்க வேண்டும் என்றும் கட்சியின் தலைவர் ஜூகானோவ் பதவிவிலக வேண்டும் என்றும் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருந்தனர். கட்சித்தலைவர் ஜூகானோவ அதை ஏற்றுக்கொள்ள மறுத்ததை அடுத்து 159 பேர் கொண்ட மத்திய குழுவில் 87 பேர் தனியாகக் கூட்டம் நடத்தி தங்களது கட்சியின் புதிய தலைவராக விளாடிமீர் டிக்கானோவை தேர்ந்தெடுத்துள்ளனர்.

## தமிழோசை இணையத்தளம் புதிய முகவரியில்

இலண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் பி.பி.சி. தமிழோசை வானொலியின் இணையத்தளம் நேற்று வெள்ளிக்கிழமை முதல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, இனிமேல், தமிழோசையில் ஒலிபரப்பாகும் செய்திகளை இந்த இணையத்தளத்தில் எழுத்துருவிலும் பார்வையிடலாம். www.bbctamil.com என்ற இணையத்தள முகவரியில் செயற்படும் இவ்விணையத்தளத்தில் பி.பி.சி. தமிழோசையில் ஒலிபரப்பாகும் செய்திகளுடன் அதற்குரிய படங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. 43 மொழிகளில் ஒலிபரப்பாகும் பி.பி.சி. நிகழ்ச்சிகளை 146 மில்லியன் பேர் செவிமடுக்கின்றனர். இதேவேளை, பி.பி.சி.யின் இணையத்தளத்தை மாதாந்தம் 280 மில்லியன் மக்கள் பார்வையிடுவதாகவும் தெரிய வருகிறது.




சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்

N.S.Jewellery

(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)

உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.

சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.

N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich

Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

# மாவீரர் நினைவு
## மெய்வல்லுனர் போட்டிகள் 2004



தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளை நடாத்தும் மாவீரர் நினைவு மெய்வல்லுனர் போட்டிகள் 2004. எதிர்வரும் 17-07-2004, 18-07-2004 இல் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம். போட்டிகள் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

மேலதிக தொடர்புகட்கு, 01 43 58 11 42 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.





INDIAN ASTROLOGER

# சாய்பாபா

# Laxmi Kanthswamy

**பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.**

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்றுதலும் செய்து தருவோம்.

**சந்திக்குமிடம்:**

**(West London) South hall**

**Contact:**

**Tel: 07932724065 / 07939613067**



# பூபாளம்
பொத்தகசாலை

**உங்களுக்குத் தேவையான அனைத்துவகையான பொத்தகங்களையும் ஒரே இடத்தில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.**

உங்களுக்குத் தேவையான நூல்களை குறுகிய நாட்களுக்குள் பெற்றுத் தருவோம்.

தமிழீழ விடுதலைப் பாடல்கள் அடங்கிய CDக்கள், மற்றும் தமிழீழத்தில் வெளியாகும் நூல்களையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

**நூலகம்! நூலகம்!! நூலகம்!!!**

**தமிழ் மக்களுக்கோர் இனிய செய்தி!**

பூபாளம் பொத்தகசாலையுடன் இணைந்த புதிய சேவை. பல்துறை சார்ந்த 2000 க்கும் மேற்பட்ட பொத்தகங்களை வாசிப்பதற்கான அரியவாய்ப்பு. பூபாளம் நூலகத்தில் இப்பொழுதே நீங்களும் ஒரு அங்கத்தவராகி உங்களுக்குப் பிரியமான பொத்தகங்களை வாசித்துப் பயன்பெறுங்கள்.



# பூபாளம்
*Informatique*

# ORDINATEUR COMPLET
## *(OCCASSION)*

சிறப்பு மலிவு விற்பனை

**à partir de 150 Euro**

**Ecran 15"**
**u Centrale PII, PIII ou Celeron**
**Claviet**
**Souris**
**Haut Parleur (150 watts)**

விபரங்கட்கு தொடர்புகொள்ளவும்.





பூபாளம்
பொத்தகசாலை

*22, Rue Perdonnet, 75010 Paris, France.*
*Tél: 01 40 05 95 15*

# ஜெனீவா யுத்த ஒப்பந்த மனித உரிமைச் சட்டத்தை மீறிய
# சிறீலங்கா படைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

சிறீலங்கா ஆயுதப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நடவடிக்கையில் சிறீலங்கா அரச படையினர் ஜெனிவா யுத்த ஒப்பந்த மனித உரிமைகள் சட்டத்தை மீறிச் செயற்பட்டார்கள். இம் மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்ட படையினருக்கும் படை அதிகாரிகளுக்கும் எதிராக சிறீலங்கா அரசு அல்லது ஜெனீவா யுத்த ஒப்பந்த ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமா ?

ஆயுதப் போர்களின் போது சண்டையிடும் இரு தரப்பினரின் நலன் கருதியும் நடுவில் சிக்கும் பொது மக்களின் நலன் கருதியும், அங்கவீனம், நோய்வாய்ப்படும் வீரர்களின் நலன் கருதியும், ஜெனீவா புரிந்துணர்வு ஒப்பந்த சாசனம் இயற்றப்பட்டதாகும். போரில் ஈடுபடாத சாதாரண அப்பாவித் தமிழ் மக்கள் விடயத்தில் கூட சிறீலங்காப்படை, ஜெனீவா யுத்த சட்ட ஒப்பந்தத்தை மீறித் தான் தோன்றித் தனமாக செயற்படுகின்றது என்றால் இராணுவக் கைதிகள் (விடுதலைப் புலிகள்) விடயத்தில் அதை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அந்த அளவுக்கு ஜெனீவா யுத்தச்சட்ட ஒப்பந்தத்தை சிறீலங்கா அரசபடை மீறிச் செயற்படுகின்றது. இதற்கு உதாரணமாக பலாலி விமானத் தளத்தில் கைதான கரும்புலி கெனடி என்ற புலி உறுப்பினரின் வாக்கு மூலம் நல்ல உதாரணம் ஆகும்.

**ஜெனிவா ஒப்பந்தத்திற்கான ஏற்பாடு**

1863ம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் 16 நாடுகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் ஜெனிவாவில் கூடினர். அதன் பிரகாரம் 1864ம் ஆண்டு ஒரு உடன்பாடு வடிவம் பெற்றது. இது மூழ்கிய கப்பலில் இருந்து தப்பிய வீரர்களுக்கும், யுத்தக் கைதிகள், காயமடைந்த வீரர்கள், பொது மக்கள் ஆகியோரின் பாதுகாப்பிற்கு உத்தரவாதப்படுத்தும் முகமாக 1906 இலும், 1929 இலும் 1949 இலும் திருத்தியமைக்கப்பட்டது.

சிறீலங்கா அரசு ஒப்பந்தத்தில் 1959ம் ஆண்டில் இருந்து சட்ட ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டு இவ்ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. ஆயினும் அவற்றை எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கின்றார்கள் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ஒரு நாடு எமது மக்கள் என்று உதட்டளவில் மட்டும் கூறிக் கொண்டு ஈவிரக்கமற்ற முறையில் ஆக்கிரமிப்பு வன்முறைப்போரை பொது மக்களை மையமாகக் கொண்டு இராணுவ சட்டதிட்ட விதிகளுக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டிருக்கின்றது. அரச




படைகள் மனிதாபிமானமற்ற காட்டு மிராண்டித்தனமான செயல் இது என்பதனை தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

ஜெனீவா ஒப்பந்தத்தில் 3வது சரத்தில் யுத்தத்தில் பங்கு கொள்ளாதோர் அனைவரையும் இனம், மதம், நிறம், நம்பிக்கை, பால், பிறப்பு, செல்வம், மற்றும் இன்னோர் இன்ன பேதம் பாராட்டாமல் நடாத்தப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. இவ் விதிகளுக்கு முரணாக இலங்கையில் தமிழினம் என்பதற்காகவும், தமிழ் மொழி பேசுவதற்காகவும் சிறீலங்காப் பாதுகாப்புப் படையினர் அப்பாவித் தமிழ் மக்களின் உயிர் மீதும், ஆள் மீதும் வன்முறையினை குறிப்பாக கொலை, அங்கவீனமாக்கல், கொடூரமாக நடத்தல், சித்திரவதை என்பவற்றை புரிகின்றது. ஆனால், இவற்றை ஜெனிவா ஒப்பந்தம் தடுக்கின்றது.

இராணுவ நடவடிக்கையின் போது பொது மக்களை தமது பாதுகாப்பு கவசங்களாகவும் மனிதக் கேடயங்களாகவும் பயன்படுத்தக் கூடாது என ஜெனீவா உடன்படிக்கை கூறுகின்றது. ஆனால் சிறீலங்கா அரசபடை, இவ்வாறான கைங்கரியத்தை விட்ட பாடாக இல்லை. 04.06.2000 தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் பொது மக்களை முன்செல்ல விட்டு அவர்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தி அரசபடை தனது இராணுவ நடவடிக்கையினை மேற்கொண்டது. இதில் 30 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இராணுவ நடவடிக்கையில் சிவிலியன் தன் இராணுவ கைதிகளின் கௌரவத்திற்கு பங்கம் ஏற்படுத்துவதும் அட்டூழியங்கள் புரிவதும் அவர்களை அவமானப்படுத்துவதும் இழிவு படுத்துவதும் இராணுவ சட்ட விதிகளுக்கு முரணானவை என ஜெனீவா உடன்படிக்கை வலியுறுத்துகின்றது. ஆனால் சிறீலங்கா படையினருக்கு சாதாரண சிவிலியன்கள் மீதே இவ்வாறான மனித உரிமை மீறல் வன்முறையை பிரயோகிப்பது, சாதாரண விடையமாகும்.

இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்களுக்கும் அவர்களின் உடமைகளுக்கும் பங்கம் ஏற்படாது மதித்தும், காப்பாற்றியும் நடக்க வேண்டும் என ஜெனீவா சாசன வரிகள் கூறுகின்றன. ஆனால் வடக்குக் கிழக்குப் போரில் எத்தனை ஆயிரம் பொதுமக்களை சிறீலங்கா இராணுவம் கொன்று குவித்தது. இந்த தமிழினப் படுகொலைப் பட்டியல் நீண்டு 80 ஆயிரத்தையும் எட்டிவிட்டது என கணிப்பீடுகள் கூறுகின்றது.

அத்துடன் நாசமாக்கப்பட்ட பொது மக்களின் சொத்துக்களின் பெறுமதி பல ஆயிரம் கோடிகளைத் தாண்டி மதிப்பிட முடியாத அளவு உயர்ந்து விட்டது. ஆயிரக் கணக்கான குடியிருப்புக்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. பொதுமக்களின் சொத்துக்களை இராணுவம் திருடியும் சூறையாடியுமுள்ளது. இவ்வாறாக தமிழின சொத்தழிப்பு நீண்டு செல்கின்றது.

'கொலை, சித்திரவதை, அங்கவீனமாக்கல், கொடூரமாக சிறுமைப்படுத்தல் தன் மானத்தை சின்னாபின்னப்படுத்தும் வகையில் நடத்தல், பாலியல் துன்புறுத்தல், சூறையாடல், களவு போன்றன யுத்தக் குற்றங்கள்' என ஜெனீவா சாசனம் பிரகடனப்படுத்தியுள்ளது.

போர் கைதிகள் தவிர்ந்த சாதாரண சிவிலியன் விடையத்தில் கூட, அரச படையினர் தாம் அரசின் பாதுகாப்புப் படையினர் என பெயரளவில் கூறிக் கொண்டு எவ்வளவு தூரம் அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர். சொல் ஒன்று, செயல் வேறொன்றாகவே இருக்கின்றது. பொது மக்கள் தஞ்சமடையும் தேவாலயங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்துவது மிகவும் பாரதூரமான யுத்தச் சட்ட மீறல் ஆகும்.

21.9.1995 யாழ், நாகர் கோவில் மத்திய கல்லூரி மீது சிறீலங்கா விமானப் படையினர் விமானத் தாக்குதல் மேற்கொண்டதில் 34 மாணவர்கள் பலியாகினார்.

09.7.1995 நவாலி சென்பீற்றர் தேவாலயம் மீதான விமானக் குண்டு வீச்சில் பலியானோர் 165 பேர்.

16.07.1986 வெருவெளி மணல் சேனை திருகோணமலை அகதி முகாமில் கொல்லப்பட்டோர் 44 பேர்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்தோர் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் 173 பேர்.

22.07.1990ல் கல்முனையிலும் கல்லாறு அகதி முகாமிலும் கொல்லப்பட்டோர் 30 பேர்.

13.05.1992ல் முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் கோவிலில் கொல்லப்பட்டோர் 15 பேர்.

02.12.1984ல் வவுனியாத் தடுப்புக் காவலில் கொல்லப்பட்டோர் 119 பேர்.

11.11.1993ல் யாழ்ப்பாணம் சென்ஜேம்ஸ் தேவாலயம் மீதான விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டோர். 11 பேர்.

30.05.1992 தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில் கொல்லப்பட்டோர் 5 பேர்.

இவை உதாரணத்திற்கு சுட்டிக் காட்டப்பட்ட ஒரு சில படுகொலைகளாகும். ஆனால் இதன் பட்டியல் பெரியது.

**வன்னியிலிருந்து ச. சங்கரன்**

யுத்தம் நடைபெறும் போது அப்பிரதேசத்தில் வாழும் பொதுமக்களுக்குரிய அத்தியாவசிய தேவைப்பொருட்களை தடை செய்வது ஜெனீவா சாசன சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கை ஆகும். இவ்விடயத்தில் அரசும் அரச படையும் ஜெனீவா சட்டத்தை மீறி மனிதாபிமானம் அற்ற முறையில் நடந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் தரவைக்கும் வாகரைக்கும் பொருளாதாரத் தடைகளை விதித்து விநியோகப் பாதைகளை தடை செய்து கட்டுப்பாட்டைப் போட்டு மக்களை பசியாலும் பட்டினியாலும் வாட்டி வதைத்தமை சிறீலங்காப் பாதுகாப்புப் படையின் சட்ட விரோத நடவடிக்கை ஆகும்.



மருத்துவப் பொருட்கள் மக்களுக்கு சென்றடையாது கட்டுப்படுத்தியது உணவுப் பொருட்களுக்கு கட்டுப்பாடு, விவசாயப் பொருட்களுக்கு தடை இவ்வாறாக தடைப்பட்டியலும் தொடர்ந்து சென்றது.

இவ்வாறான அடிப்படை மனித உரிமை மீறல்களை ஜெனீவா ஒப்பந்தம் என்ன செய்தது. அது செல்லாக் காசாய் ஏட்டளவில் மட்டுமே காணப்படுகின்றது. பொதுமக்களைப் பட்டினி போட வேண்டாம் என ஜெனீவா உடன்படிக்கை கூறுகின்றது. ஆனால் பொருட்களுக்கு கட்டுப்பாடுகளைப் போட்டு, தடைகளை விதித்து மக்களை பரிதவிக்க வைத்தது. அரசும் படையும் பொதுமக்களின் சொந்தப் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் போது அல்லது தவிர்க்கமுடியாத நடவடிக்கை இராணுவத் தேவை தவிர்ந்த வேறு எந்த காரணங்களுக்காகவும் பொதுமக்களை அவர்களின் சொந்த வசிப்பிடங்களிலிருந்து இடம் பெயர்க்க வேண்டாம் என்று ஜெனீவா சாசனம் கூறுகின்றது. இவ்விடயத்திலும் அரச படைகள் முரணாகவே நடந்து கொள்கின்றன. அவ்வாறு இடப்பெயர்வு இடம்பெறும் பட்சத்தில் தங்குமிட வசதி,

**வடக்குக் கிழக்கில் சிவிலியன்களின் பாதுகாப்பினை உத்தரவாதப் படுத்துவதிலும் தமிழரின் துன்பத்தினையும், அழிவினையும் தடுப்பதிலும் ஐ.நா சபை, செஞ்சிலுவைச் சங்கம் என்பன இலங்கையில் தமது குறிக்கோளையும் இலக்கினையும் அடைவதில் வெற்றி பெறவில்லை. தோல்வியையே சந்தித்துள்ளன என்பது வெளிப்படையான உண்மையாகும்.**

உணவு, குடிநீர், சுகாதாரம், பாதுகாப்பு என்பன வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகின்றது. ஆனால் தாமும் செய்யாமல் இவற்றை செய்வோரையும் தடுக்கும் வகையிலேயே அரச படை நடந்து கொண்டது. சர்வதேசம் வழங்கும் நிவாரணத்தில் வெட்டு நிதியில் வெட்டு இவ்வாறாக அனைத்தும் தடுக்கப்படுகின்றன.

போர் ஓய்ந்து சமாதானம் உருவாகி இராணுவ நடவடிக்கைகள் அற்ற வேலையிலும் உயர் பாதுகாப்பு வலையம் என்ற போர்வையில் பொதுமக்களின் வதிவடங்களை இராணுவ இருப்பிடங்களாக மாற்றுவதும் சட்ட விரோதமான இராணுவ குற்றச் செயல்கள் ஆகும். சமாதான சூழலிலும் தொடர்ந்தும் பொதுமக்களை அகதிகளாக்கி குடிபெயர்ந்த நிலையில் வைத்திருப்பது பாரதூரமான இராணுவ குற்றவியல் சட்டத்திற்கு உள்ளானதாகும்.

இராணுவ வீரர்கள் களவாடுவதும் கொள்ளையடிப்பதும் சட்ட விரோதமானது என இராணுவ விதி கூறுகின்றது. ஆனால் பொதுமக்களின் சொத்துக்களை களவெடுப்பதிலும், கொள்ளையடிப்பதிலும் சிறீலங்கா

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

# சந்திரிகாவின் நாடகபாணித் திரிபுகளாலும் திருப்பங்களாலும் நிறைந்து போயிருக்கும் சமாதான முன்னெடுப்பு

சிறீலங்கா அரசியலமைப்பின் கீழ், நாட்டின் ஜனாதிபதி ஒவ்வொரு ஆறு வருட காலப்பகுதியினதும் மற்றும் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் நாடாளுமன்றக் கூட்டம் ஆரம்பிக்கும்போது நாடாளுமன்றத்தில் கொள்கைப் பிரகடன அறிக்கையை வெளியிடுபவராக எதிர்பார்க்கப்படுவார். அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கான திட்ட வரைபடமாகக் கருதப்படும் இந்தப் பேச்சு, விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் அதை ஏற்றுக் கொள்வதா, நிராகரிப்பதா என்பதையிட்டு வாக்கெடுப்பும் நடத்தப்படும்.

எவ்வாறெனினும், அண்மையில் பாரம்பரியத்தையும், அரசியலமைப்பையும் உடைத்தெறிந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, `அரசாங்கத்தின் கொள்கை மற்றும் எதிர்கால நடவடிக்கைத் திட்டம்' பற்றி தேசிய தொலைக்காட்சியில் பேசினார். நாடாளுமன்றத்தை ஓரங்கட்டுவதன் மூலம் அவர் விவாதத்தையும், வாக்கெடுப்பையும் தவிர்த்துக் கொண்டுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாத நிலையில், குமாரதுங்கவின் பேச்சு அங்கீகாரப்படுவதற்கு உத்தரவாதம் இருக்கவில்லை.

குமாரதுங்கவின் நடவடிக்கையானது ஆட்டங்கண்டு போயுள்ள அவரது சிறுபான்மை அரசாங்கத்தைத் தூக்கி நிறுத்துவதன் பேரில் அரசியலமைப்பையும், நாடாளுமன்ற ஒழுங்கு முறைகளையும் புறக்கணிப்பதில் அவரது தயக்கமின்மையை மேலுமொரு முறை அம்பலப்படுத்துகிறது. நாடாளுமன்ற ஒழுங்குகள் அமளிதுமளியான நிலையில் அவர் அதிகரித்தளவில் நேரடியாகவே அதிகாரங்களை தனது கைக்குள் எடுத்துக் கொள்கின்றனர்.

தேர்தல் முடிந்ததில் இருந்து நாடாளுமன்றம் நான்கு நாட்கள் மட்டுமே கூடியது. இந்த நான்கு அமர்வுகளும், சபாநாயகர் மற்றும் ஏனைய அலுவலர்களை நியமிக்கும் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால், ஒவ்வொரு சந்தர்ப்பமும், எதிர்க்கட்சிப் பெரும்பான்மையைப் பெறுவதைத் தடுக்கும் முயற்சியில் ஆளும் கூட்டணியின் உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட குழப்பங்களிலேயே முடிவுற்றது. இந்த முரண்பாடுகள், நாட்டின் ஆளும் கும்பல்களுக்கிடையிலான கூர்மையான பிளவுகளை உக்கிரமாக்க மட்டுமே சேவை செய்தன.

> **தேர்தல் பிரசாரத்தின்போது, சுதந்திரக் கூட்டமைப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அகற்றி நாடாளுமன்ற முறைக்குத் திரும்பும் என குமாரதுங்க பிரகடனம் செய்தார். இந்தப் பிரேரணை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மீதான எதிர்ப்பைப் பயன்படுத்தி குமாரதுங்கவை ஒரு நாடாளுமன்றப் பிரதமராகத் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க அனுமதிப்பதற்கான ஒரு முறைகேடான முயற்சியாகும். தற்போதைய அரசியலமைப்பின் கீழ் அவர் மூன்றாவது முறையாகவும் போட்டியிடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.**

குமாரதுங்கவும், அவரது ஏனைய அமைச்சர்களும் ஏனைய கட்சிகளுடன் திரைக்குப் பின்னால் வெறித்தனமான பேரம்பேசல்களில் ஈடுபட்டு வருகின்றனர். யூன் 8ம் திகதி நான்காவது அமர்வுக்கு முன்னதாக, சபையில் பெரும்பான்மையை நிரூபிப்பதாக அரசாங்கத் தலைவர்கள் பெருமை பேசிக் கொண்டார்கள். அவர்கள் ஐ.தே.மு.வில் கூட்டுச் சேர்ந்துள்ள வலதுசாரி, ஜாதிக ஹெல உறுமயவின் (ஜே.எச்.யு.) இரண்டு உறுப்பினர்கள் மற்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் நான்கு உறுப்பினர்களின் ஆதரவைக் கணக்கில் வைத்துக் கொண்டுள்ளனர்.

ஏப்ரல் 2 தேர்தலில் முதல் தடவையாக 9 ஆசனங்களைப் வென்ற ஜாதிக ஹெல உறுமய, தனது கட்சியைச் சார்ந்த அரசாங்கச் சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பதவி விலகுமாறு நெருக்கி வருகிறது. ஆயினும், சுதந்திரக் கூட்டமைப்பு, அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டவர் நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்வதைத் தடுப்பதற்காக ஒரு நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியது. யூன் 8 அமர்வின்போது விவகாரம் பூதாகரமாகியது. நீதிமன்ற உத்தரவு விநியோகிக்கப்பட்டிராத நிலையில், எதிர்க்கட்சியால் நியமிக்கப்பட்ட சபாநாயகர், ஜே.எச்.யு. நாடாளுமன்ற உறுப்பினர் பதவிப் பிரமாணம் செய்து கொள்வதை அனுமதித்தார். இதைத் தடுப்பதற்காக



சிறீல.சு.க.மற்றும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மல்லுக்கட்டல்களில் ஈடுபட முயற்சித்தபோது கைகலப்பு ஏற்பட்டது. நாடாளுமன்றம் மீண்டும் யூலை 20 வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த அமளிதுமளிகள் பற்றிய கொழும்பு ஊடகங்களிலான பரந்த விமர்சனங்களுக்கு மத்தியில், குமாரதுங்க இந்த முறைகேடான செயலைக் `கண்டனம்' செய்திருந்த போதிலும், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.
பெரும்பான்மையின்றி இருந்தபோதிலும், அமளிதுமளியான அமர்வின் நான்கு நாட்களின் பின்னரும் ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடனத்தை வெளியிடுவதற்காக ஊடகங்களைப் பயன்படுத்தினார். அதன் உள்ளடக்கம் அவரது நிர்வாகத்தைச் சூழவுள்ள முரண்பாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்ட மட்டுமே பயன்பட்டது.

கடந்த இரு மாதங்களாக குமாரதுங்கவின் பிரச்சினைகள் தொடர்ந்தும் குவிந்து வருகின்றன. நாட்டை ஸ்திர நிலைப்படுத்துவதன் பேரிலும் மற்றும் மலிவு உழைப்பு மேடையாக மாற்றுவதன் பேரிலும், விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுமாறு பெரும் வல்லரசுகள் குமாரதுங்கவை நெருக்கி வருகின்றன. யூன் முற்பகுதியில் பிரசல்ஸில் சந்தித்த அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் உட்பட நிதி உதவி வழங்கும் நாடுகள், `சமாதான முன்னெடுப்புகள்' மீண்டும் ஆரம்பிக்கப்படுவதைப் பொறுத்தே 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்கப்படும் என எச்சரித்துள்ளன.

பண நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு கடன்களும், நிதி உதவியும் அவசியமாகியுள்ளன. ஆயினும், சமாதானப் பேச்சுகள் நோக்கிய அதன் தலைகீழ் மாற்றமானது, சற்றே சில மாதங்களுக்கு முன்னர், விடுதலைப் புலிகளுக்கு நாட்டை விற்றுத்தள்ளுவதாக அரசாங்கத்தைக் கண்டனம் செய்த கூட்டமைப்பிற்குள் பிளவுகளை ஏற்படுத்தியுள்ளது. பேச்சுவார்த்தைகள் தீவின் வடக்கு மற்றும் கிழக்கில் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஸ்தாபிக்கும் பிரேரணையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் பிரதான கோரிக்கையை ஜே.வி.பி.எதிர்க்கின்றது.

இதன் விளைவாக, சமாதானப் பேச்சுகள் பற்றிய குமாரதுங்கவின் பிரகடனங்கள் நாடகபாணியிலான திரிபுகளாலும் திருப்பங்களாலும் நிறைந்து போயுள்ளன. முன்னர் மத்தியஸ்தராகக் கடமையாற்றிய நோர்வே இப்போது `விடுதலைப் புலிகளுக்கு சார்பாக' இருப்பதாக் குற்றம் சாட்டும் ஜே.வி.பி. யினதும் மற்றும் ஏனைய சிங்களத் தீவிரவாதக் குழுக்களினதும் எரிச்சலுக்குள்ளாகியுள்ளது. ஜே.வி.பி.யினரின் விமர்சனங்களுக்கு முகம் கொடுத்த குமாரதுங்க, நோர்வே அலுவலர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தியபோதிலும் நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்யவும் மற்றும் பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு திகதியை அறிவிக்கவும் அவர்களை அனுமதிக்க மறுத்து விட்டார்.

யூன் 8 நாடாளுமன்றத்திலான குளறுபடிகளை அடுத்து, விடுதலைப் புலிகளுடன் அணி சேர்ந்துள்ள தமிழ்க் கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் குமாரதுங்க பேச்சுவார்த்தை நடத்தினார். தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதி விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகார சபை கோரிக்கையையிட்டு அக்கறை செலுத்துவதாக வாக்குறுதியளித்தார் என ஊடகங்களுக்குத் தெரிவித்தார். உடனடியாகக் கூடிய ஜே.வி.பி.யின் அரசியல் குழு, தன்னாட்சி அதிகாரசபை பற்றிய பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டால் `கடுமையான நடவடிக்கைகள்' எடுப்பதாக ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்தது.
குமாரதுங்க அவரது தொலைக்காட்சிப் பேச்சில் பின்வாங்கினார். எதுவும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் பிரகடனம் செய்தார். `இரு கட்சிகளும் அடுத்த சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதைப் பற்றியதாக இருக்க வேண்டும் என்பதையிட்டு இன்னமும் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன' என அவர் தெரிவித்தார். அவரது அறிக்கை விடுதலைப் புலிகளின் ஆத்திரத்தைத் தூண்டியதோடு, அவர்கள் முன்னைய வாக்குறுதியைக் கைவிட்டதற்காக குமாரதுங்கவைக் குற்றம்சாட்டியதுடன், அவரது `வஞ்சகத் தன்மையையும்' கண்டனம் செய்தனர். விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகள் முடிவின்றி தாமதப்படுத்தப்படுமானால் மீண்டும் யுத்தத்திற்கு திரும்பவேண்டி வரும் என எச்சரித்ததோடு பேச்சுவார்த்தைக்காக கொழும்பு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு `சர்வதேச சமூகத்தை' தூண்டினர்.

அதேசமயம், வாழ்க்கை நிலைமைகள் மீதான தொடர்ச்சியான வீழ்ச்சியையிட்டு அதிகரித்து வரும் அதிருப்திக்கும் புதிய அரசாங்கம் முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. கடந்த சில வாரங்களாக அரிசி உட்பட அடிப்படைப் பொருட்களின் விலைகளில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மே மாதத்தில் மாத்திரம் 3.598 வரை 120 புள்ளிகளால் அல்லது 3.5 வீதத்தால் அதிகரித்தது.

தேர்தலின்போது சுதந்திரக் கூட்டமைப்பு ஐ.தே.மு.அரசாங்கத்தின் பொருளாதார மறுசீரமைப்பைக் கண்டனம் செய்ததோடு, அதன் கொள்கைகளை தலைகீழாய் மாற்றுவதாகவும் வாக்குறுதியளிப்பதன் மூலம் வெகுஜனங்களின் அதிருப்தியை சுரண்டிக் கொண்டது. இப்போது அதிகாரத்துக்கு வந்த பின்னர், சுதந்திரக் கூட்டமைப்பிற்கு தமது கொள்கைகளை அமுல்படுத்த நிதி பற்றாக்குறையாக இருப்பதோடு மற்றும் பொருளாதார மறுசீரமைப்பையும், தனியார் மயமாக்கலையும் முன்னெடுக்கக் கோரும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் அழுத்தங்களுக்கு உள்ளாகி வருகின்றது.

சுகாதாரத் துறை தொழிற்சங்கங்கள், கணிசமான சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும், இல்லாவிடில், தீவு பூராவுமான காலவரையறையற்ற வேலை நிறுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி வரும் என அரசாங்கத்துக்கு இறுதிக் கெடு விதித்துள்ளன. பல்தேசிய பாட்டா நிறுவனம் உட்பட தனியார்துறை ஊழியர்கள், வெளியேறும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் நட்டஈட்டை குறைப்பதற்காக ஐ.தே.மு.உருவாக்கிய சட்டத்தை திருத்தியமைக்குமாறு அரசாங்கத்தை நெருக்குவதற்காக ஒரு பிரசாரத்தை முன்னெடுத்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் யூன் 17 அன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவது மற்றும் வடக்கு, கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது உட்பட 4 கோரிக்கைகளை முன்வைத்து 50,000 பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர். கணிசமான

(தொடர்ச்சி 26ம் பக்கம்)


# 'ஈராக்கின் அதிபர் நானே புஷ்தான் உண்மையான குற்றவாளி' சதாம் முழக்கம்

அமெரிக்க படையினரால் சிறைக் கைதியாக பிடிக்கப்பட்டிருக்கும் ஈராக்கின் முன்நாள் அதிபர் சதாம் ஹுசேன் கடந்த வியாழக்கிழமை ஈராக்கிலுள்ள அவரது முன்னாள் மாளிகையொன்றில் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டார். அவர்மீதான குற்றப்பத்திரிகையை விசாரிப்பதற்கு முன் அவரைப் பார்த்து நீங்கள் யாரென்று நீதிபதி கேட்டபொழுது 'நான்தான் சதாம் ஹுசேன் ஈராக்கின் அதிபர்' என்று உரத்த குரலில் கூறினார். இல்லை நீங்கள் முன்னாள் அதிபர் என்று நீதிபதி



கூறியபொழுது இல்லை நான்தான் இப்பொழுதும் ஈராக்கின் அதிபர் என்னை விசாரிப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லையென்று ஆத்திரத்தோடு கூறினார். தன்னுடைய சட்டத்தரணிகள் இல்லாமல் தன்னால் எந்தவித ஆவணங்களிலும் கையெழுத்திட முடியாது என்றும் அவர் மறுத்தார். குவைத்தை ஆக்கிரமித்ததாக அவர் மீது குற்றம் சுமத்தியபொழுது அதில் என்ன தவறு இருக்கிறது எமது பெண்களை குவைத்தியர்கள் பத்து டினாருக்கு விலைக்கு வாங்கும்பொழுது உங்களைப்போல பார்த்துக்கொண்டிருப்பதற்கு நான் ஒன்றும் கோளையல்ல என்று சதாம் சத்தமிட்டார். ஈராக் படைகள் குவைத்திற்குப் போனது சட்ட ரீதியானதே என்றும் அந்தச் சட்டத்திற்கு எதிராக ஈராக்கின் அரசியல் யாப்புப்படி கேள்வி எழுப்பும் அதிகாரம் எங்கிருந்து வந்தது என்றும் சதாம் கேள்வியெழுப்பினார்.

உங்களால் சட்டத்தரணிக்கு பணம் கட்டமுடியுமா என்று நீதிபதி கேட்டபொழுது மில்லியன் கணக்கில் நான் சுவிஸ் பாங்கில் பணத்தை ஒழித்துவைத்திருப்பதாக அமெரிக்கர்கள் கூறுகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது என்னிடம் எப்படி சட்டத்தரணிக்கு கொடுப்பதற்கு பணம் இருக்கும் என்று சதாம் திருப்பிக்கேட்டார். துருக்கிய மக்களை விச



வாயு மூலம் கொலைசெய்த குற்றம் சுமத்தப்பட்டபோது அப்படியொரு சம்பவம் நடந்தது எனக்குத் தெரியாது என்று சதாம் மறுத்துரைத்தார். அமெரிக்கப் படைகளும் அதன் கூட்டணிப் படைகளும் ஆக்கிரமிப்புப் படைகள் என்றும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்தான் உண்மையான குற்றவாளி என்றும் சதாம் முழக்கமிட்டார்.

கடந்த ஏழுமாத காலமாக அமெரிக்க படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சதாம் ஹுசேன்



நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தபொழுது கைகளிலும், கால்களிலும் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையிலேயே அழைத்துவரப்பட்டிருந்தார். அவர் மிக கம்பீரமாக அதிகார தோரணையில் உலா வந்த



மாளிகையில் சிறைக் கைதியாக அழைத்து வரப்பட்ட காட்சி ஈராக் மக்களை உருக்கியதாக அல்ஜசீரா தொலைக்காட்சி செய்திவெளியிட்டிருந்தது. சதாமுக்கு ஆதரவாக அவரது வழக்கில் வாதாடுவதற்கு ஜோடானில் இருக்கும் அவரது மனைவி உலகிலுள்ள பிரபல வழக்குரைஞர்களை ஏற்பாடுசெய்து வருகின்றார். சதாமுக்காக வாதாடும் வழக்குரைஞர்களில் லிபிய அதிபர் கடாபியின் மகளும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. சதாம் ஹுசேனுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் எனப் பல்வேறு ஊகங்கள் கூறப்படும் நிலையில் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த பல நாடுகள் இதற்கு எதிர்த்துக் குரல்கொடுத்துள்ளன.


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னைமடியில்
06.06.1930

ஆண்டவன்மடியில்
14.05.2004

### திருமதி பிரான்சிஸ் அனந்தாசி

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை பிரிந்து
அகன்றாலும் என்றென்றும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
கண்ணீருடன் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலமாக எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
பி.டெலாசாள்ஸ்(மகன்)
கொ.றொபேட்(மருமகன்)
தொலைபேசி.05725 708 522

இவரின் பிரிவால் துயருறும்
சகோதரன் (கொஸ்தீன்) மைத்துனி
மகன்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## மினி சுற்றுலா

**Paris -Lourdes /Lourdes -Andora**
**Andora-Paris**

பயணச்சீட்டு, தங்குமிட கட்டணம், சனி காலை, மதியம், இரவு, ஞாயிறு காலை உணவு அனைத்துடனும்
*பெரியவர்கள் 150 ஈரோ*
*சிறியவர்கள் 110 ஈரோ*

**Aller**
**09.07.2004**
**06.08.2004**
**20.08.2004**

சிறிய விடுமுறையில் லூர்து அன்னையின் தரிசனம் பெற்று அந்தோரா மலை பிரதேச காட்சிகளை பார்த்து மகிழவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**Retour**
**12.07.2004**
**09.08.2004**
**23.08.2004**

மேலதிக விபரங்களுக்கு 06 60 92 12 69 / 06 63 31 49 32

**தீபம் புடவை கடை**
**7 Rue perdonnet, 75010 Paris**
**La Chapelle**

கஜன் / செல்வம் **சுமங்கலி புடவை கடை**
***199* Rue Faubourg S' denis**
**75010 Paris ,Mo La chapelle**

## வாடகைக்கு

1 Salon séjour cuisine, WC, Douche Lavabo, 1 chambre. சகல வசதிகளுடனமைந்த புதிய இரு அறைகள் கொண்ட (F2) வீடு வாடகைக்கு உண்டு. 2 நிமிட நடைதூரத்தில் La Courneuve métro, Carrefour, Centre Comerciale 5 நிமிடங்களில்

**வாடகை: மாதம் 535 ஈரோக்கள்**
**தொலைபேசி: 06 74 39 59 02**

## மணமகன் தேவை

தமிழீழம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 39 வயதுடைய பட்டதாரிப் பெண்ணிற்கு (விவாகரத்தானவர் பிள்ளைகள் இல்லை) பெண்வீட்டார் மாப்பிள்ளை தேடுகிறார்கள்.

தொடர்புகள்:
06 67 03 23 82 (பாரிஸ்)/ 07 73 94 416 (கொழும்பு)

## உணவகம் வாடகைக்கு உண்டு



வாடகை
2164Euro
(14194.91F)

பாரிசிலிருந்து 25 கிலோமீற்றர் தூரத்திலுள்ள பொசாம்ப் பகுதியில் இந்திய உணவகம் வாடகைக்கு உண்டு. 200 சதுரமீற்றர் உணவகத்துடன் 4அறை கொண்ட வீடும் உண்டு. 1000 சதுர மீற்றர் பரப்பளவில் வாகனம் நிறுத்தும் வசதியும் உண்டு. தொடருந்து நிலையத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. முற்பணம் 145, 000 ஈரோ. (951,127.65 F) 10 km சுற்றளவில் வேறு இந்திய உணவகங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புகளுக்கு: 06 67 63 99 68 / 06 60 56 49 76



## சிறுகதை

(3)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அப்பாவின் விருப்பம் போலவே எல்லாம் நடந்து விட்டது. அப்போ என்னையும் அந்த விடுதியில் சேர்த்து

விடுவார்கள். பிறக்கப்போகிற தம்பி சிரிப்பான், நடப்பான், கதைப்பான்... கடைசியில நான் நம்பியிருந்த என்ர அம்மாவும் என்னை விலக்கி வைத்துவிடுவா. என்னை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. என் கண்களிலிருந்து ஓர் அருவி கட்டுப்பாட்டை உடைத்தபடி பெருக்கெடுத்தோடியது.

ஆதவன் ஏன் அழுகிறீங்கள்? அம்மா சொன்னது! பிள்ளைக்கு பிடிக்கல்லையா உங்களுக்கு தம்பி பிறக்கிறது விருப்பமில்லையா? அவன் பிறந்தா உங்களுக்கு நல்ல நண்பனா இருப்பான். உங்களோட விளையாடுவான், கதைப்பான் என அம்மா கூறியதையே கூறிக்கொண்டு போனா. அதுதான் அதுதான் எனக்கு பிடிக்கவில்லை என்று இந்த அம்மாவுக்கு நான் எப்படி புரியவைப்பது? என புரியாமல் குழம்பினேன். அதன்பின் நான் ஒரு வாய்கூட சாப்பிடவில்லை என் கோபத்தை வெறுப்பை வெளிப்படுத்த இதை தவிர

எனக்கு வேறு வழியே புரியவில்லை.

ஆனால் எனக்கு கேள்விபட்ட நாள் தொடக்கம் வலிக்கிறது. என் விருப்பு வெறுப்புக்களை உணர்ந்த அம்மா இந்த விடயத்தில் மட்டும் என்னை புரியாமல் போனது ஏன் என என்னை நானே கேள்வியால் துளைத்து துளைத்து

அந்த கேள்விக் குறிபோல் நானும் வளைந்ததுதான் மிச்சம். அம்மா ஆஸ்பத்திரிக்கு போகுமுன் என்னை கட்டிப்பிடித்து முத்தமிட்டு என்ர பிள்ளையை கவனமா பார்த்துக்கொள்ளுங்கள் என அப்பாவிடம் வரம் கேட்டு நின்றா.

நளினி நீர் அம்மா என்றால் நான் அப்பா அதை நினைவில வைத்துக்கொண்டு கவலைப்படாமல் போயிற்று வாரும். என அம்மாவுக்கு நம்பிக்கை ஒளியூட்டினார். அம்மாவின் விழிகள் என்னை விட்டு பிரிய மனமின்றி என்னையே பார்த்தபடி இருந்தது. ஆனால் நான் வேண்டுமென்றே முகத்தை திருப்பிக்கொண்டேன். வெளியே அம்மாவை ஏற்றிய அம்புலன்ஸ் வண்டியின் சத்தம் என் இதயத்தில் வலியை மிகப்படுத்தியது. அடுத்தநாள் நானும் அப்பாவும் ஆஸ்பத்திரிக்கு செல்லும்பொழுது அப்பா என்னுடன் அன்பா பேசியபடியே வந்தார். ஆனால் எனக்குத்தான் அப்பாவுடன் ஒட்டவேமுடியவில்லை. ஆஸ்பத்திரியில் வெள்ளைக்கட்டிலில் என்ர அம்மா எனக்கு அம்மாவை கண்டதும் ஆசை ஆசையாக இருந்தது. ஆனால் அம்மாவின் மடியில் எனக்கு பிடிக்காத அந்த தம்பி பாப்பா! அம்மா என்னை பார்த்து சிரித்தபடி என் கையை பிடிக்க முயன்றா. நான் கையை நகர்த்திக் கொண்டேன். ஆனால் அம்மா விடவில்லை என் மடியில் தம்பியை படுக்கவைத்து

என் கையை தம்பியின் விரல்களுடன் இணைத்துவிட்டா. என்ன அதிசயம் எனக்குள் ஏதோ ஓர் உணர்வு புதிதாக பிறந்தது. தம்பி என் ஒருவிரலை இறுக பிடித்தபடி என்னை பார்த்து சிரித்தான். எனக்கும் அவனின் விரல்களை இறுகபிடிக்கவேண்டும்போல் இருந்தது.

வீட்டுக்கு வரும் வழியிலும் வீட்டுக்கு வந்த பின்பும் என் நினைவுகள் தம்பியை சுற்றி சுற்றியே வட்டமிட்டன. அவனின் விரல்கள்பட்ட என் கையை தடவி பார்த்தேன். மறுபடியும் அவனை பார்க்க வேண்டும்போல் தோன்றியது.

என்னை தனிமைப்படுத்தி விட்டார்கள். முன்புபோல் அம்மா எப்போதும் என்னை அணைத்தபடி துாங்குவதே இல்லை. அடிக்கடி தம்பியிடம் செல்கின்றா. தனிமையில் இருக்கும் பொழுதெல்லாம் இரவுகள் பகலைவிட நீண்டாதகவும் அந்த இருட்டு மனதிலிருக்கும் தைரியத்தை விரட்டியபடி இருக்கும். என் மனமோ அம்மாவின் அருகாமையையும் அணைப்பையும் தேடிக்கொண்டே இருக்கும்.

தனிமையிலிருக்கும் நேரங்களில் வானத்தை துணைக்கழைத்து, அதனுடன் என்னை கரைத்துக் கொண்டே இருப்பேன்?. அன்றும் அப்படித்தான் பௌர்ணமி நிலவு கண் இமைக்கும் பொழுதுக்குள் தேய்ந்துகொண்டே இருந்தது. ஏன் இப்படி தேய்கிறாய்? உனக்கென்ன உன்னை சுற்றி எத்தனை நட்சத்திர குழந்தைகள்



இருக்கிறார்கள். ஒருவேளை அவர்களுக்கு வேலை செய்து தேய்ந்து போகின்றாயோ? என் அம்மாவைபோல. அம்மாவின் நினைவு மனதை தொட்டதும் திரும்பி பார்த்தேன். தம்பிக்கு பால் கொடுத்தாலும் எப்போதும்போல் விழியும்

பிரவாகித்துக்கொண்டிருக்கும் அறிவையும் முதிர்சியையும் யாரும் அறியப்போவதுமில்லை. நானும் அதை உணர்த்தப்போவதுமில்லை. எப்படி உணர்த்த முடியும்? இந்த இயற்கை படைத்த மரம், செடி, கொடிகளுக்குள்ளும் உயிர் உணர்வு இருக்கிறது

என்பதை யாரும் உணர்ந்ததுமில்லை, அதை மனிதர்களுக்கு உணர்த்த அவை முயன்றதுமில்லை. நானும் அப்படித்தானே அம்மா. எப்படி என் அன்பை தெரியப்படுத்துவேன். உங்களை புரிந்து கொண்டதை எப்படி அம்மா வெளிப்படுத்துவேன்?

நீங்கள் என்னால்படும் துன்பங்கள் துயரங்கள் எல்லாம் பறவையதன் சிறகு நனைந்தபின அதற்கே சுமையாக இருப்பதுபோல்தான் என்னை பெற்று எனக்கு ஆதவன் என்ற பெயர்சூட்டி உங்கள் வாழ்வுக்கு ஒளி கொடுக்கப்போகின்றேன் என்ற கற்பனையை வளர்த்த உங்கள் வாழ்க்கையை இருண்ட பாலைவனம் ஆக்கியவன் என்பதுமட்டும் என்னால் தாங்க முடியாமல் இருக்கிறது அம்மா. என் ஆசை அம்மாவே கடல்கள் கூட தன் வயிற்றில் விலை உயர்ந்த முத்துக்களை பதுக்கி வைத்துக் கொண்டு தனக்கு தேவையில்லாத சிப்பியையும் ஊரியையும் கரைகளில் தள்ளிவிட்டு செல்கின்றது. இயற்கை கூட வேண்டாததை ஒதுக்கும் பொழுது, ஒன்றுக்கும் பிரயோசனமில்லாத என்னை கண்ணுக்குள் வைத்து பாதுகாக்கும் உங்களை... நான் தெய்வத்தை பார்த்ததில்லையே அம்மா உங்கள் வடிவில்தானே தெய்வத்தை பார்க்கிறேன்.
அம்மா நான் உங்களுக்கு பாரமாக இருக்கக் கூடாது என்று அடிக்கடி நினைத்து பார்க்கிறேன். உங்களுக்கு இப்போ தம்பி இருக்கிறான். அவன் உங்களை பார்ப்பான்.

ஆனால் நான்...

இந்த உலகில் வாழ்ந்தவைகள் எல்லாம் தானும் வாழ்ந்தோம் என்பதற்கு அடையாளமாக ஏதாவது ஒன்றை தன் பெயர் சொல்ல வைத்துவிட்டுதான்

# உவனமது நல் அழகே

அம்மாவின் முகம் வாடிவிட்டது. என் அபிலாசைகளை புரியாத அம்மாவுக்கு இது வேணும். இப்படித்தான் செய்வேன். எனக்கு இந்த அம்மாவும் வேண்டாம். அன்றிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அம்மாவிடமிருந்து விலக ஆரம்பித்தேன். என் செய்கையால் அம்மா பழையபடி சிரிப்பை தொலைத்து வாடி நிற்பதை பார்க்க பாவமாக இருக்கும். இருந்தும் நான் என்னுடைய பிடிவாதத்தை விடுவதாயில்லை. நான் விரும்பாத அந்த நாளும் பிறந்தது. அவர்கள் விரும்பியதுபோல் தம்பி பாப்பாவும் பிறந்தான். அம்மா வயிற்று வலியால் துடிக்கும்போதும் என்னை பார்த்து பார்த்து அழுதா. எனக்கும் அழுகை அழுகையாகவந்தது. ஆனால் நான் அழவில்லை. ஏன் அழவேண்டும்? அம்மாவுக்கு இப்பத்தானே வலிக்கிறது.

இப்பொழுதெல்லாம் எங்கள் வீட்டில் தம்பியின் அழுகை ஒலியும் சிரிப்பொலியும் மாறி மாறி

ஒலித்தபடியே இருந்தது. சில சமயம் எனக்கு அச்சத்தம் என் அமைதியை குலைப்பது போலிருக்கும். ஆனால் அதுதானே அப்பாவிரும்பியது. அதனால் அப்பா எப்போது பார்த்தாலும் தம்பியை பற்றிபேசிப்பேசியே காலத்தை கழித்துக்கொண்டு இருந்தார். ஆனால் அம்மா மட்டும் மாறாது என்னுடனேயே தன் பெரும்பாலான நேரத்தை செலவிட்டபடி இருந்தா. என்றாலும் என் முழுநேரத்தில் ஒரு பகுதியை தம்பி ஆக்கிரமித்துள்ளது எனக்கு பிடிக்கவே இல்லை.

இப்பொழுதெல்லாம் இரவில் தம்பி அழுது என் துாக்கத்தை குழப்புகிறான் எனக் கூறி எனக்காக தனி அறை ஒதுக்கி

மனமும் என்மீதே படர்ந்து கொண்டிருந்தது. ஆனால் நானோ நிலவின் ஒளியை விரும்பாமல் மறையும் சில சின்ன மனிதர்களைப்போல என் பார்வையை திருப்பிக்கொண்டேன். அம்மா அடிக்கடி கூறுவா ஆதவன் உலகில் வாழும் உயிரினங்களுகெல்லாம் இறைவன் இரண்டு விழிகளை கொடுத்தாலும் அவை இரண்டாலும் ஒரு திசையைத்தான் பார்க்க முடியும். அதுபோலத்தான் நானும். என் விழிகள் எப்போதும் உன்னைத்தான் தேடிக்கொண்டே இருக்கிறது. அது உனக்கு புரியாமல் நீ அடிக்கடி என்னை கவலைப்படுத்துகிறாயே ஏன்?

எனக்கும் என் உள்ளுணர்வுகளை கொட்ட வேண்டும்போல் இருந்தது. கண்கள் தன்னை பாதுகாக்கும் இமைகளை எப்போதும் பார்த்ததே இல்லை. அதுபோல்தான் என்னுள்

மறைகின்றன. ஆனால் நான் என்னத்தை அம்மா உங்களுக்கு என் நினைவாக வைத்துவிட்டு போகப்போகிறேன். என்னோடு வாழ்ந்த நினைவுகளையும் இந்த சக்கர நாற்காலியையும் தவிர.

**நின்னை சில வரங்கள் கேட்பேன் –**
**அவை**
**நேரே இன்றெனக்கு தருவாய் என்றன்**
**முன்னைத் தீயவினைப் பயன்கள் –**
**இன்னும்**
**மூளா தழித்திடுதல் வேண்டும் – இனி**
**என்னை புதியவுயிராக்கி – எனக்**
**கேதும் கவலையறச் செய்து – மதி**
**தன்னை மிகத்தெளிவு செய்து – என்றும்**
**சந்தோஷம் கொண்டிருக்கச் செய்வாய்.**

சாந்தினி வரதராஜன்
(ஜேர்மனி)

CREDIT
வங்கிகடன்
S.A.NATHAN

S.A. Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.


வங்கி
கடன் பெற
விரும்புகின்றீர்களா ?
B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

# கரும்புலிகள் நாள் 2004











# கரும்புலித் தாய்

( நாடகம் )

**(இளவேனிற் கால மாலைப்பொழுதில் பனந்தோப்பு ஒன்றுள் வீட்டின் முன்றலில் கரும்புலியின் தாய் அமர்ந்திருக்கிறாள். தாயகம் திரும்பிய இன்னொருதாய் அவள் அருகே இருந்து அவளுக்கு ஆறுதல் சொல்கிறாள். தோப்பின் அருகே உள்ள குடிலில் தெருவீதி நாடகக்கலைஞர்கள் களைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள்)**

**கரும்புலி வீரனது தாய்:–** நீ யாரம்மா என்னை அழ வேண்டாம் என்று சொல்வதற்கு?

**தாயகம் திரும்பிய பயணி ஒருத்தி:–** நானும் உங்களைப் போல ஒரு தாய் தான். கண்ணீரைப் பார்க்கமுடியாமற் சொல்லி விட்டேன்.

இந்த வசந்த கால மாலைப் பொழுதில் பட்சிகள் யாவும் கூடுகளுக்குத் திரும்புகின்றன. நீ அவற்றைக் கண்டு மனம் இரங்கி இரங்கி அழுவதை என்னால் தாங்க முடியாமல் இருக்கிறது. உனது உடலை ஒரு நரம்பு வாத்தியமாக மீட்டுகிறாய். உனது பாடலை எந்த கவிஞனால் மொழிபெயர்க்க முடியும்? உனது அழுகையை நான் கடலுக்கு ஒப்பானதாகக் காண்கிறேன்.

என்ர கதையை விடம்மா!

நீண்டு கொண்டு அலையும் நதிக்கொப்பானதாக அது இருக்கிறது. எனது பிள்ளைகள் காணாமல் போய் விட்டார்கள்? அவர்களை எங்கு தேடி காண்பேன்? மீள முடியாத தொலைவிற்கு போய் விட்டார்கள். அவர்களில் நிறைய மாற்றங்கள்? தெருக்களில் அலைகிறார்கள்.

**கரும்புலி வீரனது தாய்:–** ஒரு காலத்தில, எனக்கு மட்டும் தான் அவன் குழந்தையாக இருந்தான். எனக்கு மட்டுமே.

அவன் குழந்தையாக இருக்கையில் நிலா, நிலா மலைமேல் ஏறி மல்லிகைப் பூ கொண்டுவா என்று மழலைப்மொழியக் கேட்டு புழுதி மண்ணில கூத்தாடுவானடி.

சின்னப் பெண்ணே!

உதிரப் பூவையே சொரிந்து போனவனுக்கு என் கண்ணீரால் என்ன கெட்டுப் போகும்.

**தாயகம் திரும்பிய பயணி:–** முதலில் உங்களிடம் வரவேண்டாம் என்று தான் நினைத்திருந்தேன். உங்களை பார்க்காமலே போய் விடுவோம் என்று நினைத்தேன். ஆனால் என்னை காலம் இழுத்து வந்து விட்டது.

அம்மா, உங்களுடைய வார்த்தைகளால் எனக்குச் சில ஆறுதல் மொழி சொல்லுங்கள்.

நாங்கள் கானல் நீர் வரிகளைக் கண்டு கூட்டம் கூட்டமாக ஓடுகிற குதிரைகளைப் போல ஆகிவிட்டோம்.

ஆம், மிக நன்றாக ஓடக் கூடிய குதிரைகள். பண்ணைக் காரனுக்கோ மட்டற்ற மகிழ்ச்சி. அவன் தொழுவங்களைக் கூட காற்றோட்டமாக வைத்திருக்கத் தேவையில்லை. குதிரைகளுக்குத் தண்ணி காட்டினால் போதும். படங்களில் விருப்பமானவற்றை பெரிதாகக் காட்டினாலே போதும். கானல் வரியைக் கண்டே ஆறுதான் என்று நம்பி ஓடும் அளவிற்கு கதை மாறி விட்டது. வேகம், சுழற்சி, தாளக்கட்டு உடையாத குளம்பொலியை அவை எந்நேரமும் சுருதி பிசகாமல் எழுப்பும். அதற்கான பல பொறிகள், கண்ணிகள் பண்ணைக்காரனின் பாட்டனார் காலத்திலிருந்தே ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதால் மீள முடியாத தொலைவிற்கு மூச்சு இரைக்க ஓடுவதே விதியாகி விட்டது.

குதிரைகளை யாரும் வலிந்து கட்டி இழுத்துக்கொண்டு வர வேண்டிய தேவையேதும் இருக்கவில்லை.

அக்கம் பக்கம் பார்க்காமல் நேர்ப்போக்கில் ஓடக் கூடிய மாதிரியான முறையில் மறைப்புக் கட்டப்பட்டிருக்கிறது. பயம் எதுவும் இல்லாமல் பந்தயத்தை நடத்திக் கொண்டிருக்கலாம். குதிரைகள் கோவேறு கழுதைகள் ஆகி பந்தையத்தில் பங்குபெற முடியாது போகையில் அவற்றின் மீது சீல் குத்துகிறாாகள்?. இறைச்சிக்காக என்று.

அம்மாவுக்கு எழுதிய கடிதத்தில் இதை பிற்குறிப்பாக இணைக்கவிருந்தேன். வேண்டாம் என்று விட்டு விட்டேன். அம்மாவும் ஏதோ தொழுவம் போன்ற வாழ்க்கையில் துன்பப்படுகிறவள். மாட்டுச் சாணமும், மூத்திரமும் கலந்த நெடில் வெக்கைக் காலத்தில் அவளில் ஒட்டியிருக்கும்.

எனது அண்ணன் கப்பலில் வேலைக்கு போய் வந்த கையோடுதான் குதிரை மாதிரி வளர்ந்திருக்கிறான் என்று ஊரார் ஆசைப்பட்டார்கள். பிறகு அதெல்லாம் உடைஞ்சு, நொருங்கி சிதைஞ்சு போனதெல்லாம். ஒரு நிமிடம் தான் ஒரு வருசத்தின் கணக்கு.

அதனால் என்ன? காலம் செட்டைக் கட்டிப் பறக்கிறது. மீள முடியாதத் தொலைவிற்கு பந்தையக் குதிரையைப் போல ஓடுதல்.. உலகத்தோட ஒத்து ஒழுகுதல்தானே.

**கரும்புலியின் தாய்:–** அவன் என்னில் மட்டும் தான் பாசமும், அன்பும் வைத்திருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

அது என்ர சுயநலம். நான் சுயநலக்காரிதான். அவன் அப்படிப்பட்டவன் அல்ல.

அவன் எல்லோருக்காகவும் வாழ்ந்து போனவன். அவன் உங்களுக்காகவும், உங்கள் துயரத்தை வெல்லுவதற்காகவும் போனவன்.

ஆனாலும் எனக்குள்ள ஒரு கேள்வி. ஒரு நெருப்பை எப்படி என் வயிற்றில் சுமந்திருந்தேன்?

எப்படி ஒரு கடலை சுமந்திருந்தேன்? எப்படி ஒரு புயல் என் வயிற்றுள் தாங்கிக் கொண்டிருந்தது?

அவன் வளரும் பொழுது அப்பேற்பட்டவனாகவே இருக்கவில்லை. அவன் அமைதியாகவே இருந்தான். அவன் எல்லாவற்றுக்கும் அடங்கிப் போகிறவனாகவே இருந்தான்.

**பயணி:–** காலதேவதை பல குழந்தைகளை நெருப்பாக பிறப்பித்து விட்டாள்.

நான் துயரப்படுகின்ற அளவிற்கு நேர்ந்து விட்டதைப் போல உங்களுக்கு நேரவில்லைத்தானே அம்மா.

அவர்கள் என் பிராணனை வாங்கினார்கள். அவர்கள் இறக்கை முளைத்தவுடன் பறந்து போய் விட்டார்கள்.

என்னை இளக்காரமாக பார்த்தார்கள். மொழி தெரியாதவளாக, கையாலாகாதவளாக பார்த்தார்கள். ஒழுக்கம், பண்பு எல்லாவற்றையும் கேள்விகளாகக் கேட்டார்கள். அவர்கள் இப்படித்தான் காணாமல் போகிறார்கள்.

ஆனால் உங்கள் குழந்தையோ எங்களுக்கு உயிரளித்தார்கள். அவர்கள் எங்களுக்கு குருதி வழங்கினார்கள். அவர்கள் எங்களுக்கு வாழ்வு தந்தார்கள். யுகங்களின் வலிகளைப் போக்கினார்கள்.

அடக்குபவன் எங்கள் முதுகுகளின் மேல் ஒரு பாலம் போடுகிறான். அந்தப் பாலத்தின் மீது அவனும் அவனது சகாக்களும் சவாரி செய்கிறார்கள்.

அவர்கள் யுகம் யுகமாக எங்களுக்கு கூலியென்றும், அடிமையென்றும் புதுப் புதுப் பெயர்கள் சூட்டுகிறார்கள்.

குட்டக் குட்டக் குனியக் கூடாது என்றும், உதைக்கிற காலை முத்தமிடக் கூடாதென்றும் உங்கட பிள்ளை சொல்லிற்றுப் போயிருக்கிறான். நீங்கள் ஏனம்மா அழுகிறியள்?

**தாய்:–** உன்ர கதையைக் கேட்க வேற எனக்கு நெஞ்செல்லாம் வலிக்கிறது. காற்றில் அவனின் குரலே கேட்கிறது. அவன் என்னை




நெருங்கி நெருங்கி வருமாற் போல இருக்கிறது. என் கிட்ட வந்து என் கண்களைப் பொத்தி கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டுகிறான்.

காலக் கடலில அவன்ர தோணி வலிப்ப பார்த்துக் கொண்டே இருக்கிறன். சுழியோடுறான் சுழியோடி. தன்னுள் பிரபஞ்சமே அடக்கம் என்கிறான்.

நெருப்பும், நீரும், நிலமும், ஆகாயமும், காற்றும் தன்னுள் உறங்குகிறது என்கிறான். தன்னை விரித்துக் காட்டுகிறான். தன்னை மறைத்துக் காட்டுகிறான்.

ஐய்யா! என்னைய்யா! எங்கயடா இருக்கிற எண்டால், சிரிக்கிறான். அதே சிரிப்ப எல்லாப் போராளிப் பிள்ளைகளின்




முகங்களிலையும் கண்டன். அவையளுக்குப் பின்னால ஓடுவன்.

என்ர பிள்ளையின்ர பெயரைச் சொல்லிக் கூப்பிடுவன். ஆசையா அரவணைச்சு மென்மையான கரங்களால் எனது தலையை நீவி விடுவார்கள்.

அவர்களுக்குள் அவன். அவனுக்குள் அவர்கள்.

**பயணி:–** அம்மா! அவன் போனவன். இனி எங்க திரும்பி வரப்போறான்! கவலைய தூக்கி எறியுங்கோ. எல்லாவற்றையும் மறந்து போய் விடுங்கோ. இந்தக் கணத்தில் வாழுங்கோ.

**கரும்புலி வீரனின் தாய்:–** அவன் எல்லோரையும் போல போயிருந்தா எனக்கு என்னம்மா? மறந்து போய் விடுவதற்கு. அவனுடைய போக்கு வித்தியாசமானது. இறுகிப் போன காலத்தை ஊடறுத்து மாற்றத்தை கொண்டுவந்த போக்கு அவன்ர போக்கு. இந்தக் காலத்தில. இந்த யுகத்தில இந்த அடிமைப்பட்ட இனத்தின்ர மானம், ரோசம், கௌரவம், சுதந்திரம், வாழ்வு, விடுதலை, சிரிப்பு, அழுகை, ஆசை, கனவு, மோகம், விளையாட்டு, பாடல், இசை, இலக்கியம், நாடகம், ஆன்மா எத்தனைக்காக?

அவன் எந்த கோசமும் செய்யாமல் ஒரு சலிப்பும் இல்லாமல் விமர்சனம் இல்லாமல் அவன் நேசிக்கும் மக்களை குழந்தையைப் போல தன் கைகளில் ஏந்தினான். இந்த பண்பு அவனுக்கு எப்படி வாய்த்தது? யார் சொல்லிக் கொடுத்தது?

நாங்க யார்? வருசக் கணக்கா சொன்னாலும் விளங்காது! அரசியல் பாடத்திலும் சரி ஆன்மீகப் பாடத்திலும் சரி. யாரால எப்படி புரிய வைச்சிருக்க முடியும்? யார் அவனுக்குள் அந்த உன்னதங்களை தோற்றுவித்தது? எப்படி அவனால் இந்த மண்ணில் மிகப் பெரிய கூத்தை நிகழ்த்த முடிந்தது?

அங்க பார் தெரு நாடகக்காரர்கள் காதைத் தீட்டிவைத்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருப்பதை!

**வீதி நாடகக்காரர்கள்** (சிரிக்கிறார்கள்):- சொல்லுங்கோ! சொல்லுங்கோ நாங்களும் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**தாய்:–** நான் வயதானவள் ஐயா! நான் துர்ப்பாக்கியசாலி!

எவ்வளவு காலம் சேவகம் செய்தே வாழ்ந்து முடிந்து போய் விட்டது!


தோல்கள் சுருங்கிக் கொண்டு போகின்றன. என்ர மனுசனும் அடியா அடிச்சு. கும்பிட்டு. விழுந்து எழும்பி காலத்தை கழிச்சிட்டுப் போயிட்டார். வெள்ளைக்காரனுக்கு குதிரை வண்டி ஓட்டி முடிஞ்சு வேலையில்லாமல் போனப் பிறகு. அவர் யாற்றையோ காலைக் கையைப் பிடிச்சு. சிங்கள மந்திரி எரிக்கிற கோடையில மழை மேகம் திரண்டது போல வந்து போன ஒரு நாள். கிடைச்ச வேலையை வைச்சு வயிறு கழுவினம். இப்படித்தான் எங்கட காலத்தை ஓட்டினம்.

என்ர பிள்ளையப் பெத்ததால நான் யுகம் யுகமா வாழுறன். எனக்கு ஒரு வருத்தமும் கிடையாது ஐயா! ஆனா நீங்கதான் என்ர குழந்தையின் பாட்டப் பாடுறியளே!

அவன் அடக்கப்படுகின்ற இனத்தின்ர நெருப்பெண்டு குரல் எடுத்து பாடுறியள். கேட்கிறான்.

எனக்கும் தெரியும். இருந்தும் ஏழை மனசு கேட்குதில்லை. எந்த பிரகடனங்களும் செய்யாமல் அமைதியாக மிக அமைதியாக அடக்கு முறையாளனின் தோளை தட்டின கதைய நீங்க தெருத்தெருவாச் சொல்லுறத கேக்காமல் பாக்காமலா இருக்கிறன்.

அவன் எதில அளவு கடந்த பிரியம் கொண்டிருந்தான்? அதை மக்கள் உணர வேண்டும் என்று கூட அவன் அலட்டிக் கொள்ளவே இல்லை. அவனுக்கு எந்த தேவையும் கிடையாது. எந்த விருப்பமும் கிடையாது. எல்லாப் பிரசங்கங்களையும் அவன் தோற்கடித்துவிட்டான்.



செயலுக்கு மட்டும் தான். மற்றப் பிள்ளைகளுக்கு இருக்கிற மாதிரி சின்னச் சின்ன ஆசைகள்.

பட்டு பீதாம்பரம். ஆடம்பரம். டாம்பீகம்..... அட. ஒரு சாதாரணமா ஒரு மனுசனாக் கூட இல்லாமல் போய் விட்டானே. புகழ், ஆசை, பணப்பட்டுவாடா, அவாஞ்சை, அடுத்துக்கெடுக்கிறது, அள்ளிவைக்கிறது, எரியிற வீட்டில புடுங்கின கொள்ளி லாபம் எண்டு பார்க்க. எந்த நாய் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்டு சும்மா இருக்க. யார் குத்தியெண்டால் என்ன அரிசி ஆகட்டும் என்று இருக்க முடியாமல் உடலை வீசி எறிந்தவன்!

பெயரை வீசி எறிந்தவன்.

நான் ஏன் அழுகிறன்?

நெக்குருகி. நினைந்து மெய்யாரப் பாடி அழுகிறன்!

அதோ!! ஒரு வெளிச்சம் வருகிறது. அந்த வெளிச்சத்தின் ஊடு பாய்ந்து வருகிறது குதிரைகள். காலக் கனைப்பொலிக் கேட்கிறது.

மாமிசக் கண்களுக்கு அவை அகப்படாது.

பாவம் செய்யாத மக்களை சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்வதற்காக. அதோ வருகிறது...

ஆதலால் எல்லோரும் நன்கு உற்றுப் பாருங்கள். மீட்பர் வர இருக்கிறார்.

எல்லா ஆகமங்களையும் எல்லா வேத வாக்கியங்களையும் வீசி எறிந்து விடாதவர்களால் மட்டுமே அவரைக் காண முடியும்.

இப்படிக் கதையள் போகுது. ஆனால் கண்ணுக்கு முன்னால காலம் நின்றது, பிறந்தது, தவழ்ந்தது, எழுந்தது.

(பயணியைப் பாாத்து) நீ வானத்தின் முடிவை அறிந்திருப்பாயா? அல்லது அறிந்துதான் முடிப்பாயா?

நீ காணுகின்ற வானத்தோடும், பூமியோடும், காற்றோடும், முடிவின்றி கலந்து போனவன்.

நான் கண்ணீரின் நதியில் நீந்தி கரை சேர நினைக்கிறன்.

அவன் நிர்வாணி அவர்களும் நிர்வாணிகள்.

அவர்கள் அப்படித்தான் இருந்தார்கள்.

(நிலவு பனந்தோப்புள் விழுக்கின்றது அவள் தனித்திருக்கிறாள். பனந்தோப்புக்கு அருகிலுள்ள கிராம வீதியில் தெருக்கூத்துக் கலைஞர்கள் தாளம் இசைத்த படி கூத்திடுகிறார்கள். தாயகம் திரும்பிய பயணி கையசைத்தபடி புறப்படுகிறாள்).

பாடல் ஒலிக்கிறது.

*காற்றின் தோளில் ஏறி வா மகனே*
*கடலின் முதுகில் ஏறி வா மகனே*
*காலநதியில் நீந்தி வா மகனே*
*கருமுகில்களுள் இறங்கி வா மகனே*

**– பேரிலான்**

03.07.2004

# கோடிக்கணக்கான நூற்றாண்டுகளுக்கு பின்னரும் பேசப்படப்போகும் வரலாறு !

கடலன்னையின் பெண் குழந்தை

கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் நளாயினி அவர்கள் அங்கயற்கண்ணியிடம், என்னம்மா ஏதாவது சொல்ல நினைக்கிறாயா ? என்று கேட்டார். தயக்கமில்லாமல் மிகத் தெளிவாக அங்கயற்கண்ணியிடமிருந்து பதில் வந்தது....

'உங்கட அன்பும், அண்ணையின்ர (தலைவரின்) அன்பும் எப்பவும் எனக்கு இருக்கவேணும்'

தாயை நேசிப்பதையும் விட அதற்கும் மேலாக தலைவரையும், தன்னை வளர்த்துவிட்ட பொறுப்பாளர்களையும், தாயகத்தையும் நேசிப்பவர்கள்தான் கரும்புலிகள்.

உயர உயர அலைகளை வீசியெறியும் கடலுடன் நெருங்கிய நேசமான உறவை வைத்திருக்கும் அந்தக் கடற்கரை ஓரே வெண்மணல் பிரதேசம். சாதாரணமாக எந்த ஒரு இளம் பெண்ணுக்கும் இந்த வெண்மணற் பரப்பைப் பார்த்தால் தோழியருடன் ஓடிப்பிடித்து விளையாடத் தோன்றும். நீச்சல் பயிற்சியில் ஈடுபடவென கரைக்கு வந்த பெண் புலிகளின் மனம் ஏழைகளின் கண்ணீரில் இளகியது. அனுதாபத்துடன் அந்த மக்களின் நிலையைப் பற்றித் தமக்குள் பேசிக்கொண்டார்கள்.

அங்கயற்கண்ணியின் மனம் இறுகிப் பாறையானது.

'இவங்களுக்கு இதுக்கு ஒரு சரியான பதிலடி குடுக்கவேணும்'

அந்த நிமிடத்திலேயே மனதளவில் அவள் ஒரு கரும்புலியானாள். சிறீலங்காக் கடற்படையின் கப்பல் ஒன்றைக் கரும்புலித் தாக்குதல் மூலம் அழிக்கவேண்டும் என்ற எண்ணம் அப்போதுதான் அவளுள் ஆழவேரோடியிருக்க வேணும். தொடர்ந்தும் எமது மக்கள் சிறீலங்காக் கடற்படையின் தாக்குதலுக்கு அஞ்சி, எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவருவதும், அன்று முழுவதும் (வருமானம் இல்லாததால்) ஒருவேளைக் கஞ்சிகூடக் குடிக்க வழியில்லாமல் பசியுடன் அழும் தம் குழந்தைகளை சமாதானம் பண்ணமுடியாமல் தமக்குள்ளேயே கண்ணீர்விடும் ஏழைத் தாய்களையும், ஏழைத் தந்தைகளையும் அடிக்கடி காண நேர்ந்தபோதெல்லாம், தான் எடுத்தமுடிவில் மேலும் உறுதி பெற்றாள்.

தான் ஒரு கரும்புலியாகிப் போக விரும்புவதைத் தலைவருக்குத் தெரியப்படுத்தினாள். சரியாக எட்டு மணித்தியாலமும் இருபத்தேழு நிமிடங்களும் அங்கயற்கண்ணி பதினேழு கடல் மைல்களை (ஏறத்தாழ முப்பத்தைந்து கிலோ மீற்றர்கள்) நீந்திக் கடந்துவிட்டாள். பொறுப்பாளர்களுக்கு அவள்மேல் என்னவென்று சொல்லமுடியாத ஒரு பிரியம். கடற்கரும்புலிகளுக்குரிய பயிற்சியில் ஈடுபடத்தொடங்கிய நாளிலிருந்து அவள் அந்தக் கடுமையான பயிற்சிகளில் மிகத் திறமையாக ஈடுபட்டது எல்லோருக்குமே திருப்தியைத் தந்தது. கொடுக்கப்படும் இலக்கை அவளால் சரியாகத் தாக்கமுடியும் என்பதில் யாருக்குமே சந்தேகம் இருக்கவில்லை. காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நாற்பத்தைந்து அடி ஆழங்கொண்ட நீர்ப்பரப்பில் நிலைகொண்டிருந்த வடபகுதித் தலைமையகக் கப்பலை யாராலுமே தாக்கமுடியாது என்பதில் எந்தக் கடற்படை அதிகாரிக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

ஆறாயிரத்து முந்நூறு தொன் எடையைக் கொள்ளக்கூடியதும் 326.04 அடி நீளமும், 51.02 அடி அகலமும் கொண்டதும் அதி சக்தி வாய்ந்த ராடர்கள் பொருத்தப்பட்டதுமான நீரில் மிதக்கும், நடமாடும் தலைமையகக் கடற்படைக் கப்பலை ஒரு தனி மனிதனால் அழிக்க முடியும் என்று அவர்கள் கனவில் கூட நினைத்திருக்கவில்லை என்பது பரிபூரண உண்மை. கடற்புலிகள் மகளிர் படையணியின் மூன்றாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்த அங்கயற்கண்ணியிடம் இயல்பாகவே ஆளுமைத் தன்மை இருந்தது. ஆரம்பத்திலிருந்து அவள் குழுத் தலைவியாகவே இருந்து வந்தாள். கடற்புலிகளின் பெண்–ஆண் போராளிகளிடையே நடாத்தப்பட்ட போட்டி ஒன்றில் முதலாவதாக வந்தாள். விளையாட்டிலே கெட்டிக்காரியாக இருந்தாள்.

ஆனால் வீட்டிலிருக்கும்வரை இதற்கு நேர்மாறான இயல்பைக் கொண்டிருந்தாள். இரவிலே தனியாக வெளியே போகமாட்டாள். எதற்கும் அம்மாவின் துணை வேண்டும் அவளுக்கு. தான் ஒரு விடுதலைப் புலியாக வேண்டும் என்று எண்ணி என்று புறப்பட்டாளோ அன்று அவளுள் மறைந்திருந்த ஆளுமை வெளிவந்தது.

லெப்.கேணல் பாமாவுக்கும், மேஜர் சுகன்யாவுக்கும் இவளை முழுமையாகத் தெரியும். அவர்கள் இருவருடனும்தான் அவள் நீண்ட காலம் நின்றிருக்கின்றாள். வரலாற்றுப் புகழ் மிக்க `தவளை நடவடிக்கை`யின்போது இவள் லெப்.கேணல் பாமாவின் குழுவில் ஒருத்தியாக கடற் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தாள். அவளது நடவடிக்கைகள், பண்புகள், எந்தப் பொறுப்பையுமே அவளிடம் நம்பிக்கொடுக்கலாம் என்ற நம்பிக்கையை எல்லோரிடமும் ஏற்படுத்தி விட்டிருந்தாள். இயக்கத்தோடு இணைந்த பின்னர் ஒருமுறை இவள் விடுமுறையிலே வீடு சென்றிருந்தாள். தாயும் தந்தையும் சகோதரர்களும் காட்டிய பாசத்திலே நனைந்தவள், நீங்களெல்லாரும் நல்லாப் படிக்கவேணும், படிச்சு முன்னுக்கு வரவேணும், என்றே தன் சகோதரர்களிடம் சொன்னாளாம்.

`நான் காத்தோட காத்தாப் போயிடுவன் அம்மா` என்று தாயிடம் சொன்னாளாம். எதற்காக தன் மகள் அப்படிச் சொன்னாள் என்பதை, தன் மகளை இழந்த பின்னர்தான்



## முதற் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி

(புஷ்பகலா – துரைசிங்கம் - மண்கும்பான் யாழ். )

அந்த அன்பான அம்மாவால் புரிந்துகொள்ளமுடிந்தது.

`பருந்திட்ட இருந்து தன்ர குஞ்சுகளைத் தாய்க்கோழி காக்கிறமாதிரி வேலணையிலிருந்து நான் பத்திரமாகக் கூட்டி வந்த பிள்ளை`

என்று சொல்லிச் சொல்லி அழுது களைத்துவிட்டாள் அம்மா. எப்படித் தன் மகளால் இப்படியொரு சாதனையைச் செய்ய முடிந்தது என்று தன்னிடமே கேட்டுக்கொள்கின்றாள் அவள். சொந்தவீடு, வாசல் காணிகளை வேலணையில் சிங்கள இராணுவத்திடம் இழந்து ஏதிலியாக நிற்கும் அவளால், இரவிலே வெளியே போகும்போது மகளுக்குத் துணைபோன அவளால், தன் மகளின் வீரத்தை ஆச்சரியத்துடன் தான் பார்க்க முடிந்தது.

கரும்புலித் தாக்குதலுக்கான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது தன் தோழிகளிடம், நான் நல்லூரில் திருவிழா நடக்கிற நேரந்தான் சாகவேணும். அப்பதான் திருவிழாவில் அம்மா கச்சான் வித்து வந்த காசு இருக்கும். அந்தக் காசு இருந்தாத்தான் என்ரை நினைவு நாளுக்கு வீட்டை போற பிள்ளைகளுக்கு (சக பெண் போராளிகளுக்கு) அம்மாவாலை சாப்பாடு குடுக்க ஏலும் என்று அடிக்கடி சொல்வாளாம்.




அவளின் தோழிகள் ஒவ்வொருவரின் மனதிலும் அங்கயற்கண்ணியின் இந்த வசனம் கல்லிலே செதுக்கியது போலத் தெளிவாகப் பதிவாகியிருக்கின்றது. எத்தனை தரம் கேட்டாலும் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்கின்றார்கள். எல்லாம் தயார்.

கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் நளாயினி அவர்கள் அங்கயற்கண்ணியிடம், என்னம்மா ஏதாவது சொல்ல நினைக்கிறாயா ? என்று கேட்டார். தயக்கமில்லாமல் மிகத் தெளிவாக அங்கயற்கண்ணியிடமிருந்து பதில் வந்தது. 'உங்கட அன்பும், அண்ணையின்ர (தலைவரின்) அன்பும் எப்பவும் எனக்கு இருக்கவேணும்' தாயை நேசிப்பதையும் விட அதற்கும் மேலாக தலைவரையும், தன்னை வளர்த்துவிட்ட பொறுப்பாளர்களையும், தாயகத்தையும் நேசிப்பவர்கள்தான் கரும்புலிகள்.

அங்கயற்கண்ணியை கடற்கரை வரை சிலர் வழியனுப்ப, அதன் பின்னரும் விடாது சில போராளிகள் அவளுடனேயே நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம் வரை வழியனுப்ப, அதன் பின்னரும் இலக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவு வரை வந்து பிரியாவிடை கொடுத்தனர் சக போராளிகள்.

இலக்கை அடிக்காம நான் திரும்பமாட்டேன். என்று சொல்லி விட்டு அங்கயற்கண்ணி விடைபெற்றாள். தூரத்தே அவளது அசைவுகள் தெரியும் தூரம் வரை அதன் பின்னரும் கண்கள் வலிக்க வலிக்க வெறும் அலைகளை உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்து விட்டு ஏனையவர்கள் திரும்பினார்கள்.

1994.08.16 அதிகாலை 12.35 மணியளவில், காத்துக்கொண்டிருந்த போராளிகளின் செவியில் பெரும் அதிர்வு. எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உறங்கிக் கொண்டிருந்த மக்களின் செவிகளிலே கூட அந்த ஓசை கேட்டதென்றால் காங்கேசன்துறையில் நின்றிருந்த இராணுவத்தினரைப் பற்றிச் சொல்லவா வேண்டும் ?

எல்லோருக்குமே பரபரப்பு.

தமது கனவுக் கோட்டைகளில் ஒன்று தகர்ந்ததால் சிறீலங்கா இராணுவத் தலைமை பரபரப்படைந்தது.

ஆர் பெத்த பிள்ளையோ ? எப்பதான் எங்களுக்கும் பிள்ளையளுக்கும் விடியப்போகுதோ ? என்ற ஆதங்கத்துடன் கண்கள் கலங்கியவாறு சுவரோடு சாய்ந்து அமர்ந்து விடியும்வரை விழித்திருந்தவர்களுமாய் மக்கள் பரபரப்படைந்தனர்.

`ரைட், கட்டளைக் கப்பல் அவுட்` என்று உற்சாகத்துடன் கூறிக்கொண்டாலும் அங்கயற்கண்ணியின் நினைவு எல்லோர் மனங்களிலும் மோதியது. அங்கயற்கண்ணியின் நினைவு பாரமாய் அழுத்த கனத்த இதயங்களோடு திரும்பினார்கள். காங்கேசன்துறைக் கடற்பரப்பில் காற்றோடு கலந்த அங்கயற்கண்ணி, ஒவ்வொரு போராளியினது குருதிச் சுற்றோட்டத்துடனும் கலந்துகொண்டாள். ஆழ் மனதிலே அழுத்தமாகப் பதிந்துகொண்டாள். இன்னும் இன்னும் கோடிக்கணக்கான நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் பேசப்படப் போகும் வரலாறாக ஆனாள்.

தீவுப்பகுதியைக் கைப்பற்றும் நோக்கில் சிறீலங்கா இராணுவம் எடுத்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக வேலணையை ஆக்கிரமிக்க முயன்றபோது, தாய்க்கோழி தன் குஞ்சுகளைப் பருந்திடமிருந்து பாதுகாக்க வேண்டித் தன்சிறகுகளை விரித்து குஞ்சுகளை மூடிக்கொண்டது. இன்று அந்தக் குஞ்சு பருந்தின் காலொன்றையே முறித்துப்போட்டுவிட்டது.

இந்திய வல்லாதிக்கத்தால் கேணல் கிட்டு அவர்களும் அவரின் தோழர்களும் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட நாளில் தன்னை விடுதலைப் புலியாக்கியவள், தன்னையும் சரித்திரமாக்கினாள்.

நேசன் Cash and Carry



இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள், V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 8574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

பாகம் - 2

21



# வலிகாமம் இருந்து வன்னி வரை

- கவிஞர் நாவண்ணன்

ராமசேதுவை 1983ம் ஆண்டு முதல் பழக்கம். அந்த ஆண்டு இனக் கலவரம் நடந்தபொழுது UPCOD எனும் சமூகப்பணி நிறுவனத்தில் நான் பணியாற்றிக்கொண்டிருந்தேன். குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொல்லப்பட்ட நாட்களில் நாடு முழுவதும் பரவிய இனக் கலவரம் மலையகத்தையும் விட்டுவைக்கவில்லை. நான் வசித்த வீட்டில் இருந்து பார்க்கும்போது கடைகள் பற்றி எரியும் காட்சியையும் கண்டேன். என்னோடு பணியாற்றுபவர்களோ, நிறுவனத்தின் இயக்குநரோ எவருமே இல்லை. நிறுவனத்துக்குச் சொந்தமான சில பொருள்கள் மட்டும் என் வசம் இருந்தன. அதே கடைத் தெருவில் வியாபார நிலையமொன்றின் உரிமையாளராகவும், தீவிரமிக்க மலையக இளைஞனாகவும் இருந்த (தற்பொழுது பிரதி அமைச்சர்) திரு. சந்திரசேகரனிடம் அவற்றை ஒப்படைத்தேன்.

நுவரெலியாவில் இருந்து இராணுவப் பாதுகாப்புடன் வடக்கைச் சேர்ந்தவர்கள் கிளிநொச்சிவரை அழைத்துச் செல்லப்படுகின்றார்களாம் எனக் கேள்விப்பட்டு மறுநாள் அதிகாலை கொட்டும் மழையிலும், குளிரிலும் நுவரெலியா சென்று இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வடபகுதி மக்கள் அழைத்துச் செல்லப்படும் பேருந்து ஒன்றில் இடம் பிடித்துக்கொண்டேன். எப்படியோ ஒருவாறு அவர்கள் பாதுகாப்புடன் கிளிநொச்சி சிங்களப்பாடசாலை வரை வந்து சேர்ந்துவிட்டேன்.

அகதி முகாம்களுக்கு மாறி மாறி சென்று பணியாற்றிய வேளையில்... அன்று பூமலர்ந்தான் கிராமத்தில் தங்கியிருந்தவேளை நள்ளிரவில் அக்கிராமம் முருங்கன் பொலிசாரினால் சுற்றிவளைக்கப்பட்டது. அவர்கள் தேடிவந்த இளைஞன் அங்கு தங்கவில்லை...

அடுத்த பிரச்சினை. இனித் தலவாக்கொலப்பக்கம் போக முடியாது. எமது சமூகசேவை நிறுவனம் பொலிசாரின் கண்களுக்கு சந்தேகத்துக்குரியதாக ஏற்கனவே இருந்தது. அத்துடன் எமது நிறுவனத்தின் இயக்குநராக இருந்தவர்பற்றி இம்மனுவேல் (குணேயன்) என்றழைக்கப்படும் சுவாமியார். இளைஞர். அவருக்கும் கண்டி ஆயராக நியமனம் பெற்றிருந்த வியான்னி பெர்னாண்டோவுக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் வேறு இருந்தன.

மலையகத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட குருக்கள் சிலருக்கு பற்றிக் இம்மனுவேல் யாழ்ப்பாணத்தவராகையால் பிரதேசவாதம் வேறு இருந்தது. அனைத்தையும் விஞ்சியதாக வடபகுதியைச் சேர்ந்த தீவிரவாத இளைஞர்களுக்கும் இந் நிறுவனத்துக்குமிடையில் தொடர்பு ஏதும் இருக்கலாம் என்ற சந்தேகம் பொலிஸ் வட்டாரத்தில் இருந்தது.

பற்றிக் இம்மனுவேல் அடிகளும் மலையகத்தைவிட்டு வெளியேறிவிட்டார். அவர் இயக்கிவந்த UP Country People Community Development Centre (UPCOD) மூடப்பட்டுவிட்டது. எனவேதான் முதலில் வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்ட நான் மன்னாரில் இயங்கி வந்த `வாழ்வோதயம்' சமூக சேவை நிலையத்திற்கு வேலை தேடிச்சென்றேன்.

அப்பொழுது வாழ்வோதயத்தின் இயக்குநராக இருந்தவர் அருள்திரு ஜே.பி.தேவராஜா அவர்கள். அதே வேளையில் அவரே மடுதேவாலயத்தின் நிர்வாகியாகவும் இருந்தார். 1977 ஆம் ஆண்டு முதல் மலையகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு வாழ்வோதயத்தின் துணையுடன் தஞ்சமளித்து கீரிசுட்டான் எனும் கிராமத்தையே அந்தமக்களுக்கு உரியதாக மாற்றி வீடுகள் கட்டிக்கொடுத்து அவர்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கிவந்தார்.அதன் காரணத்தால் தேவராஜா அடிகள் வாழ்வோதயம் இயக்குநர் பொறுப்பில் இருந்து விலகிய போது கீரிசுட்டான் கிராமத்துக்கு தேவாபுரம் என்று மாற்றம் செய்யப்பட்டது.

1983ல் இடம் பெயர்ந்த மக்கள் தட்சனைமருதமடு கிராமத்தில் முகாம்களில் குடி அமர்த்தப்பட்டனர். அதே வேளை மடுவீதியை அண்மித்த பூமலர்ந்தான் கிராமமும் 1977ல் இடம் பெயர்ந்த மலையக மக்களுக்காக நடாத்தப்பட்டு வந்தது. அப்பொழுது தட்சனா மருதமடுப்பகுதிக்கு கிராமசேவகராகப் பணியாற்றியவன்தான் ராமசேது. அதனால் ஏற்பட்ட தொடர்பு பின்னர் நட்பாக மலர்ந்தது.

அகதி முகாம்களுக்கு மாறி மாறி சென்று பணியாற்றிய வேளையில் அன்று பூமலர்ந்தான் கிராமத்தில் தங்கியிருந்தவேளை நள்ளிரவில் அக்கிராமம் முருங்கன் பொலிசாரினால் சுற்றிவளைக்கப்பட்டது. அவர்கள் தேடிவந்த இளைஞன் அங்கு தங்கவில்லை. பதிலாக தள்ளாடி முகாமுக்கு என்னை அழைத்து விசாரணை செய்து ஒரு நாள் இரவு தள்ளாடி முகாமில் தடுத்துவைக்கப்பட்டேன்.

எனக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் தொடர்புகள் எதுவுமில்லை என்பதை விசாரணைகள் மூலம் அறிந்துகொண்ட இராணுவம் என்னை விடுதலை செய்தது. ஆனால் முருங்கன் பொலிசாருக்கு என்மீது சந்தேகம். நான் வீதியால் போகவர என்னைத் தடுத்து விசாரித்து அச்சுறுத்தினார்கள். தன்னோடு வேலை செய்யும் காலத்தில் எனக்குப் பிரச்சினை எதுவும் வந்துவிடக்கூடாது என்ற எண்ணத்துடன் என்னை வேலையில் நின்று விலகும்படி தேவராஜா அடிகள் கேட்டுக்கொண்டார். அப்பொழுது பிரியாவிடை கூறிப்புறப்பட்டவன்தான். அதன்பின்னர் இன்று மீண்டும் ராமசேதுவைக் கண்டேன். அளவில்லாத மகிழ்ச்சி இருவருக்கும். எனது இன்றைய நிலைபற்றி விசாரித்தான். தான் கணேசபுரத்தில் குடியிருப்பதாகக் கூறினான்.

டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் நான் ஆரோபணத்தைவிட்டு வெளியேறவேண்டும் உனக்கு இந்த வீட்டு விஷயத்தில் உதவமுடியுமா என்று கேட்டேன்.

`அப்படியென்றால் கணேசபுரத்தில் உள்ள எனது வீட்டுக்குவா, அது பெரியகாணி, கிணறு, மலசலகூட வசதியெல்லாம் இருக்கிறது. அதிலே ஒருபுறம் வீட்டைப் போட்டுக் கொண்டு இரு' என்றான்.

`உடனடியாக வீடு போடுவது என்னால் இயலாதகாரியம்'

`பரவாயில்லை என்னுடைய வீட்டின் ஒரு அறையை உங்களுக்காக ஒதுக்கித்தருகிறோம். முதலில் அதிலே வந்து இருந்துகொண்டு ஆறுதலாக வீட்டைப்பாரு' என்றான். வழக்கம்போல அவன் பகிடியாகச் சொல்லவில்லை என்பதைக் கண்டுகொண்டேன். அதற்குச் சம்மதித்தேன்.

`எப்பொழுது வீட்டுக்குவர'

`எப்பவும் வரலாம் வேண்டுமென்றால் இன்றைக்கேவா' என்றான்.

எதற்கும் என்னவளுடன் கலந்தாலோசித்துவிட்டு நாளைக்கு அவளும் நானுமாக வீட்டை வந்து பார்த்ததின் பின்னர் முடிவெடுப்பேன் என்று கூறிவிடைபெற்றேன்.

தான் நாளை கடமைவிடயமாக தேவன்பிட்டி போயிருந்தாலும் தன்மனைவியிடம் சொல்லிவைத்து செல்



வதாகக்கூறி தன் வீட்டுக்கு வரும் குறிப்புகளைச் சொல்லிவிட்டுச் சென்றான். மறுநாள் நானும் என்னவளும் வீடுபார்க்கச் சென்றோம். ராமசேதுவும் வீட்டில் நின்றபடியால் இலகுவாயிற்று. என்னவளுக்கும் இடம் பிடித்துக்கொண்டது. நாம் வீடுபார்க்கச் சென்றது புதன்கிழமை அடுத்தநாட்கள் வியாழனும், வெள்ளியும். இரண்டு நாள்களும் இடம்பெயர பொருத்தமான நாள்கள் அல்ல, எனவே சனியன்று வீட்டுக்கு வருவதாகக்கூறி விடைபெற்றோம்.

ஆனால் மறுநாளே ராமசேது நாம் இருக்கும் இடம் தேடி வந்தான். `வெள்ளிக்கிழமைகளில் ஒரு வீட்டில் இருந்து இன்னுமொரு வீட்டுக்குச் செல்லுவதுதான் கூடாது. ஆனால் நீங்கள் இப்ப இருக்கிறது மடம்மாதிரி ஒரு இடம்தானே. வெளிக்கிழமை எங்கட வீட்டுக்கு வாறது எங்களுக்குப் பிரச்சினையில்லை. நீங்கள் விரும்பினால் நாளைக்கே வாங்கோ' என்றுகூறிச் சென்றான்.

அவர்கள் குறிப்பிட்ட நாளுக்கு எவ்வளவு காலம் முன்னர் வெளிக்கிட முடியுமோ அவ்வளவு விரைவில் போக வேண்டும் என்ற திட்டத்தில் இருந்த நான் மறுநாளே புறப்பட்டுவிட்டோம். பகல் உணவை முடித்துக்கொண்டு வெயில் தாழப் புறப்பட்டோம். கணேசபுரத்தை அடைந்தபோது ராமசேதுவும் மனைவியும் எம்மை வரவேற்க ஆயத்தமாக இருந்தனர். எமக்கென்று ஒரு அறை ஒதுக்கப்பட்டு துப்பரவு செய்துவைக்கப்பட்டிருந்தது. சாப்பாடெல்லாம் எமக்காகத் தயாரித்து வைத்திருந்தார்கள். நாம் பகல் உணவுக்கே வரவில்லையென்று கணவனும் மனைவியும் கடிந்துகொண்டார்கள்.

எங்களுக்கு சமையலுக்குத் தேவையான பாத்திரங்கள் கூடத் தந்தார்கள். அவை வெளிநாடு சென்ற தன் நண்பன் ஒருவன் தந்தவை என்று கூறினான். அனைத்தையும் யாழ்ப்பாணத்தில் விட்டு வந்த எமக்கு பணம் கொடுத்துப் பொருட்கள் வாங்கி தனிக்குடித்தனம் தொடங்குவதில் சிரமமே இல்லாது செய்துவிட்டார்கள். வந்தாரை வரவேற்கும் வன்னிக்கே உரித்தான அவர்களது பண்பால் நாம் திணறித்தான் போனோம்.


ராமசேதுவின் வீட்டிற்குப் போனதில் இன்னுமொரு நன்மையொன்றும் கிட்டியது. அது அடுத்த வீட்டுக்காரனின் நட்பு. அடுத்த வீட்டில் குடியிருந்தவர் ஒரு காலத்தில் பொலிஸ் அதிகாரியாக பணியாற்றிய தேவசகாயம் அவர்கள், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரச்சினையின் போது அடங்காத் தமிழன் சுந்தரலிங்கத்தை நேருக்கு நேர் நின்று சமாளித்த காங்கேசன்துறை தலைமைச் செயலகப் பொலிஸ் அதிகாரியாகப் பணிபுரிந்தவர். அவர் முன்னாளில் கிளிநொச்சியில் பொலிஸ் அதிகாரியாகப் பணிபுரிந்தபோது அந்தக்காணியை வாங்கி அதிலே ஒரு அளவான வீட்டையும் கட்டியிருந்தார்.

தற்பொழுது வயது முதிர்ந்து உடல் தளர்ந்து மெலிந்த நிலையிலும் பொலிசாக இருந்தபோது பெற்ற பயிற்சிகளின் விளைவோ என்னவோ சுறுசுறுப்பாக இருந்தார். பெரும்பாலும் இராணுவத்தினர் அணிவது போன்று மிருதுவான நீல கம்பளித் தொப்பி தலையில் அணிந்திருப்பார்.

அவர் சமயத்தால் கத்தோலிக்கர் ஆனபடியால் தினமும் அதிகாலையில் அந்தப் பனிகாலத்திலும் பூசைக்குப் போய்வருவார்.

ஆனைக்கோட்டையில் அவர் இருந்தபோது ஓரிரு தடவைகள் அவரைச் சந்தித்திருக்கின்றேன். அவர் என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவரின் மாமனும் கூட. அதைவிட எனது ஆக்கங்களை விரும்பிப்படிக்கும் வாசகரும்கூட. அவரை அங்கு சந்திப்பதில் எனக்குப் பெருமகிழ்வு. எனக்கு ஓய்வான நேரங்களில் அவரோடு போய் பேசிக்கொண்டிருப்பேன். அவருக்கும் என்னோடு பேசுவதில் விருப்பம். எனக்கோ ஒரு அனுபவம் மிக்க பழைய உயர் பொலிஸ் அதிகாரியிடமிருந்து எனக்குத் தேவையான, மற்றவர்கள் அறிந்திராத விடயங்களைப் பெற்றுக்கொள்வதும் ஒரு நோக்கம். எண்பத்திமூன்று வயது ஆகிவிட்டிருந்த அவர் மிகத் தெளிவாகவும் நிதானமாகவும் சில தகவல்களை எனக்குத் தந்தார்.

(தொடரும்)




## அறிந்து கொள்வோம்

### தமிழ் எழுத்துக்கள்

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து என நான்கு வகைப்படும்.

2. உயிரெழுத்து எவை?
அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ - இப் பன்னிரண்டும் உயிரெழுத்தாம்.

3. உயிரெழுத்து எத்தனை வகைப்படும்?
குற்றெழுத்து, நெட்டெழுத்து என இரண்டு வகைப்படும்.

4. குற்றெழுத்து எவை?
அ, இ, உ, எ, ஒ - இவ்வைந்தும் குற்றெழுத்தாம்.

5. நெட்டெழுத்து எவை?
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - இவ்வேழும் நெட்டெழுத்தாம்.

6. மெய்யெழுத்து எவை?
க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் இப்பதினெட்டும் மெய்யெழுத்தாம்.

7. மெய்யெழுத்து எத்தனை வகைப்படும்?
வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து, என மூன்று வகைப்படும்.

8. வல்லெழுத்து எவை?
க், ச், ட், த், ப், ற் -இவ்வாறும் வல்லெழுத்தாம்.

9. மெல்லெழுத்து எவை?
ங், ஞ், ண், ந், ம், ன் -இவ்வாறும் மெல்லெழுத்தாம்.

10. இடையெழுத்து எவை?
ய், ர், ல், வ், ழ், ள் - இவ்வாறும் இடையெழுத்தாம்.

## அறிஞர் முற்றம்

### முது தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி

`பாரதி என்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே -அதன்
சீரிதழ் ஆயிரம் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே'

என்று பாரதியின் புகழ் பாடியவர் முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி. சிறந்த கவிஞரான இவர் கவித்துவம் மிக்க பல பாடல்களை இயற்றியவர். இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர். குழந்தைகளுக்கான பாடல்கள் பலவற்றை எழுதியவர். எடுத்துக் காட்டாக, உறங்கும் குழந்தையைத் தாய் துயில் எழுப்பும் வகையில் அவர் யாத்த பாடல் ஒன்றை நோக்குவோம்...

துயில் எழுவாய் கிளியே
புலர்தல் தொடங்கியதே
பொழுது கிளம்பியதே
அலர்மா மலர்க்கொழுந்தே – கிளியே
அயரா தெழுவிரைந்தே
கமல மலர் விரியும்
கா வெங்கும் புள்ளியம்பும்
குமுத மலர் குவியும் – கிளியே
கொழுந் தேனே கண்வளராய்
அன்பே என்ஆ ருயிரே
அன்புக் களஞ்சியமே
பொன் பூத்த பூங்கொடியே – கிளியே
போதும் துயில் எழுவாய்.

வட்டுக்கோட்டையில் பிறந்து கொழும்பு சாஹிராக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராய் அமர்ந்து இருபத்தெட்டு ஆண்டுகள் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் தமிழார்வத்தை வளர்த்தவர் முதுதமிழ்ப் புலவர். இலங்கையின் சுதந்திர விழாவையொட்டி நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் பாடற்போட்டியில் `மணித்தாய் நாடும் மரதனோட்டமும்' என்னும் இவரது பாடல்கள் முதற் பரிசினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்தால் 1948 ஆம் ஆண்டிலே 'முதுதமிழ்ப் புலவர்' என்னும் பட்டமளித்துக் கௌரவிக்கப் பெற்ற கவிஞர் இவராவார்.

இவர் பாடநூல்கள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார். இவரது புலமைத்திறனை 'இளைஞர் விருந்து' என்னும் கவிதை நூலில் நன்கு காணலாம். சிறுவர்களுக்கான பல்வேறு பாடல்களை இவர் படைத்துள்ள போதிலும் அவற்றிற் பெரும்பாலானவற்றைப் பெறமுடியாதுள்ளமை கவலைக்குரியதே.

## கதை முற்றம்

### புல்லுருவிகள்

ஒரு புலி வேட்டையாடிக் கொண்டிருக்கையில் நரியொன்றை இரையாகப் பிடித்துக்கொண்டது.

`உன்னால் என்னைக் கொன்று சாப்பிட முடியாது' என்று நரி கூறியது.

`ஏன்?' புலி கேட்டது.

`மோட்ச சாம்ராஜ்ஜியத்தின் பேரரசன் என்னைக் காட்டு மிருகங்களின் அரசனாக நியமித்துள்ளார். நீ என்னைக் கொன்று சாப்பிட்டால் பேரரசனின் கட்டளையை மீறியவனாவாய். நீ அவருடைய கடுங்கோபத்திற்கு ஆளாக வேண்டி வரும். நீ நான் கூறியதை நம்பாவிட்டால் என்னுடன் வா, நான் நிரூபித்துக் காட்டுகின்றேன். நீ என்னுடன் வரும்போது என்னைக் கண்டதும் ஏனைய மிருகங்கள் எல்லாம் பயந்து ஓடி மறைகின்றனவா இல்லையா என்பதைப் பார். நரி உறுதியாகக் கூறியது.



புலி அதற்கு உடன்பட்டு நரியுடன் சென்றது. புலியும் நரியும் வருவதைக் கண்ட எல்லா மிருகங்களும் பயத்தினால் ஓடி ஒளிந்தன.

தன்னைக் கண்டுதான் மிருகங்கள் எல்லாம் பயந்து ஓடுகின்றன என்பதைப் புலி உணரவில்லை...!

### நாணற் புல்லும் செந்தூர மரமும்

எந்தப் புயல் காற்றுக்கும் தலை குனியாமல் நிமிர்ந்து நிற்கின்றது ஒரு பெரிய செந்தூர மரம். அதன் அடியில் நின்ற ஒரு நாணல் புல் காற்று வீசியபோது தன்னால் இயன்றளவு வளைந்து கொடுத்தது.

`நான் வளைந்து கொடுக்காமல் உறுதியாக நிமிர்ந்து நிற்பதுபோல உன்னால் ஏன் நிமிர்ந்து நிற்க முடியவில்லை?'

செந்தூர மரம் நாணல் புல்லைக் கேட்டது.


`உங்களுக்குள்ள பலம் எனக்கு இல்லை' என்று அடக்கமாகக் கூறியது புல்.

ஒருநாள் பாரிய புயற்காற்று வீசியபொழுது அந்தப் பெரிய மரம் வீழ்ந்தது.

நாணல்புல் தான் நின்ற இடத்திலேயே முன் போலவே நின்றது.

## கண்டுபிடியுங்கள்

இந்தப் பறவை தனது கூட்டுக்குச் செல்வதற்கு வழி தெரியாமல் தவிக்கிறது. உங்களால் உதவமுடியுமா? இல்லையேல் அடுத்தவாரம்வரை பொறுத்திருங்கள்.



## தகவல் முற்றம்

### ஆந்தைகள் பலவிதம்

ஆந்தைகளில் மிகவும் அதிகமாக காணப்படும் வகை பார்ன் ஆந்தைகள். (Barn owls) இவை அனைத்துக் கண்டங்களிலும் (அண்டார்டிக்காவைத் தவிர) பரவலாகக் காணப்படுகின்றன. இதைத் தவிர உலகின் ஒவ்வோர் இடத்திலும் அந்த இடத்துக்குரிய ஆந்தைகள் காணப்படும்.

ஆந்தை இனத்தில் மொத்தம் 133 வகைகள் உண்டு. இவற்றில் குறிப்பிடத்தகுந்தவை Barn owl, Burrowing owl, Eagle owl, Elf owl, Little owl pygmies owl

ஆந்தையின் கண்கள் மற்ற பறவைகளைப்போல் பக்கவாட்டில் அமைந்திருக்காது. மனிதர்களுக்கு இருப்பதுபோல் நேர் திசையைப் பார்க்கும் வண்ணம் அமைந்திருக்கும்.

இவற்றின் உடலைச் சுற்றியிருக்கும் இறக்கைகள் மென்மையானவை. அதனால்தான் இவை பறக்கும்போது சத்தம் வருவதில்லை

ஆந்தைகளில் இருக்கும் வெவ்வேறு இனங்கள் 6 இன்ச்சிலிருந்து 28 இன்ச் வரை இருக்கும்.

ஆந்தைகளின் உணவு எலி போன்ற சிறிய விலங்குகள், சிறிய பறவைகள், பல்லிகள், பூச்சிகள், மீன்கள் மற்றும் தவளைகள்.

இவற்றின் எடை 3 இறாத்தல் முதல் 9 இறாத்தல் வரை இருக்கும். பெண் ஆந்தைகள் ஆண் ஆந்தைகளைவிடப் பெரியதாக இருக்கும்.

இவை வாழும் இடங்கள்: காடுகள், பாலைவனங்கள், புல்வெளிகள், வயல்வெளிகள் மற்றும் மரங்கள் நிறைந்த இடங்கள்.

ஆந்தைக் குஞ்சுகள் 15–லிருந்து 35 நாட்களுக்குள் முட்டைகளிலிருந்து வெளியே வரும்.

முதலில் பிறக்கும் குஞ்சுகளுக்கு இருக்கும் மிகப்பெரிய நன்மை இவற்றுக்கு உணவில் அதிகப்பங்கு கிடைக்கும் என்பதுதான். அதனால் உணவு குறைவாக இருந்தால் முதலில் பிறந்த குஞ்சுகள் மட்டுமே உயிர் வாழும். உணவு அதிகம் இருந்தால் அனைத்துக் குஞ்சுகளும் உயிர்வாழும்.

குஞ்சு பொரிக்கத் தயாராகும் ஆந்தைகள் ஒழுங்கான முறையில் கூடுகள் கட்டாது. பாறைகளின் விளிம்பிலோ, மரங்களில் வெறும் உதிர்ந்த இலைகள், இறக்கைகளின் மேலேயே முட்டையிடும்.

ஆந்தைகள் இரவில் மட்டுமே வேட்டைக்குச் செல்லும். அதனால் இவற்றுக்கு காதுகள்தான் முதல் கண்கள்.

இரவானதும் ஆந்தைகள் தாழ்வாகப் பறந்து செல்லும். அப்போது எலி போன்ற சின்ன சின்ன மிருகங்கள் எழுப்பும் சத்தத்தைக் கொண்டு அந்த திசையில் பறந்து சென்று அவற்றை இரையாக்கிக்கொள்ளும்.


ஒரு சிறிய சத்தம் கேட்டதும் ஆந்தை தன் தலையை இரு புறங்களிலும் மாற்றி மாற்றித் திருப்பி சத்தம் வரும் திசையைக் கண்டறிய ஆரம்பிக்கும்.

இரண்டு காதுகளிலும் ஒரே அளவு சத்தம் கேட்டால் ஆந்தை இரைக்கு சரியாக நேர்கோட்டில் இருக்கிறதென்று அர்த்தம். உடனே பறந்து சென்று இரையைத் துல்லியமாக பிடித்துவிடும்.

மற்ற பறவைகளைப்போல் கால்களில் பிடிக்காமல் ஆந்தை தன் அலகில்தான் இரையைக் கொண்டுசெல்லும்.

பெரிய இரைகளைக் கிழித்து சிறிது சிறிதாக்கி உண்ணும் வழக்கம் உள்ளவை ஆந்தைகள். அதுவே சிறிய இரையாக இருந்தால் அப்படியே முழுசாக விழுங்கிவிடும்.

# சனியைப் பிடித்த மனிதன்



இவ்வளவு காலமும் மனிதனைத் தான் சனி (கிரகம்) பிடித்துவிட்டதாக பரவலாகவும் நம்பப்பட்டது. இப்போது அந்த சனிக்கிரகத்தை மனிதன் பிடித்துவிட்டான். சனிக்கிரகம் பற்றி ஆய்வு செய்வதற்காக 7 ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பப்பட்ட நாசாவின் காசினி விண்கலம் கடந்த 1ம் திகதி வியாழக்கிழமை வெற்றிகரமாக, சனிக் கிரகத்தின் வளையங்களுக்குள் புகுந்து அதன் ஈர்ப்பு சக்தியால் கவரப்பட்டது. பிறகு அது சனிக்கிரகத்தின் சுற்றுப்பாதையில் சனியைச் சுற்றத் தொடங்கியது. வியாழக்கிழமை காலை இந்த சரித்திர சம்பவம் நிகழ்ந்தது. அமெரிக்காவில் பசடெனா நகரில் உள்ள ஆய்வுக்கூடத்துக்கு சுற்றுப்பாதையை அடைந்து விட்டதற்கான சமிக்ஞை கிடைத்தது. சுற்றுப்பாதையை அடைந்ததால், அதன் மோட்டார் இயந்திரங்கள் அணைக்கப்பட்டன. இந்த சமிக்ஞை கிடைத்ததும், ஆய்வுக் கூடத்தில் கூடி இருந்த விஞ்ஞானிகள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். அந்தக் கிரகத்தைச் சுற்றி வரும்போது அது சனிக்கு 20 ஆயிரம் கி.மீ. அருகே சென்று ஆய்வு செய்ய வாய்ப்பு இருக்கிறது. இவ்வளவு காலமும் மனிதனை சனி பிடித்து ஆட்டோ ஆட்டென்று ஆட்டியது. இப்போது சனியை மனிதன் பிடித்துவிட்டான், சனிக்கு என்ன ஆகப்போகின்றதோ..!?



# கணவனை வெட்டிக் கடலில் வீசிய மனைவி !

கணவனின் கொடுமைகளைத் தாங்கமுடியாத மனைவி அவரை வெட்டிக் கொலை செய்து அவரது சடலத்தைக் கடலில் வீசிய சம்பவம் வேறெங்குமல்ல சிறீலங்காவில் தான் நடந்துள்ளது. சிறீ லங்காவின் ஹபரதுவ பொலிஸ் பிரிவிலுள்ள ஹினட்டிய பகுதியில் கடந்த 25ம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. எட்வின் அபயரட்ண என்ற 52 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

தினமும் மதுபோதையில் வரும் தனது கணவன், தன்னையும் தனது பிள்ளைகளையும் அடித்துத் துன்புறுத்துவதாகவும் அவரது கொடுமை பொறுக்கமுடியாமல் தானே அவரை வெட்டிக் கொலை செய்ததாகவும். பின்னர் யாருக்கும் தெரியாமல் உடலைக் கொண்டு சென்று கடலில் வீசியதாகவும் மனைவி பொலிசாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார். தற்போது ஹபரதுவ பொலிசார் மனைவியைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.


# பலதும் பத்தும்

# 'ஸ்பொன்சர்' குழந்தை




இது விளம்பரமென்று எண்ணிவிடாதீர்கள்....
'ஸ்பொன்சர்' மூலம் பிறந்தது, அதனால் தானாம்..!

# பால் வார்த்த சாது



பிள்ளையாருக்கு பால் வார்த்த கதை தெரியும், இதோ ஒரு சாது குரங்கிற்கு பால் வார்க்கின்றார். தாயை இழந்து தவித்த குரங்கு குட்டியொன்றுக்கு, குழந்தைகள் பாலருந்தும் போச்சிபோத்தலில் அன்போடு பருக்கும் காட்சியை, ஜம்மு காஷ்மீர் அமர்நாத் பகுதியில் வைத்து கடந்த 2ம் திகதி நிழற்படப்பிடிப்பாளர் ஒருவர் தனது கமெராவுக்குள் வசப்படுத்திக்கொண்டுள்ளார்.




`பொப்' பாடகர் மைக்கேல் ஜாக்சனின் தங்கை ஜனெட் ஜாக்சன், சில மாதங்களுக்கு முன்பு டிம்பர் லேக் என்ற பாடகருடன் சேர்ந்து நடனம் ஆடினார். அமெரிக்க கால்பந்துப் போட்டியின் இடைவேளை நேரத்தில் இந்த நடனம் நடந்தது. அப்போது அவர் தன் மேலாடையைக் கிழித்து விட்டு, மார்பு தெரிய அரை நிர்வாணமாக நடனம் ஆடினார். இதை 20 தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒளிபரப்பின. அமெரிக்க மக்களிடம் இருந்து கடும் எதிரப்பு கிளம்பியது. இதனையடுத்து ஜனெட் ஜக்சன் மன்னிப்பு கேட்டார். எனினும் இதனை ஒளிபரப்பிய தொலைக் காட்சி நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. இது தொடர்பாக பெடரல் தொடர்பூடக ஆணையகம் விசாரணை நடத்தி, 20 தொலைக்காட்சி நிலையங்களுக்கும் மொத்தமாக 3 மில்லியன் டொலர்களை அபராதமாக விதித்தது.

சுஜி ஜுவல்லரி SUJI JEWELLERY

சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004



தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜி ஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்க நகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.

Neuengass - Passage 3, 3011 Bern Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02

# ஐரோப்பியக் கிண்ணம் 2004




விளையாட்டு

ஜே.ஜே.

### கிரேக்கத்தின் சரித்திரவெற்றி

அதிசயம் என்பதா! ஆச்சரியம் என்பதா! சாதனை என்பதா! சரித்திரம் என்பதா! 2004ம் ஆண்டு விளையாட்டுத்துறையின் கிரேக்கத்திற்கு இது ஒரு மைல்கல் என்றே கூறவேண்டும். கடந்த ஆறு ஆண்டுகளாக வெற்றிக்கனியை தமது மண்ணிலாவது பெற்றுவிடவேண்டும் என்று துடிப்பில் காத்திருந்த போர்த்துக்கல்லிற்கு இது ஒரு மறக்கமுடியாத தோல்விதான். ஐரோப்பியக் கிண்ண வரலாற்றில் சுற்றுப்போட்டியினை நடாத்திய நாடு இறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்றும் வெற்றிக்கிண்ணத்தை தம் வசமாக்கத் தவறிய முதலாவது நாடு போர்த்துக்கல்தான். அதேபோல சுற்றுப்போட்டியின் ஆரம்ப ஆட்ட அணிகள் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது மூன்றாவது தடவையாகும்.

1988 இல் ஜேர்மனியில் நடைபெற்ற எட்டாவது ஐரோப்பியக் கிண்ணத்திற்கான இறுதிச் சுற்றின் முதல்நாள் ஆட்டத்தில் சோவியத் யூனியன் 1:0 எனும் நிலையில் நெதர்லாந்தை வெற்றிகொண்டபோதும் இறுதி ஆட்டத்தில் 2:0 எனும் நிலையில் நெதர்லாந்து வெற்றிபெற்றது: 1996இல் இங்கிலாந்தில் நடைபெற்ற பத்தாவது கிண்ணத்திற்கான முதல் நாள் ஆட்டத்திலும் 2:1 எனும் நிலையில் வெற்றிபெற்றது. இதுவரை நடைபெற்ற பன்னிரண்டு இறுதிச் சுற்றுக்களை நடத்திய பதின்மூன்று நாடுகளில் பத்து நாடுகள் வெற்றிபெறவில்லை. மூன்று நாடுகள் மட்டுமே வெற்றிபெற்றுள்ளன. (1964-ஸ்பெயின், 1968-இத்தாலி, 1984-பிரான்ஸ்) போர்த்துக்கல்லின் எட்டுப் பெரு நகரங்களிலுள்ள பத்து மைதானங்களில் மிகச் சிறப்பாக போட்டிகள் நடைபெற்றன. முதற்சுற்று ஆட்டங்களின்போது இங்கிலாந்தின் குழப்பவாதிகளால் ஏற்பட இருந்த அனர்த்தங்களை போர்த்துக்கல்லின் காவல்துறையும் நீதித்துறையும் இரும்புக் கரங்கொண்டு வெற்றிகொண்டன. 04.07.2004 அன்று லிஸ்பொன் நகரிலுள்ள லூஸ் மைதானத்தில் 65,000 பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்திற்கு நாற்பது வயதுடைய ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மார்க்கஸ் மேர்க் என்பவர் நடுவராகக் கடமையாற்றினார். ஆட்டத்தின் ஆரம்பம் முதல் போர்த்துக்கல் வெற்றி எனும் இலக்கு நோக்கி தமது தாக்குதலை மேற்கொண்டனர். கிரேக்கமோ வழமைபோலவே தமது தடுப்பாட்டத்தை திறம்பட நடாத்திக்கொண்டிருந்த வேளையில் அவ்வப்போது தாக்குதலை மேற்கொண்டனர். இடைவேளையின் பின்னர் கிரேக்க மூன்று வீரர்களை தாக்குதல் நிலையில் வைத்து விளையாடினர். போர்த்துக்கல்லினை சிறுகச் சிறுக பின்வாங்க வைத்தவர்கள் 57வது நிமிடம் கோனர் உதைமூலம் வந்த பந்தினை அஞ்சலோ சரிஸ்ரிஎஸ் தலையால் இடித்து சரித்திரப் பெருமைக்குரிய அந்தக் கோலினை தமது அணிக்குச் சேர்த்தார். இக்கோலினால் அதிர்ச்சியடைந்த போர்த்துக்கல் இடைநிலை வீரர்களின் உதவியுடன் தாக்குதலை தீவிரப்படுத்தினர். கிரேக்கமோ தமது கோல் எல்லையில் இருந்து 25-30 மீற்றர் தூரத்தில் தப்பான ஆட்டம் மூலம் அவற்றைத் தடுத்தனர். இறுதிச் செக்கன்வரை போர்த்துக்கல் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்காமல் கிரேக்கத்திற்கு 1:0 எனும் சரித்திர வெற்றியுடன் முற்றுப்பெற்றது. தோல்வியினை தாங்கமுடியாத போர்த்துக்கல்லின் இளம் வீரர்கள் அழுதகாட்சியும் நினைவில் நிலைக்கும்.





3000 ஆதரவாளர்களுடன் குழுநிலை ஆட்டத்தில் புகுந்த கிரேக்கம் இறுதியாட்டத்திற்கு 13000 ஆதரவாளர்களை மைதானத்தில் கொண்டிருந்த வெற்றியினை அடுத்து எதென்ஸ் நகரின் பெரு வீதிகள் எல்லாம் மக்கள் வெள்ளத்தால் திணறிக்கொண்டிருக்கின்றது.

## தமிழ்த் தேசிய ஊடக வளர்ச்சி நிதி சீட்டிழுப்பு நல்வாய்ப்பு பார்க்கப்பட்டது

தமிழ்த் தேசிய ஊடக வளர்ச்சி நிதிக்காக விற்பனை செய்யப்பட்ட நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு கடந்த 3ம் திகதி சனிக்கிழமை ரி.ரி.என் தொலைக்காட்சிக் கலையகத்தில் நேரடி ஒளிபரப்பில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டது. முதலாவது பரிசிற்காக சீட்டிழுப்பை ஜேர்மனியைச்சேர்ந்த தமிழ் கல்விக் கழகப் பொறுப்பாளர் இரா. நாகலிங்கம் அவர்களும், இரண்டாவது பரிசிற்கான சீட்டிழுப்பை நோர்வேவைய் சேர்ந்த அன்னை பூபதி கல்வி மற்றும் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் சிவதாசனும், மூன்றாவது பரிசை பிரான்சின் பிரபல தொழில் அதிபரும், ரி.ரி. என் நிறுவன ஸ்தாபகர்களில் ஒருவருமான சந்திரகுமார் அவர்களும் தெரிவுசெய்தனர். ஏனைய இருபது ஆறுதல் பரிசில்களையும் பாரிசையும் அதன் புறநகர் பகுதியையும் சேர்ந்த தமிழாலய மாணவ மாணவிகள் தேர்வு செய்தனர். முதலாவது பரிசாக ஐந்து பேருக்கு தாயகத்திற்குச் செல்லும் நல்வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இரண்டாவது பரிசாக மூன்றுபேருக்கும், மூன்றாவது பரிசாக இரண்டுபேருக்கும் அந்த வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. ஆறுதல் பரிசாக ஐரோப்பாவிலும், மத்தியகிழக்கிலும் உள்ளவர்களுக்கு ஒருவருடத்திற்கான ரி.ரி என் தொலைக்காட்சி பார்ப்பதற்குரிய சந்தா அட்டை வழங்கப்படவுள்ளது. ஏனைய நாடுகளில் உள்ளவர்களுக்கு அதற்கு இணையான பணப்பெறுமதிக்குரிய பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.







## தமிழ்த் தேசிய ஊடகங்கிற்கான வளர்ச்சி நிதி 2004 வெற்றி பெற்றோர் விபரம்

1வது பரிசு 2289 குண சிற்றம்பலம் மலேசியா
2வது பரிசு 18014 K. விக்னேஸ்வரன் ஜேர்மனி
3வது 15841 கீதன் பிரான்ஸ்

### மேலும் ஆறுதல் பரிசுபெற்ற 20 நபர்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 8581 | செல்வி. சுபாஜினி சுந்தரகுமார் | அவுஸ்திரேலியா |
| 2. | 8904 | திரு. E. பிறேம் | அவுஸ்திரேலியா |
| 3. | 24980 | கிருசதாஸ் | கனடா |
| 4. | 26015 | சக்திகுமார் | கனடா |
| 5. | 4729 | ஆனந்தன் | டென்மார்க் |
| 6. | 4551 | P.மகேந்திரன் | டென்மார்க் |
| 7. | 15257 | K. கிறிஸ்ரியன் | பிரான்ஸ் |
| 8. | 15319 | றஞ்சன் | பிரான்ஸ் |
| 9. | 14031 | அச்சுதன் மகேந்திரராசா | பிரான்ஸ் |
| 10. | 13623 | அன்பரசன் | பிரான்ஸ் |
| 11. | 12695 | A. பிரகாஸ் | பிரான்ஸ் |
| 12. | 15402 | நவனீதன் | பிரான்ஸ் |
| 13. | 17113 | Y.றுஸ்வெல்ட் | ஜேர்மனி |
| 14. | 18007 | S. எட்வின் செஸ்லி | ஜேர்மனி |
| 15. | 42961 | S. சயந்தன் | சுவிஸ் |
| 16. | 03064 | S.V.ராஜா | ஐக்கிய அரபு எமிரேட்ஸ் |
| 17. | 11562 | K. குகதாஸ் | ஐக்கிய அரபு எமிரேட்ஸ் |
| 18. | 11603 | T. காண்டீபன் | ஐக்கிய அரபு எமிரேட்ஸ் |
| 19. | 11751 | S. பகீதரன் | ஐக்கிய அரபு எமிரேட்ஸ் |
| 20. | 25300 | ஜோய். தேவராஜா | அமெரிக்கா |










# மாவீரர் விளையாட்டு விழா – 2004

## சுவிற்சலாந்து



# அச்சமே தெய்வத்தைப் படைத்தது !

அச்சத்தின் தன்மையையும், இயல்பையும் மனிதன் புரிந்துகொள்வதாக இல்லை. அச்சத்தின் மூலம் - காரணி - தொடக்கம் என்ன? இதுவரை எங்களால் அச்சத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியவில்லையே, ஏன்? இறப்புப் பற்றிய அச்சம். இல்லை என்ற அச்சம். தனிமை பற்றிய அச்சம். என்று பலவித உடல், உளவியல் சார்ந்த அச்சங்கள் எங்களை முற்றுமுழுதாக ஆட்கொண்டுள்ளன. இதனாலேயே நாம் தெய்வங்களையும், ஆசாரங்களையும், ஆன்மீகத் தலைவர்களையும், மத பீடங்களின் ஆட்சிகளையும், கோயில்களையும், விகாரைகளையும், மசூதிகளையும் உருவாக்குகின்றோம். ஒரு மோட்டார் வாகனத்தின் இயந்திர இயக்கங்களின் நுட்பங்கள் யாவற்றையும் நன்றாகப் புரிந்துகொள்ளும் போது எமக்கு அதுபற்றிய அச்சம் நீங்குவது போல், அச்சத்தின் இயல்பையும், அதன் மூலத்தையும் புரிந்து கொள்ளும்போது நாம் அச்சத்தைக் கடந்துவிடுவோம்.

அச்சத்தை எப்படி அடக்குவது - தாண்டுவது - தணிப்பது - எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது - அதிலிருந்து தப்பியோடுவது என்று நீள நினைப்பதாலும், ஏங்குவதாலும், தெண்டிப்பதாலும், எமக்கோ மற்றவர்களுக்கோ எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. அதன் மூலத்தைக் கண்டால் மட்டுமே பயனேற்பட வாய்ப்பேற்படும்.

எமது அச்சம் எமக்குப் பாதுகாப்பளிக்கிறது. அது ஒரு மாயை அல்ல. அது ஓர் உண்மை நிகழ்வு - யதார்த்தம். `அச்சம்' என்ற சொல் அச்சமில்லை. எனவே `அச்சம்' பற்றிய விளக்கங்களும் போதனைகளும் அச்சத்தை முடிவுக்குக்கொண்டுவரா. அச்சம் காலத்தால் ஏற்படுவது. அச்சத்தின் இருப்பும் ஊடகமும் காலம்தான். நாம் இறந்தகாலம் பற்றியும், எதிர்காலம் பற்றியும், நிகழ்காலம் பற்றியும் அச்சங்கொண்டுள்ளோம். அச்சத்தின் முழு இயக்கமும் காலத்திற்குள்ளேயே நிகழ்கிறது. `இங்கிருந்து அங்குவரை' என்பதில் அசைவு நிகழ்கிறது. இவ்வசைவுக்குத் தேவையானது நேரம். அனைத்து அசைவுகளும் காலத்திற்குள்ளேயே நிகழ்கின்றன.

இறந்தகாலம் நிகழ்காலத்தாலேயே உருவமைக்கப்படுகிறது. மாற்றியமைக்கப்படுகிறது. சூழ்நிலைகள் மாறுகின்றன. சில குறிப்பிட்ட சம்பவங்கள் நிகழ்கின்றன. எனவே இறந்தகாலம் மாற்றியமைக்கப்படுகின்றது. எனவே எதிர்காலமானது இப்பொழுது நிகழ்வதுதான். முழுக்காலமும் அதாவது, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றுமே இந்தச் சமயத்தில் (Now) தான் உள்ளது. இது வாழ்க்கையுடன் தொடர்புடையது. எனவே இது வெறும் கருத்தல்ல. நேற்று நாங்கள் ஏதாவதொன்றாக இருக்கின்றோம். இன்று ஒரு சம்பவம் நிகழ்கிறது. அது எமது இறந்தகாலத்தைக் கொஞ்சம் மாற்றுகிறது. இப்பொழுது நாங்கள் என்னவாக இருக்கின்றோமோ அந்த மாற்றமே எங்களது எதிர்காலமாகிறது. இறந்தகாலமும் (past) நிகழ்காலமும் (present), எதிர்காலமும் (future) இந்தச் சமயமாகிறது (Now). இந்தச் சமயமே நாளை (tomorrow) ஆகியது.

`இந்தச் சமயத்தில்' ஏற்படாவிட்டால், நாம் முன்னர் என்னவாக இருந்தோமோ அது போலவே இருப்போம். வட்டரங்கு ஒன்றிற்குள் நிகழும் சகல வலுவு விளையாட்டுகளின் விளைவாக நான் ஓர் இந்து என்று நினைக்




**கந்தையா நவரேந்திரன்**

கின்றேன். நாளையும் நான் ஓர் இந்துவாகவே இருப்பேன். இது தருக்க ரீதியானது. எனவே இந்தச் சமயத்தில் நான் செய்வது நாளைக்கு நான் செய்யப்போவதைக் காட்டிலும் முக்கியமாகின்றது.

அப்படியானால், நாளை `இந்தச் சமயம்' ஆனால், நான் என்ன செய்யப்போகின்றேன்? இந்தப் பொழுதில் பேராசை உள்ளவனாக இருந்து, அதைப்பற்றி நான் எதுவுமே செய்யாவிட்டால் நாளைக்கும் நான் பேராசையுள்ளவனாகவே இருப்பேன். `இந்தச் சமயத்தில்' என்னுள் அடிப்படை மாற்றம் ஏற்படாவிட்டால் நாளைக்கும் நான் அதுமாதிரியே இருப்பேன்.


அச்சத்தின் முக்கிய அம்சம் காலம். முழு மனித குலத்துக்குமே அச்சம் ஒரு பொது அம்சமாக இருப்பதனால், அந்த அச்சத்திற்கான வேரைப் பூரணமாக எம்மால் அழிக்க முடியுமா? எமது இதயத்தையும் மூளையையும் பூரணமாக ஈடுபடச் செய்தால் அச்சத்தைப் பூரணமாக எம்மால் அழிக்க முடியும். அச்சமின்மையே எல்லாவற்றிற்கும் மேலான சுதந்திரமாகும். நாம், அச்சத்திற்குக் காலமும் எண்ணமுமே காரணம் என்பதைப் புரிந்து கொண்டுவிட்டோம். எனவே நாம் இன்று மாறாவிட்டால் நாம் என்றுமே மாறப்போவதில்லை. அது தொடர்ச்சியான தள்ளிப்போடுதலாகவே இருக்கும்.

# தமிழீழ தேசிய மாவீரர்களின் நினைவாக இத்தாலியில் விளையாட்டுப் போட்டிகள்



தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலி பணிமனையால் 27.06.04 ஞாயிற்றுக்கிழமை தமிழீழ தேசிய மாவீரர்களின் நினைவாக நடாத்தப்படும் மெய்வல்லுநர், உதைபந்தாட்டப் போட்டிகளில் மெய்வல்லுநர் போட்டிகள் பலெர்மோ தேசிய விளையாட்டரங்கில் நண்பகல் 1 மணிக்கு மிகவும் சிறப்பாக விளையாட்டுத்துறையினரால் நடாத்தப்பட்டன. ஆரம்ப நிகழ்வாக தியாகத்தின் தீபம் திலீபனின் நினைவாக நடாத்தப்பட்டு வரும் திலீபன் தமிழ் பாடசாலை மாணவமணிகள் தமிழீழ தேசியக்கொடியுடனும், இத்தாலி தேசியக்கொடியுடனும் முன்னே வர அதன் பின்னா பாடசாலைக்கொடியுடன் அணி நடையில் வந்து ஆரம்ப நிகழ்வு இடத்தில் நிற்க ஆரம்ப நிகழ்வாக பொது ஈகைச்சுடரினை கப்டன் பருதியின் சகோதரனும், பணிமனையின் மாவீரா குடும்பநல விபரச்சேர்ப்பாளரும், செயற்பாட்டாளருமாகிய நந்தகுமார் அவர்கள் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ தேசவிடுதலைக்காக தனது இரண்டு சகோதரர்களை மாவீரர்களாக





கொடுத்த சகோதரி திருமதி. கிறிஸ்ரி அமுதா அவர்கள் ஏற்றி வைத்தார். அமைதி வணக்கம் நடைபெற்று பாடசாலை கீதம் இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 3 வயது முதல் 16 வயதுடைய மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெற்றன. இதில் ஓட்டம், தடையோட்டம், பழம்பொறுக்குதல், தராநடை, வாத்துநடை என்பனவும் எமது தாயக விளையாட்டுக்களில் ஒன்றான சாக்கோட்டமும், கயிறிழுத்தல் என்பனவும் நடைபெற்றன. மேலும் பாடசாலையில் கல்வி பயிலாத குழந்தைகளுக்கும் போட்டிகள் இடம் பெற்றன. பெரியவர்களுக்கான போட்டிகளும் நடைபெற்றன. இப்போட்டிகளில் பெண்கள் எதிலும் கலந்து கொள்ளாமை வேதனையை தந்தது. மாலை 5.30 மணியளவில் மாணவர்களின் இசைக்கான உடற்பயிற்சி நடாத்திக்காட்டி பலத்த பாராட்டுதல்களையும், கரகோசத்தையும் பெற்றனா். இப்பாடசாலையானது தமிழா் புனா்வாழ்வுக்கழகத்தால் தற்பொழுது நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மாலை 7.00 மணிக்கு பரிசில் யாவும் வழங்க ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவது பரிசினை மாவீரா் குடும்ப திருமதி அமுதா அவர்கள் வழங்கிக் கௌரவிக்க இதன் பின் இன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட தொழிற்சங்க பிரதிநிதிகள், அரசஅரசசார்பற்ற பிரதிநிதிகளும் பரிசில்களை வழங்கி கௌரவித்தனா். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பலெர்மோ மாநகர உதவி முதல்வர் திரு. Dott, Juseppe Appirenti அவர்கள் உரையாற்றினார். அதனை தொடர்ந்து பணிமனையின் செயற்பாட்டாளர்கள், தமிழா் புனா்வாழ்வுக்கழக செயற்பாட்டாளா்கள், ஏனைய உப அமைப்பினா், சம்மேளன நடுவர்கள் என பலா் பரிசில்கள் வழங்கினா். இரவு 9.00 மணிக்கு தேசியக்கொடியிறக்கலுடன் இனிதே நிறைவு பெற்றது.



IMPORTAS Asian Groceries

Importers, Distributors & Wholesalers of **Kings, Niru, Suryaa, TRS, GFT**

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45

| | | | |
|---|---|---|---|
| பறோட்டா | 36X375 | 1.00 | ஈரோ |
| Family பறோட்டா | 24X750 | 1.80 | ஈரோ |
| பாலப்பம் | 30X400 | 1.30 | ஈரோ |
| மசாலாதோசை | 30X400 | 1.30 | ஈரோ |
| இட்டலி சாம்பார் | 30X500 | 1.40 | ஈரோ |
| சப்பாத்தி | 36X400 | 1.10 | ஈரோ |
| பூரி மசாலா | 30X500 | 1.50 | ஈரோ |
| சென்ன பட்டூரா | 30X500 | 1.50 | ஈரோ |

சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports
Tel: 0049 -24625557

# இந்தியாவின் நண்பர்கள் யார்?

ஜே.வி.பியின் முழுத்தலைமைப் பீடமும் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஒருவர் மாத்திரம் இந்தியா ஊடாக இங்கிலாந்து சென்று அங்கு பலகாலம் வாழ்ந்தபின் அண்மையில் நாடு திரும்பியுள்ளார். இவர் யார் தெரியுமா? அவர்தான் சோமவன்ச அமரசிங்க. அவருக்கு இப்போது வயது 61 (2004) இவர்தான் ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சியின் கதாநாயகன். முதலாவது கிளர்ச்சி 1971ல் நடைபெற்றது. அதையடக்குவதற்கு இந்தியப் படைகள் சிங்களப் பகுதிகளிற்கு பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் அழைப்பையேற்று வந்தன. அக்காலப் பகுதியில் இந்திராகாந்தி பிரதமராகப் பதவிவகித்தார்.

சோமவன்ச அமரசிங்கவின் வாழ்வில் பல திடுக்கிடும் மர்மங்களுள்ளன. இவர் ஜே.வி.பியில் இயங்கிய காலத்தில் பிறாங்க் (Franc) என்ற பெயருடன் உலாவினார். றோகண விஜயவீர கொல்லப்பட்டபின் அவருடைய மனைவி சிறீமதி சித்திராங்கனி விஜயவீரவும் பிள்ளைகளும் திருகோணமலை கடற்படை முகாமில் அடைத்து வைக்கப்பட்டனர். இவர்களுடைய பாதுகாப்பிற்காகவே அவ்வாறு செய்யப்பட்டது என்று அன்றைய அரசு விளக்கம் கூறியது. கடற்படை முகாமிலிருக்கும் காலத்தில் பதினான்கு பக்கம்கொண்ட நீளமான கடிதத்தை சிறீமதி வெளியுலகில் வாழ்ந்த பெயர் குறிப்பிடாத நபருக்கு அனுப்பினார். இதில் அவர் பல அமைப்பு இரகசியங்களை வெளியிட்டுள்ளார்.

விஜயகுமாரதுங்காவின் படுகொலையில் சோமவன்ச அமரசிங்க நேரடியாகச் சம்மந்தப்பட்டவரென்ற குற்றச்சாட்டை இக்கடிதம் வலியுறுத்துகின்றது. அமரசிங்க ஒரு கொலைகாரன், பொதுப்பணத்தைத் திருடிய மோசடிக்காரன். ஜே.வி.பி அமைப்பிற்குத் துரோகம் செய்ததோடு காட்டிக் கொடுப்பும் செய்தவரென்ற குற்றச்சாட்டுக்களையும் இக்கடிதம் சுமத்துகின்றது. தனது கணவரின் இருப்பிடத்தைப் பொலிசாருக்குக் காட்டிக்கொடுத்ததோடு முழுத்தலைமைப் பீடத்தையும் அழிப்பதற்கு சோமவன்ச உதவினாரென்றும் கடிதம் கூறுகின்றது. ஜே.வி.பியை அழிப்பதற்காக ஜனாதிபதி பிரேமதாசாவும் தேசிய பாதுகாப்பமைச்சர் றஞ்சன் விஜயரட்ணாவும் அமைத்த பொலிஸ் - இராணுவ கட்டமைப்பின் உளவாளியாக சோமவன்ச அமரசிங்க செயற்பட்டாரென்றும் பரவலாக நம்பப்படுகின்றது. இதையும் இக்கடிதம் உறுதிப் படுத்துகின்றது.

சோமவன்ச அமரசிங்க களுத்துறை மாவட்டத்தில் ஒரு யூ.என்.பி சார்புக்கொள்கையுடைய குடும்பத்தில் பிறந்தவர். முன்னாள் கொழும்பு மாநகர சபை முதல்வர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சராகப் பதவி வகித்த சிறீசேன கூரேயின் மைத்துனராகவும் அமரசிங்க இடம் பெறுகிறார். 1971ம் ஆண்டுக் கிளர்ச்சியின்போது பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவைக் கடத்தும் முயற்சியை ஜே.வி.பி மேற்கொண்டது. `கொழும்பு நிகால்` என்பவர் தலைமையில் சோமவன்ச அமரசிங்கவும் வேறு சிலரும் சிறிமாவோவின் வாசஸ்தலத்தின் அறையொன்றில் பதுங்கி இருந்தனர். வழமைபோல் அந்த மாளிகையைப் பரிசோதித்த பாதுகாப்புப் பொலிசார் இக்குழுவினரை மடக்கிப் பிடித்தனர்.

நீதிமன்றின் முன் நிறுதப்பட்ட இக்குழுவினர் மீது அரசைக் கவிழ்க்க முயற்சி செய்த குற்றம், நாட்டின் பிரதமரை ஆட்கடத்தல் செய்வதற்கு எத்தனித்த குற்றம் என்பன சுமத்தப்பட்டன.

## அங்கம் 14

யாவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். சோமவன்ச அமரசிங்காவிற்கு இரு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவர் இந்தியாவின் றோ அமெரிக்காவின் சிஐஏ ஆகியவற்றின் உளவாளியாக சிறையிலிருந்து வெளியேறிய பின் உருவாகினார். உள்ளி




## ஆராரோ...! றோ றோவோ!

(பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர்)

ருந்து கொல்லும் பகை என்பார்களே, அதுதான் சோமவன்ச அமரசிங்க. அவரைப் பற்றிய வேறுதகவல்களை இன்னொரு அத்தியாயத்தில் பார்ப்போம். இப்படியான மனிதருடன் சந்திரிகா கூட்டுச் சேர்ந்திருப்பதை வியப்புடன் நோக்க வேண்டும்.

1997ன் நடுப்பகுதியில் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் அப்போது நான் பணியாற்றிய பத்தி



ரிகை அலுவலகத்திற்கு வந்திருந்தார். 'இந்தியாவின் நண்பர்கள் தமிழர்களே. சிங்களவர்களல்ல. இதனை இந்தியா உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஈழத்தமிழர்களோ விடுதலைப் புலிகளோ ஒரு போதுமே இந்தியாவுக்கெதிரான எந்தச் சக்தியினதும் கதவுகளைத் தட்டியதில்லை. அவர்கள் இந்தியாவுடன் மோதிய போதுகூட, இந்தியாவின் கதவுகளையே தட்டிக்கொண்டிருந்தனர். இந்தியாவின் கரங்களையே பற்றிக் கொள்ள முயன்றனர். ஆனால் சிங்கள அரசோ இந்தியாவின் விரோத சக்திகளையே தனது பிரதான நண்பர்களாகக் கொண்டுள்ளது. இந்திய உபகண்டத்தில் இந்திய விரோத சக்திகளின் நீண்டகால நோக்கங்களுக்குக் களமமைத்துக் கொடுப்பதன் மூலம், இந்தியாவின் நலன்களுக்கு விரோதமானதாகவே சிங்கள சிறீலங்கா செயற்படுகிறது. இதனை இந்தியா உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் கைகளைப் பற்றத் துடிக்கும் ஈழத்தமிழர்களதும் விடுதலைப் புலிகளதும் கரங்களை இந்தியா பற்றிக் கொள்ள வேண்டும்' என்பதை விளக்கி ஒரு தொடர் கட்டுரையினை வரலாற்று ரீதியாக எழுதும் படி கூறினார்.



அவர் கூறியபடி அத்தொடர் கட்டுரை எழுதப்பட்டிருக்கா விட்டாலும், சிறீலங்காவின் இன்றைய இராஜதந்திர சூழல் அவரையும் அன்று அவர் கூறிய கருத்துக்களையும் மீளவும் மனதில் உயிர்ப்பித்தது.

பாகிஸ்தானில், சிறீலங்காவிற்கான உயர் ஸ்தானிகராக RAW ன் முன்னாள் இயக்குனரான கேணல் பஸீர் வாலி நியமிக்கப்பட்டுள்ளார். அது குறித்து இந்திய வட்டாரங்கள் ஒரு சங்கடமான பதட்டம் நிலவுகிறது. சிறீலங்காவின் இராஜதந்திர வட்டாரங்களை இந்தியாவின் இந்த உணர்வுகளுக்கும் நலன்களுக்கும் மதிப்பளிக்காமல் கேணல் பஸீர் வாலியின் நியமனத்துக்கு அங்கீகாரமளித்துவிட்டன. இன்றைய தெற்காசிய இராஜதந்திர களத்தின் சூடான செய்திகள் இவையே.

இறைமையுள்ள ஒரு நாடு, மற்றுமொரு நாட்டுடனான தனது உறவுகளைப் பேணுவதற்குத் தூதுவர்களை நியமிக்கிறது. நாடுகளிடையேயான உறவுகள் தூதுவராலயங்கள் மூலமும், இரு தரப்பு ஒப்பந்தங்கள் மூலமுமே பெரிதும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில் பாகிஸ்தான் சிறீலங்காவுக்கான தனது உயர் ஸ்தானிகராக தனது நாட்டுக் குடிமகன் ஒருவரை நியமிப்பதில் என்ன பிரச்சினை எழமுடியும்? இதில் இந்தியாவுக்கோ ஈழத்தமிழருக்கோ ஏன் சங்கடமோ பதட்டமோ ஏற்பட வேண்டும்?

உண்மையில் தூதரகம் என்பது குறித்த நாட்டுக்குத் தேவையான தகவல்களைத் திரட்டிக் கொள்ளும் 'நாகரிகமான உளவு நிலையம்' என்பதும் அந்த நிலையத்தின் இயக்குநரே தூதுவர் என்பதுவும் இராஜதந்திர நடவடிக்கைகளைப் பற்றிய அடிப்படை அறிவுள்ளவர்களுக்குக் கூடத் தெரிந்த விடயமாகும். இதில் எதுவித இரகசியங்களும் கிடையாது.

அதுமட்டுமன்றிக் குறித்த நாடொன்றில் இருக்கும் தூதரகமொன்று அந்நாட்டில் மட்டுமன்றி அதன் அயல் நாடுகளுக்கும் தனது வலையமைப்பை விஸ்தரித்துக் கொள்வதும் இயல்பானதே. இது நேரடித் தொடர்புகள் இல்லாத சூழலிலோ, அல்லது கவனத்தைக் கவராமல் தரவு சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைமையிலோ வசதியானதாகவும் இருக்கும்.

ஆகவே தான் எந்தவொரு நாட்டுக்குமான இராஜதந்திர நியமனங்களின் மீதும் ஏனைய நாடுகள், குறிப்பாக அவற்றின் உளவுத்துறைகள் தமது கவனத்தைக் குவித்திருக்கின்றன. தற்போதைய பாகிஸ்தானின் சிறீலங்காவுக்கான உயர்ஸ்தானிகர் நியமனத்தின் மீது இந்தியாவின் அதியுயர் உளவு அமைப்பான 'றோ' (Research and analytical wing - RAW) வின் முன்னாள் அதிகாரியான பி.ராமன் வெளிப்படுத்தியுள்ள எச்சரிக்கையும் அவ்வகையினதே.

கேணல் பஸீர் வாலி தென்னிந்தியாவை உளவு பார்ப்பதற்கான தளமாக இலங்கையை மாற்றிவிடுவார் எனவும்,

> உண்மையில் தூதரகம் என்பது குறித்த நாட்டுக்குத் தேவையான தகவல்களைத் திரட்டிக் கொள்ளும் 'நாகரிகமான உளவு நிலையம்' என்பதும் அந்த நிலையத்தின் இயக்குநரே தூதுவர் என்பதுவும் இராஜதந்திர நடவடிக்கைகளைப் பற்றிய அடிப்படை அறிவுள்ளவர்களுக்குக் கூடத் தெரிந்த விடயமாகும். இதில் எதுவித இரகசியங்களும் கிடையாது.

இந்த உளவு வேலைகளுக்கு கொழும்பிலிருந்து தென்னிந்தியாவுக்கு வழமைாகப் பயணஞ் செய்யும் முஸ்லிம் வர்த்தகர்களை அவர் இலகுவாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் எச்சரிக்கும் இராமன் மற்றுமொரு விடயத்தினையும் குறிப்பிடுகிறார்.

இந்தியாவில் எல்லைகடந்து இயங்கும் பிரிவினைவாத இயக்கங்களில் ஒன்றான லக்சர் இ.தொய்பாவினைப் பயன்படுத்தி, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் செறிவாக வாழும் முஸ்லிம்களை, வாலி ஆயுதமயப்படுத்தி விடுவார் என்பதே அந்த எச்சரிக்கை. இதற்கு அவர் பாகிஸ்தானின் ISI க்கு, மேற்படி பிரிவினைவாத இயக்கங்களுடன் உள்ள தொடர்பினை ஆதாரங்காட்டுகிறார்.

இவ்வாறான உளவாளிகள் இனிமேல் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே பயணஞ்செய்ய வேண்டிய தேவையின்றி, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து தமது தொடர்புகளைப் பேணுவதன் மூலம் தமது கடவுச் சீட்டுக்களில் பாகிஸ்தானுக்கான பயணம் தொடர்பான எந்தப் பதிவும் ஏற்படாமல் பாதுகாக்க முடியும். இதனால் இவர்களை றோ வினால் கண்காணிப்பது கடினமாகிவிடும்.

எனவேதான் கேணல் வாலியின் நியமனத்தை இந்திய அரசு எதிர்க்க வேண்டுமெனவும், சிறீலங்கா அரசு அந் நியமனத்தை நிராகரிக்க வேண்டுமெனவும் ராமன் வலியுறுத்தியிருக்கிறார்.

(இன்னும் வரும்)

# ஜெனீவா யுத்த...

(11ம் பக்க தொடர்ச்சி)

இராணுவ வீரர்கள் சூரர்களாகவே இருக்கின்றனர். உதாரணத்திற்கு யாழ் மண்ணை ஆக்கிரமித்த பொழுது அங்கிருந்த பெருமளவு சொத்துக்களை படையினர் சூரையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த தமிழ் மக்களின் சொத்துக்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு அரச படையே பதில் சொல்ல வேண்டும். அனைத்து வளமும் சொத்துக்களும் இராணுவத்தால் சுரண்டப்பட்டு விட்டது என்பது உண்மை.

இராணுவ நடவடிக்கைகள் இராணுவ இலக்குகளுக்கு எதிரானவையாக மட்டும் இருக்க வேண்டும் என ஜெனீவா உடன்படிக்கை கூறுகின்றது. ஆனால் சிறீலங்காப் படையினர் பொதுமக்களை இலக்காகக் கொண்டு தமது நாசகார சதிதிட்டங்களை தீட்டி தமிழர் பண்பாட்டு கலாச்சார ரீதியான அடையாள வரலாற்றுச் சின்னங்களையும் அழிக்கின்றனர். பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்கள், தமிழர் கலாச்சார சின்னங்கள் போன்றவற்றை அழிக்கின்றனர். இதன் ஒரு வடிவமே யாழ் நூல் நிலைய எரிப்பாகும்.

'இராணுவ நடவடிக்கைகள் தாக்குதலின் போது பொது மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களையும் அழிவுகளையும் தவிர்ப்பதற்கும் இயன்றளவு குறைப்பதற்கும் கேள்விக்குறியே.

இவற்றையெல்லாம் கண்டும் காணாமல் இருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க தலைமையும், ஐக்கிய நாடுகள் சபையும், மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சேர்ந்தே நாடகம் ஆடுவதைப்போல் உள்ளது. அரசையும் அரச படையுடன் இவற்றினையும் சேர்த்தே தமிழர்கள் கண்டிக்கவேண்டியுள்ளது.

மனிதனின் அடிப்படை உரிமைகளை பேணிப்பாதுகாக்க சட்டமியற்றிய ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் தமிழரின் அடிப்படை மனித உரிமைகள் பேணப்படாததை கண்டும் காணாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். யுத்த சட்டங்களை முன்னெடுக்கவும் கண்காணிக்கவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு படையும் இன்ரப்போலும், சர்வதேச நீதிமன்றமும் வடக்குக் கிழக்கில் சிவிலியன்களின் பாதுகாப்பினை உத்தரவாதப் படுத்துவதிலும் தமிழரின் துன்பத்தினையும், அழிவினையும் தடுப்பதிலும் ஐ.நா சபை செஞ்சிலுவைச் சங்கம் என்பன இலங்கையில் தனது குறிக்கோளையும் இலக்கினையும் அடைவதில் வெற்றி பெறவில்லை. தோல்வியையே சந்தித்துள்ளன என்பது வெளிப்படையான உண்மையாகும்.

ஐ.நாவின் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஜெனீவா

**சாதாரண சிவிலியன் விடயத்திலேயே ஜெனீவா உடன்படிக்கை சாசன விதியை கடைப்பிடிக்கத் தவறும் சிறீலங்கா இராணுவம் அவர்களுடன் எதிரிகளாக போரிடும் விடுதலைப் புலி கைதிகள் விடயத்தில் எவ்வளவு தூரம் அநாகரீகமாக செயற்படும் என்பதனை சொல்லித் தான் விளக்க வேண்டும் என்பதில்லை.**

தொடர்ந்தும் கவனம் எடுக்க வேண்டும்' என சாசனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் சிறீலங்கா பாதுகாப்பு படையினர் மக்கள் குடியிருப்புக்கள், வளங்கள் போன்றவற்றை அழிப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றார்கள்.

'பாடசாலைக் கட்டடங்கள், ஆலயங்கள் போன்ற பொதுமக்களுக்குரிய உடமைகளில் எதிரிகளின் நடமாட்டம் தொடர்பான சந்தேகம் தோன்றுகின்ற போது அவை பொதுமக்கள் சம்பந்தப்பட்டவை எனக் கருதி அதனை தாக்குவதை தவிர்ப்பதே யுத்த தருமம் ஆகும்.'

ஆனால் சிறீலங்கா அரச படையிடம் யுத்த தருமம் இருந்தால் தேவாலயங்களிலும் கோவில்களிலும், பாடசாலைகளிலும் குண்டுகளைப் போட்டு கொலைவெறியாட்டம் ஆடியிருப்பார்களா ?

'போர் நடைபெறும் கால கட்டத்தில் பொதுமக்கள் எவ்வளவு சாதாரண வாழ்வில் ஈடுபட முடியுமோ அந்தளவுக்கு ஈடுபட அனுமதிக்க வேண்டும்.' என ஜெனீவா சாசனம் கூறுகின்றது. ஆனால் அவ்விதிகளை அரச படை எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கின்றார்கள் என்பது சாசனக் குறிக்கோளில் வெற்றி பெறாமைக்குரிய காரணம் சிறீலங்கா ஆயுதப் படையின் சாசனத்தை மதித்து நடக்காமையே. இவை படுபயங்கர மோசமான இராணுவ சட்ட விதிகளுக்கு விரோதமான சட்ட மீறல்கள் ஆகும். ஜெனிவா சட்ட விதிகளை மீறி நாட்டின் கௌரவித்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய வீரர்களையும் தளபதிகளையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை வழங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், மனித உரிமை ஆணைக்குழுவும், ஐக்கிய நாடுகள் சபையும் நடவடிக்கை எடுக்குமா ? இனியும் இவ்வாறு நடைபெறாமல் இருக்க கவனம் செலுத்துவார்களா ? அல்லது அவர்கள் தமிழர் தாயகத்தில் இருந்து மூட்டை முடிச்சுக்களை கட்டிக் கொண்டு போவார்களா ?

சாதாரண சிவிலியன் விடயத்திலேயே ஜெனீவா உடன்படிக்கை சாசன விதியை கடைப்பிடிக்கத் தவறும் சிறீலங்கா இராணுவம் அவர்களுடன் எதிரிகளாக போரிடும் விடுதலைப் புலி கைதிகள் விடயத்தில் எவ்வளவு தூரம் அநாகரீகமாக செயற்படும் என்பதனை சொல்லித் தான் விளக்க வேண்டும் என்பதில்லை.

## சச்சி மாஸ்டரே மாறன்.......

(03ம் பக்க தொடர்ச்சி)

மாவட்ட இராணுவப் பிரிவிலிருந்து - அமைப்பினால் அவர் வெளியேற்றப்பட்டார்.

ஆனால், கடந்த மார்ச்சில் புலிகள் அமைப் பிலிருந்து வெளியேறித் தனித்து இயங்குவதற்கு கருணா முடிவு செய்ததும் அவரை மீள அழைத்தார். அம்பாறை மாவட்டத்துக்கான தனது தளபதியாகவும் சச்சி மாஸ்டரை கருணா நியமித்தார்.

அதே மார்ச் மாதத்தில் காத்தான்குடிப் பகுதியில் வான் ஒன்றில் ஆயுதங்கள் மற்றும் கிரனேட்டுடன் சென்று கொண்டிருக்கையில் சச்சி மாஸ்டரையும் அவரது ஆள்கள் நால்வரையும் பொலீஸார் கைது செய்தனர்.

அன்றைய தினம் அதற்கு முன்னர் காலையில் மட்டக்களப்பு நகரத்தில் வைத்தும் அவரையும் அவரது குழுவினரையும் பொலீஸார் கைது செய்திருந்தனர். என்றாலும் இராணுவப் புலனாய்வுப்பிரிவின் உள்ளூர் அதிகாரி ஒருவரின் தலையீட்டை அடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர் எனப் பொலீஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், பின்னர் அவர்களைக் கைது செய்த காத்தான்குடிப் பொலீஸாரோ இவ்வித தலையீட்டை ஏற்க மறுத்ததுடன், அவர்களை விடுவிப்பதாயின் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் எழுத்து மூலக் கோரிக்கை தேவை என விடாப்பிடியாகக் கூறினராம்.

இது சரிவராமல் போகவே பொலீஸார் அவர்களை நீதிமன்றத்தில் முன்நிறுத்தினர். மார்ச் 31ம் திகதி அவர்கள் நீதவானினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பயங்கர ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு பிணை அனுமதி இல்லை என்பதால் அவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். அச்சமயத்திலேயே சச்சி மாஸ்டரை கருணாவின் பேச்சாளராகச் செயற்படுத்துவதற்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஏற்பாடு செய்து கொடுத்தது என்று கூறப்படுகின்றது.

## சந்திரிகாவின் நாடகபாணித்....

(12ம் பக்க தொடர்ச்சி)

*பிரதேசங்களை வளைத்துக் கொண்டுள்ள இராணுவத்தால் அமைக்கப்பட்ட இந்தப் பாதுகாப்பு வலயங்களில் இருந்து தமது வீடுகள், நிலங்கள் மற்றும் வியாபார நிலையங்களை கைவிட்டுச் செல்லத் தள்ளப்பட்டுள்ளனர்.*

*குமாரதுங்கவும், சுதந்திரக் கூட்டமைப்யினரும் நடைபெறவுள்ள ஆறு மாகாண சபைகளுக்கான தீர்க்கமான தேர்தல்களை எதிர்கொண்டுள்ளனர். உறுதியான வெற்றி எதிர்க் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெற உதவும். ஆனால், தோல்வி அழிவுகரமானதாக இருக்கும். குமாரதுங்கவின் பேச்சு, வெகுஜனங்களின் கண்களைக் கட்டும் அதேவேளை, தேசிய பொருளாதாரத்தையும், சிறு வியாபாரத்தையும் அபிவிருத்தி செய்வது பற்றிய வாய்வீச்சுகள் மூலம் தனது பேரினவாதக் கூட்டாளியான ஜே.வி.பி.யை சாந்தப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டிருந்தது. சுதந்திரக் கூட்டமைப்பின் பிரச்சினை என்னவென்றால், சாதாரண உழைக்கும் மக்கள் மத்தியில் முழு அரசியல் நிறுவனத்தையிட்டு பரந்த அவநம்பிக்கை இருந்து கொண்டுள்ளதாகும்.*

*எதிர்க் கட்சியான ஐ.தே.மு. அரசாங்கத்தின் பிரச்சினைகளை அதிகரிக்கச் செய்கின்றது. அது நாடாளுமன்றத்தில் உள்ள பூசல்களை ஜாதிக ஹெல உறுமயவுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக பயன்படுத்தியது. இப்போது எதிர்ப்பு இயக்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அது தனக்கு பெரும்பான்மை இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக 117 கையொப்பங்களைப் பெற்றுள்ளது. இந்தப் பட்டி?யல் சபாநாயகருக்கு கையளிக்கப்படவுள்ளது. ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்து அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக இல்லாத போதிலும், குமாரதுங்கவும், சுதந்திரக் கூட்டமைப்யிரும் அந்த அச்சுறுத்தலுக்குத் தொடர்ந்தும் முகம் கொடுக்கின்றனர்.*

*குமாரதுங்க அதிகாரத்தில் தொங்கிக் கொள்வதில் நம்பிக்கையின்றி உள்ளார். அவரது மிகையான பேச்சு நாடாளுமன்ற மற்றும் அரசியலமைப்புக்கு முரணான வழிவகைகள் ஊடாக ஆட்சி செலுத்துவதற்கான சமிக்ஞையை சக்தி வாய்ந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளது. `அரசாங்கமானது மக்கள் சக்தி மற்றும் செயற்றிறம், திறமையுடன் அரசாங்கத்தை முகாமைப்படுத்துவதற்குத் தேவையான தகுதியையும் கொண்டுள்ளது' என அவர் பிரகடனம் செய்தார். ஆயினும், `இருந்து கொண்டுள்ள தேர்தல் முறையால் மக்களின் வாக்கை ஒரு நியாயமற்ற முறையில் கையாள்வதன் காரணத்தால் நாடாளுமன்றத்தில் ஒரு பெரும்பான்மையை நிரூபிப்பதில் அக்கறை செலுத்துகின்றது' என அவர் மேலும் தெரிவித்தார்.*

*எல்லா சர்வாதிகாரிகளையும் போலவே, குமாரதுங்க நாடாளுமன்ற ஒழுங்குகளையும் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் நசுக்குவதை நியாயப்படுத்துவதற்காக `மக்கள் சக்திக்கு' அழைப்பு விடுக்கின்றார். நாடாளுமன்ற அரசியலைத் திரிபுபடுத்தியும் கூட, ஜனாதிபதி `மக்களுக்காக' பேசுவதாகக் கூறுவது தெட்டத்தெளிவான மோசடியாகும். நாட்டின் விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ், சுதந்திரக் கூட்டமைப்பு 225 நாடாளுமன்ற ஆசனங்களில் 105 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது வெறும் 37.5 வீதமானது அதன் வாக்குகளை விட மிக அதிகமானதாகும். விகிதமாகும்.*

*ஜே.வி.பி. நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகவே வெறுப்புக்கிடமான வகையில் நடந்து கொண்டதோடு யூன் 8 அமர்வின்போது இடம்பெற்ற பூசல்களின் மையமாகவும் இருந்து வந்தது. மா ஓ வாதம் மற்றும் காஸ்ட்ரோ வாதத்தினதும் கலவையின் அடிப்படையில் 1960களில் உருவாக்கப்பட்ட ஜே.வி.பி., 1980களின் பிற்பகுதியில் தொழிலாளர்கள் மற்றும் அரசியல் எதிரிகள் மீது அது மேற்கொண்ட படுகொலைகளுக்காக பிரசித்தி பெற்றது. 1990 களில் மக்களின் வெறுப்பைக் குறைப்பதற்கான ஒரு வாயிலாகக் கருதி பதிவு செய்யப்பட்ட ஜே.வி.பி.க்கு, ஏப்ரல் 2 தேர்தலில் மக்கள் சார்பு வாய்வீச்சுகள் மற்றும் சிங்களப் பேரினவாதத்தின் ஒரு கலவையை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடத்தக்களவு இலாபமடைந்துள்ளது.*

*முதல் முறையாக அரசாங்கத்திற்கு வந்த ஜே.வி.பி. தனது பேரினவாத முழக்கத்தை சிங்கள பௌத்த மதகுருக்களின் அரசை ஸ்தாபிக்க பரிந்துரைக்கும் ஜாதிக ஹெல உறுமய தனதாக்கிக் கொண்டதைக் கண்டது. விடுதலைப் புலிகளுக்கு நாட்டை விற்றுத்தள்ளுவதாக ஐ.தே.மு.வைக் கண்டனம் செய்த ஜே.வி.பி.வாய்வீச்சாளர்கள், ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களும் – அனைவரும் பௌத்த பிக்குகள் – இதையே செய்வதாக குற்றம்சாட்டுகின்றனர். பாராளுமன்றத்தில் ஜே.வி.பி.யும் ஆத்திரமூட்டல் மற்றும் குண்டர் நடவடிக்கைகளைக் கையாண்டது. இவை அனைத்தும் `மக்களின்' பேராலேயே நடத்தப்பட்டன. இவை அவர்கள் பற்றிய பாசிச புகைச்சலுக்கும் மேலானதாகும்.*


*தேர்தல் பிரசாரத்தின்போது, சுதந்திரக் கூட்டமைப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அகற்றி நாடாளுமன்ற முறைக்குத் திரும்பும் என குமாரதுங்க பிரகடனம் செய்தார். இந்தப் பிரேரணை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மீதான எதிர்ப்பைப் பயன்படுத்தி குமாரதுங்கவை ஒரு நாடாளுமன்றப் பிரதமராகத் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க அனுமதிப்பதற்கான ஒரு முறைகேடான முயற்சியாகும். தற்போதைய அரசியலமைப்பின் கீழ் அவர் மூன்றாவது முறையாகவும் போட்டியிடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.*

*குமாரதுங்க தொலைக்காட்சியில் அவரது பேச்சில் இந்த விவகாரத்தை எழுப்பினார். ஆயினும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையின்மையால் முன்வைக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு நாடாளுமன்றத்தை ஒரு அரசியலமைப்புச் சபையாக மாற்றும் திட்டத்தை அவரால் முன்னகர்த்த முடியவில்லை. ஒரு சாதாரண பெரும்பான்மையுடன் அவ்வாறு செய்வதற்கான அவரது திட்டமும் கூட, மூன்றில் இரண்டு நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கோரும் அரசியலமைப்பை மீறுவதாக அமையும்.*

*அரசியலமைப்பைத் தவிர்ப்பதை நியாயப்படுத்துவதற்கு ஜே.வி.பி. முயற்சிக்கின்றது. இந்தக் கட்சி, (பாராளுமன்றத்தை சுட்டிக் காட்டி) `மக்கள் சக்தியை தியவன்னாவில் மூழ்கிப்போக இடமளிக்க முடியுமா?' என்ற தொனிப்பொருளில் ஒரு பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது.*

*`மக்கள் சக்திக்கான' இந்த அழைப்பின் முக்கியத்துவத்தையிட்டு எவரும் எந்தவொரு சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. குமாரதுங்கவோ அல்லது ஜே.வி.பி.யோ இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யப் போவதில்லை. இந்த மிகை நாடாளுமன்ற நடவடிக்கைகள், நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட இக்கட்டான நிலையில் ஆளும் வர்க்கத்தின் பிரிவுகளுக்கிடையிலான பிளவுகளைப் பிரதிபலிக்கின்றன. குமாரதுங்கவினதும், அவரது பங்காளிகளினதும் சர்வாதிகார ஆளுமையை நோக்கிய எந்தவொரு நகர்வும் சாதாரண உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் ஜனநாயக உரிமைகளை நேரடி இலக்காகக் கொள்ளும்.*

# விஜயகாந்த் இன்னொரு ரஜினிகாந்த்தா ?



அரசியலுக்குள் நுழைய முயற்சித்து அவமானப்பட்டுப் போயிருப்பவர் தமிழ் திரையுலகின் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த். தற்போது பரபரப்பான அரசியல் விமர்சனங்களைச் செய்து பாட்டாளி மக்கள் கட்சியின் விரோதத்தை சந்திக்கத் தொடங்கியிருபப்பவர் நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த்.

விஜயகாந்த் இன்னொரு ரஜினிகாந்த்தா ?


ஆமாம் என்று பாட்டாளி மக்கள் கட்சி நம்புகிறது. நடிகராக அறிமுகமான புதிதில் விஜயகாந்த், அப்போதுதான் பிரபலமாகி வந்த ரஜினி 'ஸ்டைலைப்' பின்பற்றி நடிக்கத் தொடங்கினார். பெயரையும் விஜயராஜிலிருந்து விஜய்காந்த் என்று மாற்றி வைத்துக் கொண்டார். நடிகர் மோகனுக்கு 'புவர் மேன்ஸ் கமல்' என்று பெயர் இருந்தது போல விஜய்காந்த்தும் 'புவர் ப்ரொட்யூசர்ஸின் ரஜினி'யாக இருந்தார். ஆரம்ப கட்டங்களில் ரஜினியை விட விஜய்காந்த்தே சாதாரண மக்களுக்காகப் போராடும் கோபக்கார 'ஆங்ரி யங் மேன்' பாத்திரங்களை அதிகமாக ஏற்றிருக்கிறார். ரஜினி அவ்வப்போது தெரிவிக்கும் கருத்துகள் அரசியலில் நுழைவதற்கான ஆயத்தமாகக் கருதப்பட்டது போலவே விஜய்காந்த்தும் அரசியல் 'கமெண்ட்'டுகள் செய்து வந்திருக்கிறார். ரஜினியைப் போலவே விஜய்காந்த்துக்கும் பாட்டாளி மக்கள் கட்சியுடன்தான் நேரடி மோதல் உருவாகியிருக்கிறது. உண்மையில் இருவருக்கும் உள்ள ஒற்றுமைகள் இத்துடன் முடிந்து விடுகின்றன.

விஜய்காந்த் இன்னொரு ரஜினிகாந்த் அல்ல என்பதே உண்மை.

விஜய்காந்த்தின் ரசிகர் மன்ற அமைப்பு என்பது ரஜினியுடையது போன்றது அல்ல. அதை விடக் கட்டுக்கோப்பான நிர்வாக அமைப்பு உடையதாக அது திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. ரஜினிக்கு நேரடி தொடர்பு மன்றங்களுடன் இல்லை. சத்யநாராயணா மூலமே அது இயக்கப்பட்டது. விஜய்காந்த் அடிக்கடி மாவட்ட அளவிலான ரசிகர் மன்ற நிர்வாகிகளுடன் நேரடி சந்திப்பின் மூலம் தொடர்பு வைத்திருக்கிறார். மன்றம் ஏற்கனவே அரசியல் அனுபவத்தை ஓரளவு பெற்றிருக்கிறது. உள்ளாட்சி தேர்தல்களில் விஜய்காந்த் ரசிகர் மன்ற பொறுப்பாளர்கள் ஆங்காங்கே தேர்தலில் நின்று ஜெயித்திருக்கிறார்கள். விஜய்காந்த்தின் அரசியல் என்பது என்ன, 'இமேஜ்' என்பது என்ன?

இரண்டுமே ரஜினியிடமிருந்து மாறுபட்டவைதான். விஜய்காந்த் தன்னை ஒருபோதும் இந்துத்துவா, பி.ஜே.பி ஆதரவாளனாக வெளிப்படுத்தியதில்லை. காங்கிரஸ் குடும்பப் பின்னணியிலிருந்து வந்தபோதும், தி.மு.கவினரைப்போல தமிழ், தமிழன் உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார். அதே சமயம் தன்னை தி.மு.க காரனாக அடையாளம் காட்டுவதை தவிர்த்திருக்கிறார். அவருடைய நெருங்கிய நண்பர் தயாரிப்பாளர் இப்ராகிம் ராவுத்தர், மூப்பனாரை ஆதரித்த காங்கிரஸ் அனுதாபி.

சூழலின் கட்டாயத்தால் ரஜினி காவிரிக்காக உண்ணாவிரதம் இருந்தாலும் கூட, தமிழுணர்வுள்ளவராக ஏற்கப்பட்டவரல்ல. விஜய்காந்த்துக்கு பலமாக உள்ள ஒரு 'இமேஜ்' தமிழ் உணர்வுள்ள நடிகர் என்பதாகும். அவருடைய தாய்மொழி தெலுங்கு என்று எதிரணி பிரசாரம் செய்தாலும், அது எடுபடக்கூடியதல்ல. எம்.ஜி.ஆர் மலையாளி என்பதை தமிழர்கள் பொருட்படுத்தாமல், அவரை தமிழ் நடிகராகவே பார்த்தது போன்ற வசதிதான் விஜய்காந்த்துக்கும் இருக்கிறது. எம்.ஜி.ஆரைப் போலவே விஜய்காந்த்தும் பிற மொழிப்படங்களில் நடிப்பதில்லை.



விஜய்காந்த்தின் சினிமா ஒன்றும் முற்போக்கானதல்ல.

ரஜினி, சரத்குமார் வகையறாக்களின் படங்கள் போலவே பிற்போக்கான கருத்துக்களை உடையவைதான். ஆரம்பகாலத்தில் 'சிவப்பு மல்லி, சட்டம் ஒரு இருட்டறை' போன்று தனி நபர் சாகசக் கம்யூனிச பூச்சுடைய படங்களில் நடித்தார். அடுத்த கட்டத்தில் கிராமிய அப்பாவி இளைஞனின் நெகிழ்ச்சியான காதல் கதைகள். பின்னர் வயதாக ஆக, நிலப்பிரபுத்துவக் கதைகளில், ஊருக்கு நல்லது செய்யும் பணக்கார நிலச்சுவான்தார் – நாட்டாமை, ஜாதித் தலைவர் பாத்திரங்களை ஏற்றார். முஸ்லிம் தீவிரவாதிகளை அடக்கி ஒடுக்கும் 'சினிமா பார்முலா' தேசபக்தியில் போலீஸ் – இராணுவ அதிகாரிகள் பாத்திரங்களில் சில படங்கள். சற்று வித்தியாசமானது என்று கருதப்படும் ஒரே படம் இலஞ்சத்தை எதிர்த்துப் போராடும் இளைஞர் படையை உருவாக்கும் தீவிரவாதக் கல்லூரி ஆசிரியராக நடித்த ரமணா. இவை எதிலும் விஜய்காந்த்தின் அரசியல் பார்வை தெளிவாக விவரமாக வெளிப்பட்டுவிட்டதாகக் கொள்ள முடியாது.

சுமார் இருபதாண்டுகள் முன்னர் வெளியான ஆபாவாணனின் ஊமைவிழிகள் படம் விஜய்காந்த் தன்னை நல்ல நடிப்புத்திறமை உள்ளவராக வெளிப்படுத்திக் கொண்ட படம் என்று அது, வெளியானபோது கருதப்பட்டது. அந்தப்படத்தில் விஜய்காந்த் ஏற்ற போலீஸ் அதிகாரி பாத்திரத்திற்குத் தமிழ்ப் பெயர் கிடையாது. காமராஜருக்கு காங்கிரசாரால் தரப்பட்ட பட்டங்களில் ஒன்றான தீனதயாளன் என்பதே விஜய்காந்த்தின் பாத்திரப் பெயர். படத்தில் இரு வில்லன்கள். ஒரு பாத்திரம் கருணாநிதியை நினைவுபடுத்தும் ஊழல் அரசியல்வாதி (மலேசியா வாசுதேவன் நடித்த நினைவு). இன்னொன்று எம்.ஜி ஆரை நினைவுபடுத்தும் விதத்தில் அமைக்கப்பட்ட, பெண் பித்துபிடித்த கவர்ச்சியான வில்லன். இரு வில்லன்களுமாக சீரழிக்கும் தமிழகத்தைக் காப்பாற்ற தீனதயாளனுக்கு உத்வேகம் தருபவர், கதர்சட்டை அணிந்த விடுதலைப் போராட்ட தியாகி (விசு). உடன் ஒத்துழைப்பவர் நேர்மையான பத்திரிகையாளர் (ஜெய்சங்கர்). அன்புக்குரிய மனைவி கொல்லப்பட்ட பிறகும் போலீஸ் அதிகாரி தீனதயாளன், பத்திரிகைத் துறையினர் உதவியுடன் இரு வில்லன்களையும் வீழ்த்துவதுதான் கதை.

இதுவரை விஜயகாந்த்தின் படங்கள், இரசிகர் மன்ற நடவடிக்கைகள், விஜயகாந்த்தின் அவ்வப்போதைய பேட்டிகள், அறிக்கைகள் எல்லாவற்றிலிருந்தும் கிடைக்கும் அறிகுறிகளைத் தொகுத்துப் பார்த்துச் சொல்வதானால், விஜயகாந்த் தனக்கு உருவாக்கி வைத்துள்ள 'இமேஜ்'படி அவர் தமிழ் உணர்வாளர். ஆனால் திராவிடக் கட்சிக்காரர் அல்ல. இந்திய தேசியத்தில் நம்பிக்கையுள்ளவர். ஆனால் காங்கிரஸ்காரர் அல்ல. கடவுள் நம்பிக்கை உடையவர். அழைத்தபோது சங்கர மடத்துக்கு சென்று வந்து அது பற்றி பத்திரிகைக்கு பேட்டியும் அளித்தவர். ஆனால் பி.ஜே.பி ஆதரவாளரோ, இந்துத்துவ வாதியோ அல்ல.

விஜய்காந்த் போன்ற ஒரு நடிகருக்கு எப்படிப்பட்ட நிர்வாகத்திறமை இருக்க முடியும்? ரஜினிக்கு பெரும் நிர்வாகத் திறமைகள் எதுவும் இருப்பதாக இதுவரை நிரூபிக்கப்படவில்லை. ஒரு பத்திரிகையாளர் சந்திப்பைக்கூட அவரால் நேர்த்தியாக நடத்த முடிந்ததில்லை. விஜய்காந்த்தின் இரசிகர் மன்ற அமைப்பு அரசியல் கட்சி போல கட்டமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. விஜய்காந்த்துக்கு சொந்தமாக பொறியியல் கல்லூரி நடக்கிறது. அது பற்றி இதுவரை பெரிய புகார்கள் எதுவும் எழவில்லை. விஜய்காந்த்தின் நேரடி நிர்வாக அனுபவத்துக்கு ஒரே சாட்சி நடிகர் சங்கம்தான். அதன் தலைவராக விஜய்காந்த் பலதரப்பட்ட பார்வையுடைய நடிகர்களை அரவணைத்துச் செல்வதில் வெற்றி கண்டிருக்கிறார். காவிரி பிரச்சினைப் போராட்டத் தகராறுகளில், பாரதிராஜா ஒரு புறமும், ரஜினி ஒரு புறமுமாக விஜய்காந்த்துக்கு நெருக்கடிகளை உருவாக்கிய போதும், அவற்றை அவர் வெற்றிகரமாக சமாளித்திருக்கிறார்.

இந்த இமேஜ், இந்த அனுபவம் எல்லாம் நிச்சயம் அரசியல் ரீதியாக ரஜினிகாந்த்துடன் ஒப்பிடும்போது விஜயகாந்த்தின் நிலைமை ரஜினியை விட மேலானதாகவே இருக்கிறது. அதனல் ரஜினியை அரசியல் செல்வாக்கு அற்றவர் என்று எளிதில் அம்பலப்படுத்தி வெற்றி கண்டது போல விஜய்காந்த்தையும் செய்துவிடலம் என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைமை போடும் கணக்கு முற்றிலும் சரியான கணக்கு அல்ல. (இதழ் அச்சாகும் வேளையில் பா.ம.க தன் போராட்டத்தை நிறுத்திக் கொள்வதாக அறிவித்திருப்பது ஓரளவு தப்புக் கணக்கை உணர்ந்திருப்பதன் அடையாளம்தான்.) பா.ம.கவின் வன்முறைக்கு பயந்து ரஜினி ரசிகர்கள் சிதறி ஓடியது போல, விஜய்காந்த்தின் இரசிகர் மன்றம் ஓடவில்லை. பதில் தாக்குதல் நடக்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டும். ரஜினிக்கு ஆதரவாக சினிமா துறையிலிருந்து எழுந்த குரல்களை விட அதிகமான குரல்கள் விஜய்காந்த்துக்கு எழுந்துள்ளன.

ஆனால் விஜய்காந்த்துக்கு தமிழக அரசியலில் பா.ம.கவுடன் மோதலில் தொடங்கி தன்னை ஒரு அரசியல் சக்தியாக வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா? அதற்கான அரசியல் வெற்றிடம் ஏதும் காலியாக உள்ளதா என்று கவனிக்க வேண்டும்.

தமிழக அரசியலில் இன்று தி.மு.க, அ.தி.மு.க இரண்டுக்கும் சரியான மாற்று சக்தி ஒன்று உருவானால், மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய தலைமை அதற்கு இருக்குமானால், நிச்சயம் மூன்றாவது அணி வளர இடமிருக்கிறது. ஓட்டு போடாத 42 சதவிகிதம் பேரில் கணிசமானவர்கள் ஓட்டு போடாமலிருப்பதற்கான காரணங்களில் ஒன்று தி.மு.க, அ.தி.மு.க இரண்டின் மீதும் உள்ள வெறுப்பும் அலுப்புமாகும். இந்த வெற்றிடத்தை தன் தலைமையின் கீழ் காங்கிரசால் நிரப்பிவிட முடியுமென்று மூப்பனாருக்கும், சிதம்பரத்துக்கும், வாழப்பாடிக்கும், இளங்கோவனுக்கும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஆசையும் நம்பிக்கையும் இருந்ததுண்டு. அந்த வெற்றிடத்தை இன்னும் பத்தாண்டுகள் கழித்தாவது தான்தான் நிரப்பப்போவதாக பி.ஜே.பி இன்னமும் நம்பிக்கையோடு இருக்கிறது. ரஜினிகாந்த் உதவியுடன் இந்த ஆசைகளை சாதித்துவிட முடியுமென்று காங்கிரசின் சிதம்பரமும், பி.ஜே.பியின் சோவும் நம்பி வந்தார்கள். ரஜினி அரசியல் சக்தி அல்ல என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் விஜய்காந்த்தை பி.ஜே.பியோ, பி.ஜெ.பியை விஜய்காந்த்தோ பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு மிகக் குறைவு. சோவும் சங்கர மடமும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட முன்வந்தால் கூட விஜய்காந்த்


(தொடர்ச்சி 28ம் பக்கம்)

- ஞாநி -

# விஜயகாந்த்...

(27ம் பக்க தொடர்ச்சி)

உடன்படும் வாய்ப்பு குறைவுதான். (ரஜினியும் விஜய்காந்த்தும் சேர்ந்து ஒரு கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்று சில வருடங்கள் முன்பு ஜயேந்திரர் தன் விருப்பத்தை



வெளிப்படுத்தியது நினைவிருக்கலாம்.)

காங்கிரஸ் சார்பு, உணர்வு உடையவரான விஜய்காந்த்தை காங்கிரஸ் பயன்படுத்திக் கொள்ளுமா என்பதே எஞ்சியிருக்கும் கேள்வி. ரஜினிகாந்த்துக்கு பதில் புவர் ப்ரொடியூசரின் ரஜினியாக விளங்கிய விஜய்காந்த், தமிழக அரசியலிலும் 'புவர் ப்ரொட்யூசராக' இருக்கும் காங்கிரசின் ரஜினியாகத் திகழ கணிசமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் தான் 'கிங்' ஆகவேண்டாம். 'கிங் மேக்கராக' இருந்தாலே போதுமானது என்ற கருத்து விஜய்காந்த்துக்கு இருந்தால் மட்டுமே இது சாத்தியம். (ஏனென்றால் ஏற்கனவே காங்கிரசில் ஏராளமான 'கிங்குகளும் ஜோக்கர்களும்' இருக்கிறார்கள்.) அவரை தற்போது கடுமையாகக் எதிர்க்கும் பா.ம.க நிறுவனர் ராமதாசின் வழியை அவர் பின்பற்றலாம். தான் எந்தப் பதவியிலும் அமராமலே, சர்வ வல்லமையுடன் அதிகாரம் செலுத்தும் வழி இது.

விஜய்காந்த்துக்கு அரசியல் அபிலாஷைகள் நிஜமாகவே இருக்குமானால், அவருக்குள்ள ஒரேவழி, தி.மு.கவுக்கும் அ.தி.மு.கவுக்கும் மாற்றாக காங்கிரசை தமிழ் நாட்டில் வளர்ப்பது ஒன்றுதான். இதை நிச்சயம் அவர் காங்கிரசில் சேர்ந்து செய்ய முடியாது. மாற்று அரசியலுக்கான தனி இயக்கமாக தன் இயக்கத்தை வளர்த்துவிட்டு, தேர்தல் சமயத்தில் காங்கிரசுடன் உடன்பாட்டுக்குச் செல்வதுதான் சிறந்த வழி. தற்போது தி.மு.க கூட்டணியில் இருக்கும் காங்கிரசுக்கும் உடனடியாக விஜய்காந்த்துடன் உறவு கொள்ள இயலாது என்பதால், அதுவே உகந்தது.

ஆனால் தி.மு.க, அ.தி.மு.க, பா.ம.க இவற்றுக்கெல்லாம் மாற்று அணியை விஜய்காந்த் உருவாக்க வேண்டுமானால், அதற்கு இப்போதைக்கு அவருக்குள்ள ஒரே பலம் அவருடைய சினிமா பாப்புலாரிட்டியும் ரசிகர் மன்ற அமைப்பும்தான். இது கணிசமான பலம் என்றாலும் இது போதாது. தலித் அமைப்புகளையும் கட்சிகளையும், இடதுசாரிக் கட்சிகளையும், சிறுபான்மையினர் அமைப்புகளையும், மிக முக்கியமாக பெண் வாக்காளர்களின் நம்பிக்கையையும் திரட்டினால் மட்டுமே இது சாத்தியம்.

நடிகர் சங்கத்தின் நிர்வாகத்தில் பெற்ற அனுபவம் இதற்கெல்லாம் விஜய்காந்த்துக்கு உதவலாம். ஆனால் மக்கள் நம்பிக்கையைப் பெறுவது என்பது அவ்வளவு எளிதானது அல்ல. அதற்கு தன் அரசியல் பார்வை என்ன என்பதை தெளிவாக பகிரங்கப்படுத்த வேண்டும். இப்போதைக்கு விஜய்காந்த் வெளிப்படுத்தியிருப்பதெல்லாம் இலாகா விவகாரத்தில் தி.மு.க காட்டிய பேராசைப் போராட்டம் பற்றியும் பா.ம.க வின் பின்கதவுப் பதவி அரசியல் பற்றியுமான விமர்சனம் மட்டும்தான். அ.தி.மு.க பற்றிய மௌனம், விஜய்காந்த் – பா.ம.க மோதலுக்குப் பின்னால் அ.தி.மு.க சக்திகள் இருக்கின்றனவோ என்ற சந்தேகத்துக்கு இடமளித்துள்ளது. இந்த சந்தேகம் உண்மையானால், விஜய்காந்த் அரசியலில் எஸ்.எஸ்.சந்திரனை விட அதிக உச்சங்களை அடையும் வாய்ப்பு கிடையாது. இன்னொரு ராதாரவியாகி விடுவார். மூன்றாவது அணிதான் விஜய்காந்த்தின் நிஜமான அரசியல் ஆசை என்றால், நிச்சயம் அவர் ரஜினிகாந்த் கதியை அடைய மாட்டார். எம்.ஜி.ஆர் போல முதல்வர் ஆக முடியாவிட்டாலும், தி.மு.கவில் அண்ணா காலத்து எம்.ஜி.ஆர் போல காங்கிரசுக்கு விஜய்காந்த் விளங்கும் வாய்ப்பு நிச்சயம் இருக்கிறது.


சட்டம் ஓர் இருட்டறை என்பது விஜய்காந்த்தின் முதல் வெற்றிப்படம். அரசியலும் ஓர் இருட்டறைதான். அதில் மக்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றல்தான் அரசியல்வாதியின் கையில் இருக்கும் விளக்கு. மக்களின் முட்டாள்தனங்களைப் புரிந்துகொண்டு ஏமாற்றும் ஆற்றல்தான் அரசியல்வாதியின் கையில் இருக்க வேண்டிய விளக்கு என்று நினைக்கும் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். தான் எப்படிப்பட்ட அரசியல்வாதியாக இருக்க விரும்புகிறார் என்று பாத்திரத் தேர்வை செய்ய வேண்டிய தருணம் விஜய்காந்த்துக்கு வந்திருக்கிறது.

நன்றி - தீம்தரிகிட

## வாரபலன்
## சிறீலங்கா அரசு

உங்கள் ஜென்மராசியில்
பகைக்குணம் கொண்ட
பாவக்கிரகங்களான ஜே.வி.பியும் -
ஈ.பி.டி.பியும்
கூட்டுச் சேர்ந்திருப்பது சிக்கலுக்கு மேல் சிக்கலை உண்டாக்கும்.
இரண்டு கிரகங்களுமே
தங்கள் நலன்களுக்காக உங்களை படாதபாடு படுத்துவார்கள்.
கருணாண்டியார் விடையம் கிணறுவெட்டப் பூதம் வெளிக்கிட்ட கதையாக
உங்களை பெரிய இக்கட்டில் மாட்டிக் கொண்டே இருக்கும்.
சங்கப் பரிவாரங்கள் கருனாண்டியாரை வைத்துப் பிழைப்பு நடத்த வெளிக்கிட்டு
விட்டார்கள். பெரிய அம்மணியின் தந்தையாரை பரலோகம் அனுப்பிய
கச்சாமிகளையிட்டு அம்மணியாரும் கவனமாயிருக்க வேண்டும்.
அந்தக் காவியுடைகளை அட்டமத்து சனி பிடித்தவிட்டது. சண்டை என்டால்
ஏதோ பன்சலையில இருந்த பிரித் ஓதுகிற மாதிரி என்று நினைக்கிறார்கள்.
புலித் தாயத்து கட்டினால் எல்லாம் சரியாப் போயிடும்.
புலீஸ்வர மான்மியம் என்ற காவியத்தை ஒரு முறை படித்துப் பார்க்கச்
சொல்லுங்கள். நீங்களும் படித்தால் பழசை மறக்காமல் இருக்கும்.

**- திருஞான சாஸ்திரிகள்**



# இணைய வலம்

## கடி ஜோக்ஸ்

`நாதஸ்வர வித்துவானுக்கும் டாக்டருக்கும் சின்ன வித்தியாசம்தான்... எப்படி?'
`இவர் பீப்பியை சோதிச்சுப் பார்ப்பாரு.. அவர் வி.பி.யை (B.P இரத்த அழுத்தம்) சோதிச்சுப் பார்ப்பாரு...'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`உங்க படத்துல 'டிஜிட்டல் சவுண்ட்' ரொம்ப பயங்கரமா இருக்குது...'
`ஆமாம்! 'தியேட்டர்ல' தூங்கவே முடியலைனா பாருங்க...'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`எங்க தாத்தாவின் 'பைனான்ஸில்' இனிமேல் தைரியமாகப் பணம் போடலாம்..'
`எப்படி?'
`இனிமேல் அவரால் ஓட முடியாதே!'

அடைந்திருக்கீங்களே!
உங்களுக்கு முறைப்படி இதைக் கத்துக்கொடுத்தது யாரு?'
`என் மனைவி தான்'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`டாக்டர்.. என்னவோ தெரியல... முன்னெல்லாம் வெயில்ல போய்ட்டு வந்தா பேச்சே வராது. இப்பல்லாம் என்டான்னா துண்டு துண்டா பேச வருது!'
`வேற ஒண்ணுமில்ல... அப்போ ஊமை வெயில்.. இப்ப கத்தரி வெயில்!'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`அந்த நடிகருக்கு மாதா மாதம் ஒரு லட்சம் சம்பளமா ரசிகர்களே வசூலித்துத் தர்றாங்களாம்!'
`ஏன்?'
`திருப்பியும் நடிக்க வந்து எங்க மானத்தை வாங்காதீங்கன்னுதான்!'

**`அம்மா தாயி.. பிச்சை போடுங்க. நான் ஒரு அனாதை. என்னைப் பற்றி முழு விவரம் தெரிஞ்சுக்க டபள்யூ டபள்யூ.... டாட் பிச்சைக்காரன் டாட் கொமில் பார்த்து தெரிஞ்சுகிட்டு பிச்சை போடுங்க தாயி.'**

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`போன வருசம்தான் நடிக்க வந்தாரு!'
`அதுக்குள்ள ஏன் வாழ்நாள் சாதனை விருது தர்றாங்க?'
`இனிமே நீங்க நடிக்க வேண்டாம்னுதான்!'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`குவார்ட்டர் குப்புசாமியை ஆஃப் ஆறுமுகம் கொலை செஞ்ச வழக்கு என்ன ஆச்சு?'
`ஃபுல் பெஞ்ச்ல விசாரிக்கிறாங்களாம்!'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`ஹலோ வணக்கம்... நான் `சம்மந்தம்' பேசுறேன்
`ஃபோனில் சம்மந்தம் பேசுவது நல்லாயிருக்காது. நேரில் வாங்க பேசிக்கலாம்!'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`இந்த மூலையில் குப்பை எதுவும் வச்சிருக்கக் கூடாதுங்க!'
`இதெல்லாம் நான் எழுதின கதைகள் ஜோசியரே!'
`அதான் வேணாம்' கறேன்!

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`கபாலி ஏன் சாராயம் பயங்கர கசப்பா இருக்கு?'
`பொலிஸ், சாராயம் காய்ச்சக் கூடாது'னு சொல்லிட்டாங்க. அதான் பச்சையா கொடுக்கிறேன்'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`உன் கணவர் எதுக்கு ஒபீஸ் போகிறப்போ வாழைப்பழம் எடுத்துக்கிட்டு போறாரு?'
`டாக்டர்தான் அவரை படுக்கப் போறதுக்கு முன்னாடி வாழைப்பழம் சாப்பிடச் சொல்லி இருக்காரு'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`காதலரைக் கைவிடுறியே... ஏன்?'
`அவர் 'பர்ஸ்ல' நான் கைவிட மறுக்கறார்!'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

'ஸ்டண்ட்' அமைப்பதில் சர்வதேச அளவில் புகழ்

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`நீங்க நிறைய இடியாப்பம் சாப்பிடுவீங்களா?'
`ஆமாம் டாக்டர்! எப்படிக் கண்டுபிடிச்சீங்க?'
`உங்க குடல்ல ஏகப்பட்ட சிக்கல் இருக்குதே...'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`படப்பிடிப்பு முடிஞ்சதும் ரெண்டு பூசணிக்காய் உடைக்கறாங்களே... எதுக்கு?'
`மற்றது திருட்டு வி.சி.டி.க்கு!'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`மாசக் கடைசியானா என் கணவர் கட்டின பெண்டாட்டின்று கூடப் பார்க்காம கை நீட்டுவாரு...'
`அடப் பாவமே உன்னை அடிப்பாரா?'
`நீ வேற, மாசக் கடைசியானா அஞ்சு பத்துக்கு என்கிட்டே கை நீட்டுவாருன்னு சொன்னேன்.'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`என்னய்யா அநியாயம், டைட்டில் முடிந்த உடனே வணக்கம் போட்டுட்டாங்க!'
`மீதியெல்லாம் சென்சார்ல கட் பண்ணிட்டாங்களாம்!'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`மன்னர் எதற்கு துரு எடுக்கும் எண்ணெய் கேட்கிறார்?'
`உறையிலிருந்து வாளை பிரிக்கவாம்!'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`சே! ஏன்தான் `பார்க்கிங் இலவசம்'னு அறிவிச்சாங்கன்னே தெரியலே!'
`ஏன்?'
`பெங்களூரிலிருந்து ஒருத்தன் தினம் இங்கே வந்து பார்க் பண்ணிட்டுப் போறான்யா!'

☯ ☯ ☯ ☯ ☯ ☯

`தலைவிரிச்சாடுது வறுமை, பார்த்து பல வருசமாச்சு பசுமை, எங்கே இருக்குது குளுமை? இதுதான் இந்த ஆட்சியின் கொடுமை!
டேய்.. யார்றா குறுக்கால விட்டது எருமை?'
`தலைவர் டி.ஆரோட பரம ரசிகர்!'

# இடைக்கால நிர்வாகம்பற்றி பேசமுடியாது ஜேவிபி சந்திரிகாவுக்கு நிபந்தனை

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டால் அதில் தாம் குறுக்கிடுவோம் என ஜே.வி.பி அறிவித்துள்ளது. இறுதித் தீர்வு குறித்துப் பேசுவதற்கு முன்னர் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேசுவதற்கு அரசாங்கத்துக்கு எதுவித உரிமையும் இல்லையென கொழும்பு ஆங்கில நாளேடொன்றுக்கு ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் டில்வின் சில்வா கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளின் பேரில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேசிய பின்னரே, இறுதித் தீர்வு குறித்துப் பேசுவதற்கு சிறீலங்காவின் அரசுத்தலைவர் முடிவெடுத்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பத்திரிகைகளில் வெளியாகும் இத்தகைய செய்திகள் அரசுத் தலைவரினதோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினதோ உத்தியோகபூர்வமான கருத்துக்கள் அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார். இச்சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இன்னமும் உத்தியோகபூர்வமான முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை எனவும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

## `கருணா எங்கே? யாம் அறியோம் பராபரமே!!

### புதிய இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட கூறுகிறார்



`விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற கருணா இந்தத் தருணத்தில் எங்கே என்பது எனக்குத் தெரியாது, நான் உங்களுக்கு சொல்வது மிகவும் உண்மை'. (I am telling you the Gospel Truth) என்று புதிய சிறீலங்காவின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை காலை இடம்பெற்ற பதவியேற்பு வைபவத்தின் பின்பு செய்தியாளர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த புதிய தளபதி, கருணா விவகாரத்தில் இராணுவத் தரப்புக்கு சம்பந்தமில்லை என்று மறுத்தார். ஆனால், கருணா தரப்புக்கு இராணுவம் உதவுகின்றது என்று விடுதலைப் புலிகள் நம்பினால், ஸ்தம்பிதமடைந்திருக்கும் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் நடவடிக்கைக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் லெப்டினன்ட் ஜெனரல் கொட்டேகொட கூறினார்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்ட பிளவு சமாதான நடவடிக்கைகளை மிகவும் கடினமாக்கப் போகின்றது. இந்த மாதிரியான நடவடிக்கைகளில் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளது என்று விடுதலைப் புலிகள் கருதுவார்களேயானால் இதுகாலவரையும் நாம் மேற்கொண்ட நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குழம்பி விடும். எங்களுக்குத் தெரியாமல் இந்த (கருணா) விவகாரத்தில் இராணுவம் சம்பந்தப்பட்டிருக்குமானால் நிச்சயமாக அது பிழையான விடயம். எதிர்காலத்தில் இந்த மாதிரியான விடயங்கள் இடம்பெறாமலிருப்பதை நான் உறுதிப்படுத்துவேன் என்றும் சாந்த கொட்டேகொட கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாட்டை மேற்கொள்ளப் போவதாகவும் புதிய தளபதி உறுதியளித்தார். விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பணியில் முழுமையாக ஈடுபடப்போவதாக கூறிய அவர், சமாதான நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் கீழ் மட்டத்தில் இடம்பெறும் சம்பவங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு இராணுவமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்துவது மிகவும் முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார்.

## தமிழீழ நீதிமன்றங்களினால் 24,000 வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளன

தமிழீழ நீதிமன்றங்களினால் இதுவரையில் 24,000 வழக்குகள் விசாரிக்கப்பட்டுத் தீர்வுகள் காணப்பட்டுள்ளதாக தமிழீழ நீதித்துறைப் பொறுப்பாளர் இளையதம்பி பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார். இதுவரையில் நான்கு பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


கிளிநொச்சி நீதித்துறைத் தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தகவல்களை வெளியிட்ட நீதித்துறைப் பொறுப்பாளர், தமிழீழ நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படுகின்ற சட்டங்கள் விடுதலைப் புலிகளினால் இயற்றப்பட்டுள்ள அதேவேளை, இச்சட்டங்கள் 'பீனல் கோர்ட்' சட்டங்களை ஒத்தவை என்றும் தெரிவித்தார். சிங்கள மக்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் போது, மொழி பெயர்ப்புச் சேவை இந்த நீதிமன்றங்களில் இருந்து வருவதாகவும், இந்த நீதிமன்றங்களில் வாதிடும் நீதியாளர்கள் நாளொன்றுக்கு ஆகக்கூடிய தொகையாக 200 ரூபாவை மட்டுமே அறவிடலாம் எனவும் நீதித்துறை கட்டுப்பாடு விதித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## சிறீலங்காவின் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சிறீலங்காவின் சபாநாயகர் லொக்கு பண்டாரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையினை நாடாளுமன்றத்தில் சமரப்பிக்கவுள்ளதாக அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நீதிமன்றத்தின் அனுமதியையும் மீறி ஜாதிக ஹெல உறுமயவின் அக்கீமன தயாரட்ன தேரரை நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமானம் செய்வதற்கு சபாநாயகர் லொக்கு பண்டார அனுமதி வழங்கியதன் மூலம் நீதிமன்றின் ஆணையை சபாநாயகர் அவமதித்துள்ளதோடு, நாடாளுமன்றத்தையும் அவர் முறையாக நடத்தவில்லை எனவும் அனுரா பண்டாரநாயக்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 20ம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடரின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கவுள்ளதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## எழிலனின் முறைப்பாடு குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணை



திருகோணமலை மாவட்டத்தின் வடக்கே புல்மோட்டைக் கிராமத்துக்கு அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காகச் சென்ற விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனை, யான்ஓயாப் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர். தங்களின் துணையுடன் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று படையினர் வற்புறுத்தியதை அடுத்து, அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தனது புல்மோட்டைப் பயணத்தை இடையில் நிறுத்திக் கொண்டு திருகோணமலை நகருக்குத் திரும்பிய சம்பவம் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலைத் தலைவரிடம் எழிலன் இச்சம்பவம் தொடர்பாக முறையிட்டார். தாம் அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கு இராணுவத்தினர் தடையாக இருந்தது குறித்து விசாரணை நடத்தும்படியும் எழிலன் கண்காணிப்புக் குழுவைக் கேட்டுள்ளார். புல்மோட்டைக் கிராமத்தில் உள்ள முஸ்லிம் அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க எனது பயணத்தை மேற்கொண்டேன். யான் ஓயாவைத் தாண்டியதும் இராணுவத்தினர் மறித்து விசாரணை செய்தனர். அரசியல் பணியை மேற்கொள்வதற்கு அக்கிராம மக்களின் வேண்டுகோளின்மீது செல்கின்றேன் என்று படையினருக்குக் கூறினேன். போக அனுமதிக்க முடியாது என்று படையினர் தடுத்தனர். காலை 11.30 மணியளவில் படையினருக்கும் எமக்கும் இடையில் இது சம்பந்தமாக இழுபறி நிலவியது. பின்னர் படையினர், தங்களின் உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டனர். அதன்பின்னர், தமது வழித்துணையுடன் புல்மோட்டை செல்ல அனுமதிப்பதாக இராணுவத்தினர் எம்மிடம் தெரிவித்தனர். அரசியல் பணியை மேற்கொள்ளச் செல்லும் எமக்குப் படையினரின் வழித்துணை எதற்கும் தேவையில்லை என்று கூறினோம். தொடர்ந்தும் படையினர் தமது நிலையைத் தளர்த்தாது இருக்கவே, புல்மோட்டைப் பயணத்தை இடை நடுவில் கைவிட்டு திருகோணமலை திரும்ப வேண்டியதாயிற்று என்று எழிலன் தெரிவித்தார்.எழிலன் பின்னர் இது தொடர்பாக செய்த முறைப்பாடு குறித்து, திருகோணமலையிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை நடத்துவதாகத் தெரிய வருகின்றது.

NIGHT TRAVEL நைற் ட்ரவல்ஸ்
உங்கள் விமானப் பயணத் தேவைகளை சிறந்த தரத்துடன் இலகுவாக ஆக்கிக்கொள்ள எங்களை நாடுங்கள். தரமான விலை, சிறந்த சேவை, நிறைந்த பயன் போன்றவற்றோடு இரவுநேர ஆசனப் பதிவுகளை 21.00 மணி தொடக்கம் 01.00 மணிவரை வாரத்தில் 7 நாட்களும் தொலைபேசியில் செய்து கொள்ளலாம்.
எங்கள் ஆரம்பத்தை முன்னிட்டு எயர் லங்கா விமானத்தில் கொழும்பு சென்றுவர 970 பிராங்குகள் மட்டுமே
தொடர்புகளுக்கு: 031-302 53 37, 079 - 546 45 20 e-mail:nighttravel@hispeed.ch

# கருணா கொழும்பை வேவு பார்க்க வந்திருக்கிறர்
# ஹெல உறுமய கூறுகிறது

(05.07.04)

கருணாவின் சண்டை போலியானது. கருணா கொழும்புப் பகுதியைத் தற்போது வேவுபார்த்து வருகிறார். பின்னர் இது பற்றி தனது தலைவர் பிரபாகரனுக்குத் தகவல் கொடுப்பார். அதன் பின்னர் இருவரும் ஒன்றாக இணைந்து கொள்வார்கள். இதுதான் யதார்த்தம் என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் கடந்த 28ம் திகதி திங்கட்கிழமை மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், கருணா- பிரபா மோதல் ஒரு அரசியல் பின்னணியாகும். இதையிட்டு மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. இன்று அரசும் எதிர்க்கட்சியினரும் பிரபாகரனைத் தெய்வம் என நினைத்து வணங்கிக் கொண்டிருக்கின்றனர். அதேபோல், நாட்டை அடிமையாக்குவதற்கும், செயற்பட்டு வருகின்றனர். இதுவும், `மிலேனியம் சிட்டியை' அடிமையாக்கியதைப் போன்ற செயலாகும்.

இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகள் எவருக்கும் நாட்டின் மீது பற்றோ, பாசமோ கிடையாது. மாறாக, அராஜகத்தை ஏற்படுத்துவதே அவர்களின் ஒரே குறிக்கோளாகவுள்ளது. இன்று புலிகளுக்கு இருக்கும் ஒரே தலையிடி தேசிய ஹெல உறுமயவாகும். எனவே, எம்மை அழித்தொழிப்பதற்கு புலிகள் பல திட்டங்களைத் தீட்டிவருவதை நாம் அறிவோம். முதுகெலும்பற்றோர் ஆட்சி செய்யும் போது, நாடு அழிவதைத் தடுக்க முடியாது. தென்னிலங்கை மக்கள் கட்சி அரசியலைத் துறந்து முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து நாட்டைக் காப்பாற்ற முன்வர வேண்டுமென்றார்.

அங்கு பேசிய அத்துருலிய ரத்ன தேரர் தனதுரையில், இன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எமது ஆதரவைக் கோரி நிற்கின்றது. நீதியாக செயற்பாட்டால் மாத்திரமே அரசுக்கு நாம் ஆதரவு வழங்குவோம். எதிர்காலத்தில் எவரும் வெற்றி அடையக் கூடியவாறு செயற்படமாட்டோம். இந்த நாட்டையும் மக்களையும் வெற்றி பெறச் செய்யவே பாடுபடுவோம். மக்களைக் கஷ்டத்துக்குள்ளாக்கும் வரவு செலவுத்திட்டத்தை அரசு சமர்ப்பித்தால், அதை நாம் தோற்கடிப்போம். சுமங்கல தேரரைத் தாக்கியமையை இன்றும் கூட அரசு நிராகரிக்கிறது. ஆனால், அவர் தாக்கப்பட்டதால் உட்காயம் ஏற்பட்டிருப்பதாக வைத்திய அறிக்கை தெரிவிக்கின்றது.

அடாவடித்தனத்தால் எமது ஒத்துழைப்பை யாரும் பெற்று விட முடியாது. சிங்கள மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டத்திற்கு ஆதரவு அளித்தால் மாத்திரமே நாம் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்று கூறினார்.

## சிறீலங்கா எயார் லைன்ஸ் பணியாளர்கள் பணிமுடக்க போராட்ட எச்சரிக்கை

(04.07.04)

சிறீலங்கன் எயார் லைன்ஸ் விமானச் சேவையின் விமானப் பொறியியலாளர்களும், அதன் உள்ளகப் பணியாளர்களும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். சிறீலங்கா விமானச் சேவையின் பணி நிறுத்தப்பட்ட பணியாளர்களை மீளவும் சேர்த்துக் கொள்ளுமாறு கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக சிறீலங்கா எயார் லைன்ஸ் விமானச் சேவையின் விமானப் பொறியியலாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.


பணிநிறுத்தப்பட்ட தொழிலாளர்களை மீளவும் பணியில் இணைத்துக் கொள்ளுமாறு தொழிலாளர் ஆணையாளரினால் அறிவுறுத்தப்பட்ட கோரிக்கையினை தமது முகாமைத்துவம் தொடர்ந்தும் அலட்சியம் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே கோரிக்கையினை முன்வைத்து தம்மால் முன்னர் நடத்தப்பட்ட போராட்டங்கள் தொடர்பாக விமானச் சேவையின் முகாமைத்துவப் பீடம் உரிய கவனம் செலுத்தத் தவறியமை காரணமாகவே, போராட்டத்தை மேலும் கடுமையாக்குவதற்குத் தாம் முடிவெடுத்துள்ளதாகவும் தமது போராட்டம் தொடரும் பட்சத்தில் சிறீலங்கன் எயார் லைன்ஸ் விமானசேவையின் பணிகள் முடங்கிப்போகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சூல்ஹைம் டில்லி செல்லவில்லை
# கொழும்பிலேயே நிருபம் சென்னைச் சந்தித்தார்

(03.05.2004)

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹைம் கடந்த



கொழும்பில் இடம்பெற்ற நிழற்படக் கண்காட்சியைப் பார்வையிடுகிறார் எரிக் சூல்ஹைம்.

வியாழக்கிழமை பிற்பகல் சிறீலங்காவுக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்னுக்கு விளக்கமளித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை மாலை கொழும்பு சென்ற சூல்ஹைம் அங்கு அரச, எதிர்க் கட்சித் தலைவர்களையும், விடுதலைப் புலிகளையும் சந்தித்துப் பேசியிருந்தார்.

வழமையாக, இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் நோர்வே அனுசரணையாளர்கள், தங்கள் சந்திப்புகளை முடித்துக் கொண்டு நாடு திரும்பாது புதுடில்லி சென்று இந்தியத் தலைவர்களைச் சந்திப்பர். எனினும், இம்முறை அவர் இந்தியா செல்லாது, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நிருபம் சென்னைச் சந்தித்துப் பேச்சுகள் தொடர்பாக விளக்கமளித்துள்ளார். இம்முறையும் இவரது விடயத்தில் எதுவித பலனும் ஏற்படவில்லை. இந்த நிலையில் மீண்டும் விரைவில் சொல்ஹெம் இங்கு வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சந்திப்புகள் தொடர்பாகவே வியாழக்கிழமை பிற்பகல் இந்தியத் தூதுவரை அவரது அலுவலகத்தில் சந்தித்து விளக்கமளித்துள்ளார்.

## பாகிஸ்தான் அரசுத்தலைவர் பர்வேஸ் முஸாரப் சிறீலங்காவுக்கு செல்லவுள்ளார்

பாகிஸ்தான் அரசுத்தலைவர் பர்வேஸ் முஸாரப் சிறீலங்காவுக்கு அரசமுறைப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 31ம் திகதியளவில் அவர் கொழும்புக்குச் செய்வாரென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் தங்கியிருக்கும் காலப்பகுதியில், சிறீலங்காவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான திறந்த வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் அவர் கைச்சாத்திடவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. சிறீலங்காவின் அரசுத்தலைவர் சந்திரிகா குமாரதுங்கா, தலைமை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஸ, அரச பிரமுகர்கள் மற்றும் எதிர்க்கட்சியின் பிரமுகர்கள் ஆகியோரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.


**Asha Video Movies**

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073**

Pub-Fr-39



ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78

Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்:
அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



Restaurant **Tharsana's**

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

**தர்ஷனாஸ் உணவகம்**
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

**தர்ஷனா & பிரஷா உணவகங்கள்**
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

Restaurant **Prassah**
Gastronomiques Indiennes

**பிரஷா உணவகம்**
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

# தாயக மீட்பில் ஆகுதியான கரும்புலிகள் நினைவாக தாயகம் எங்கும் வீரவணக்க நிகழ்வுகள்

(05.07.2004)

தாயக மீட்புப் போரில் தடைகளை அகற்ற தங்களை ஆகுதியாக்கிய கரும் புலிகளுக்கான வீரவணக்க நிகழ்வு இன்று தமிழர் தாயகத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் மற்றும் வன்னிப் பகுதிகளில் கரும்புலிகள் தினநிழ்வுகள் பரந்த அளவில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன. இம்முறையும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் பிரதேசங்களிலும் இத்தினம் எழுச்சியுடன் நினைவு கூரப்பட்டது.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு குடாநாடெங்கும் பதாகைகள், சிவப்பு - மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. சிரமதானங்கள் உட்பட பொதுச் சேவைகளில் பலரும் ஈடுபட்டுள்ளனர். பிரதான வீர வணக்க நிகழ்வுகள் யாழ். குடாநாட்டில் நெல்லியடி மற்றும் புங்குடுதீவு ஆகிய இரு இடங்களிலும் இடம்பெற்றுள்ளன.



இன்று மாலை 4.30 மணிக்கு முதற்கரும்புலி கப்டன் மில்லர் ஆகுதியான இடமான நெல்லியடி மத்திய கல்லூரி மில்லர் சதுக்கத்தில் கரும் புலிகள்தின பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன. நெல்லிடிச் சந்தியில் இருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கரும் புலிகளின் திருவுருவப்படங்கள் பான்ட்வாத்திய இசையுடன் நெல்லியடி மில்லர் சதுக்கத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியது. தீவுப் பகுதியில் புங்குடுதீவு பெருங்காட்டுச்சந்தி, கந்தசாமி கோவிலடியில் இன்று மாலை 4.30 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெற்றன. முன்னதாக புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முன்றலில் இருந்து கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் பாண்ட் வாத்திய இசையுடன் நிகழ்வு இடம்பெறும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. கரும்புலிகள் நாளையொட்டி யாழ். பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையால் சிரமதான நிகழ்வுகள் மேற் கொள்ளப்பட்டன.

1987ம் ஆண்டு யூலை 5ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த சிறீலங்கா இராணுவ முகாமை வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட ட்ரக்குடன் சென்று தாக்கி அழித்து தனது உயிரையும் ஈகம் செய்த முதல் கரும்புலி கப்டன் மில்லரின் நினைவாக இத்தினம் கரும்புலி நாளாக அனுஸ்டிக்கப் படுவது குறிப்பிடத்தக்கது.

## மட்டு. அம்பாறை மாவட்டங்களெங்கும் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன

மட்டு. அம்பாறை மாவட்டங்களில் கரும்புலிகள் நாள் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டுள்ளன. பிரதான நிகழ்வு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மட்டக்களப்பு பழுகாமம் பொது விளையாட்டு மைதானத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில் மட்டு. அம்பாறை மாவட்ட தளபதி ஏ.ராம், மட்டு. அம்பாறை அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன், மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி க.ரமணன் மற்றும் மட்டக்களப்பு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கவிதை, நடனங்கள், வில்லிசை மற்றும் தமிழீழ இசைக்குழுவின் எழுச்சி கானமும் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு நகரில் கரும்புலிகள் தின நிகழ்வுகள் மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளர் சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது. ஆண்டான்குளக் கோட்டத்திற்கான நிகழ்வுகள் ஆண்டான் குளக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெயா தலைமையில் கரும்புலிகள் நினைவுத்தூபி அமைந்துள்ள கதிரவெளியில் நடைபெற்றுள்ளது. அம்பாறை மாவட்டத்தில், அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் தலைமையில் ஆலையடி வேம்பு கலாசார மண்டபத்தில் பிற்பகல் 03.00 மணிக்கு கரும்புலிகள் எழுச்சி நாள் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இன்றுவரை கடலிலும், தரையிலும் 261 கரும்புலிகள் தமிழீழ மண் மீட்பிற்காக வீரச்சாவடைந்துள்ளனர்.

## கரும்புலிகள் நினைவு ஊர்தி குடாநாடெங்கும் பவனி

ஈழப்போராட்டத்தில் தம்முயிரை ஆகுதியாக்கிய கரும்புலி மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தி குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. ஊர்தி பவனி வரும் வீதிகளில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி நின்று கரும்புலிகளுக்கு தமது வீரவணக்கத்தை செலுத்தியுள்ளனர். கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தமிழீழ இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழா இடம்பெறும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து புறப்பட்ட ஊர்தி, மானிப்பாய் வீதி ஊடாக ஓட்டுமடம் சந்தி, ஆனைக்கோட்டை பள்ளங்காட்டுச்சந்தி உதயசூரியன் சனசமூக நிலையம் ஆகியவற்றில் தரித்துநின்று முற்பகல் 10.30 மணிக்கு மானிப்பாய் நகர், 10.45 மணிக்கு மருதடிச் சந்தி, 11மணிக்கு சீரணிச் சந்தி, 11.30 மணிக்கு சங்கானை நகர், 12மணிக்கு சித்தன்கேணி சந்தி, 12.15 மணிக்கு வடலியடைப்பு ஆகிய இடங்களுக்கு சென்றது.

அதைத்தொடர்ந்து பண்டத்தரிப்பு, தொட்டிலடி, மாகியப்பிட்டி, அளவெட்டி, தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம், உரும்பிராய், கோண்டாவில், கோப்பாய், புத்தூர், அச்சுவேலி ஆகிய இடங்களுக்கும் ஊர்தி சென்றது. இன்று காலை 8 மணிக்கு அந்த ஊர்தி கைதடிச் சந்தி, சாவகச்சேரிச் சந்தி, கொடிகாமம், வரணி ஊடாக முதல் கரும்புலி மில்லர் தன்னை ஆகுதியாக்கிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வளாகத்தைச் சென்றடைந்தது.

## கரும்புலிகள் நினைவாக புளியந்தீவு மாணவரிடையே கவிதைப் போட்டி

கரும்புலிகள் நினைவுநாளை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் புளியந்தீவுக் கோட்ட அரசியல்துறையினர் பாடசாலை மாணவர்களிடையே நடாத்திய கவிதைப் போட்டி கடந்த வெள்ளிக் கிழமை மட்டக்களப்பு. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஈகைச்சுடரினை கல்லூரி முதல்வர் மற்றும் போராளி சுரேந்திரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். பின்னர் மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதிராசா உரையாற்றினார்.



இப்போட்டியில் கனிஷ்ட பிரிவில் வின்சட் தேசிய பாடசாலை முதலாமிடத்தையும், மகஜனக் கல்லூரி, சிவானந்தா தேசிய பாடசாலை இரண்டாம் இடத்தினையும் மட். விக்கினேஸ்வரா வித்தியாலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றன.

உயர் தரப்பிரிவில் சிவானந்தா தேசிய பாடசாலை முதலாம், மூன்றாம் இடத்தினையும், ஆரையம்பதி தேசிய பாடசாலை இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன.





விசேட விலைக் கழிவு

RHYTHM

Website
rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்
☒ வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
☒ SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
☒ கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வாங்குதல்
☒ நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்
முழு அளவிலான இலவச
ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# கருணா விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும்வரை சமாதான முன்னெடுப்பில் பங்கேற்கப்பதில்லை

## – விடுதலைப் புலிகள் –

(05.07.04)

சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக அரசாங்கம் நம்பிக்கையுடனும், நேர்மையுடனும் செயற்படவில்லை என்ற கடுமையான குற்றச்சாட்டை நோர்வே அனுசரணை



யாளரிடம் தெரிவித்திருக்கும் விடுதலைப் புலிகள் தமது அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும்வரை சமாதான நடவடிக்கைகளைத் தொடர முடியாது என்று அறிவித்துள்ளனர். நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சூல்ஹெய்ம் கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோதே, சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பது தொடர்பான தங்களது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் அவரிடம் தெளிவுபடுத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சூல்ஹெய்முடன், சிறீலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்காரும் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக சுப.தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர்களுடன் பேசுகையில், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நடைபெறும் சம்பவங்கள் குறித்தும் கருணாவுக்கு படையினர் அடைக்கலம் கொடுத்து குழப்பங்களை ஏற்படுத்தி வருவதையும் தெளிவுபடக் கூறியுள்ளோம். கருணாவுடன் இணைந்து கிழக்கில் படையினர் படுகொலைகளைச் செய்து வருவதுடன், மக்கள் அச்சமடையும் விதத்தில் குழப்பங்களையும் ஏற்படுத்துகின்றனர். இந்த நிலைமை தொடர்வதை அனுமதித்தால் அது போர் நிறுத்த உடன்பாட்டை மட்டுமன்றி முழுச் சமாதான முயற்சியையும் பாதித்துவிடும் என்பதையும் கூறியுள்ளோம். இந்நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டுமானால் கருணாவுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரவு வழங்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையேல் நிலைமை மேலும் மோசமடையும். புதிதாக அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த நெருக்கடி நிலைக்கு அவர்களே தீர்வு காண வேண்டும். இதில் எமது நிலைப்பாடு என்ன என்பது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரூடாகவும், எரிக் சூல்ஹெய்மூடாகவும் அரசுத் தலைவருக்கும், அரசுக்கும் உறுதியாகவும், தெளிவாகவும் கூறியுள்ளோம். தற்போதைய நிலையில் இந்த அரசின் நடவடிக்கைகள் மீது எமக்குள்ள அதிருப்தியை நோர்வே அனுசரணையாளர்களிடம் வெளிப்படுத்தியுள்ளோம். எமது இந்த நிலைப்பாட்டை அவர் அரச தரப்பினருக்குக் கூறுவார்.

இதே நேரம் மீண்டும் மிக விரைவில் சூல்ஹெய்ம் எம்மைச் சந்தித்துப் பேசவருவார். இதே நேரம் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்த எமது நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே பல தடவைகள் தெளிவுபடுத்தியுள்ளோம். அது குறித்து மீண்டும் இந்தச் சந்திப்பில் கூறியுள்ளோம். சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமானால், இடைக்கால நிர்வாகசபை குறித்துப் பேசத் தயாராகயிருப்பதாக அரசுத் தலைவர் கூறியதாக வரும் செய்திகள் குறித்து எமக்கு எதுவும் தெரியாது. இது பற்றி ஊடகங்களூடாகவே அறிந்து கொண்டோம். உத்தியோக பூர்வமான அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை.

இதேநேரம் எமது தாயகமான வடக்கு கிழக்கில் எவ்விதமான புனர்வாழ்வு, புனர் நிர்மாண மற்றும் அபிவிருத்தி நடவடிக்கையையும் மேற்கொள்வதாயின், அது இங்கு உருவாக்கப்படும் இடைக்கால நிர்வாக சபையூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். அரசின் எந்த அமைச்சுக்களூடாகவோ அல்லது அமைப்புகளூடாகவோ இவற்றை மேற்கொள்ளக் கூடாதென உதவி வழங்கும் நாடுகளுக்கு கூறியுள்ளோம். நோர்வே அனுசரணையாளர்களுக்கும் இதுபற்றி கூறியுள்ளோம். சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே உதவி வழங்கும் நாடுகளின் நிதியுதவி கிடைக்குமென அவை தெளிவாகக் கூறிவிட்டன. ஆனால், இந்த நிதி விரைவில் கிடைக்கப் போவதாக அரசு தரப்பில் கூறப்படுவதில் உண்மையெதுவுமில்லை எனவும் தெரிவித்தார்.

இதேநேரம் கருணாவை, முன்னாள் அமைச்சர் ரி.மகேஸ்வரனும் சந்தித்ததாக வெளியான செய்தி பற்றி கேட்டபோது, கருணாவை யார் யார் சந்தித்தார்கள் என்பது பற்றி ஊடகங்கள் ஊடாக பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. பலர், தாங்கள் உதவி செய்ததை ஒத்துக் கொள்கிறார்கள், சிலர் மறுக்கிறார்கள். இவ்வாறான, செய்திகளில் எது உண்மை, எது பொய் என்பது கருணாவுடன் சென்றுவிட்டு தற்போது மட்டக்களப்பிற்கு திரும்பியுள்ள நான்கு பெண் போராளிகளும் தெரிவிக்கும் தகவல்கள் மூலம் தெரியவரும். தற்போது அவர்களிடமிருந்து பல தகவல்களைப் பெற்று வருகின்றோம். அதன் மூலம் இவ்வாறானவர்கள் யார் என்பதை விரைவில் பகிரங்கமாக வெளிப்படுத்துவோம். சிலர் பற்றி வெளிப்படுத்தப்பட்டுமுள்ளன, என்றார்.

# அம்பாறை படை முகாம்களில் அமெரிக்க அதிகாரிகள் பயிற்சி!

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிறீலங்கா படைமுகாம்களில் சிவில் உடையில் வெளிநாட்டு அதிகாரிகள் வதிவிடப்பயிற்சி வழங்கி வருவதாகவும் இவ்வாறு பயிற்சிகள் வழங்கி வருவது அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகளே என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. போர் நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும் இக்காலச் சூழலில் அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் பயிற்சியளிப்பது தமிழ் மக்களிடையே கடும் பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை அண்மையில் அமெரிக்கா சிறிலங்கா அரசுக்கு போர்க் கப்பலை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை சில சிறீலங்கா படைமுகாம்களில் தமிழ் மக்களை படையினர் மறைந்திருந்து 'வீடியோ' படம் எடுப்பதாக பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். படைமுகாம்களுடாக செல்லும் பொதுமக்களை இவ்வாறு படையினர் மறைந்திருந்து இரகசியமாக ஒளி நாடாக்களில் பதிவு செய்வது மக்களை மேலும் அச்சமூட்டியுள்ளது. ஒருபுறம் சமாதானம் எனும் போர்வையுடன் மறுபுறம் போரியல் நிலைக்கு தங்களை தயார் படுத்துவது குறித்து தமிழ் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

Phone 2000 - Sonia restaurant ஆதரவில் ஆர்.ரி.எம். பிறதெர்ஸ் இன்ரநெஷனல் பெருமையுடன் வழங்கும்
15 வது கலைத்தென்றல்
'கீதம் சங்கீதம்'
'நகைச்சுவை விருந்து'
'பாட்டுக்கு பாட்டு'
கலைஞானிதன் பி.எச். அப்துல் ஹமீட் வழங்கும்
'பாட்டுக்கு பாட்டு'
இலங்கை வானொலி, தொலைக்காட்சி புகழ் பயஸ் - ரட்ணம் கலந்துகொள்ளும்
சுப்பர் சண் இசையில் இலை மறை காய்களாய் இருக்கும் பாடகர்களை
வெளிக்கொண்டுவரும் இனிய நிகழ்ச்சி
அவதாரணம்
மதி குழுவினரின்
மேலைத்தேய நடனம்
Espace Amorc
199 rue saint martin
75001 Paris
(Mo: Etienne marcel)
பாட்டுக்கு பாட்டு போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்ற விரும்புவோர்
15.07.2004 இற்கு முன் தொடர்புகொள்ளவும்.
மேலதிக தொடர்புகளுக்கு
Phone 2000 -01 40 05 03 43
Siva: 06 20 21 11 11
Nice Telecom: 01 40 37 63 68
ஸ்ரீ பாரதி அச்சகம்: 01 42 05 46 04
08.08. 2004 ஞாயிறு
மாலை 5.00 மணி